பாக். எதிர்ப்பு இந்தியாவின் அற்பத்தனம்

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

15 ஜனவரி 1995 ரூ.3.00




படிப்பகம்

www.padippakam.com

# சாதித் தீ வேண்டாம்! வர்க்கத் தீ மூட்டுவோம்!

பண்ருட்டி வட்டத்தில் உள்ள அங்குசெட்டிபாளையம், சிறுவத்தூர் ஆகிய கிராமங்களில் செட்டியார், கவுண்டர், படையாச்சி போன்ற மேல் சாதிக்காரர்களும் 'காலனி' பகுதிகளில் உள்ள 650 குடியிருப்புகளில் தாழ்த்தப்பட்ட மக்களும் வசிக்கிறார்கள். 1974-ல் சிறுவத்தூர் நிலப்பிரபு ராகவ கவுண்டர் தூண்டுதல் பேரில் அங்குச் செட்டிபாளையம் 'காலனி' பற்றி எரிந்தது. அன்று முதல் பண்ணையின் அடிமைத் தொழிலைக் கைவிட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் பலர் சுயமரியாதையுடன் செங்கல் சூளை, ''லாரி கம்பெனி'', அரசு அலுவலகங்கள் என பிற வேலைகளுக்கு மாறினார்கள். நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட இதனால் துணிவு பெற்றனர். கல்வி, பொருளாதார ரீதியாகவும் சிலர் முன்னேறினர்.

வருணாசிரம படிநிலையில் மேற்கண்ட 'சூத்தர' சாதிகள் பார்ப்பனருக்குக் கீழேயிருந்தாலும் தனக்கு கீழே உள்ள மக்கள் தமக்கு சமமாக நடப்பதா என்ற பார்ப்பனீய சிந்தனையில் வெறியுடன் உள்ளனர். பண்ருட்டி முகமதியர் ஒருவருக்குச் சொந்தமான லாரியில் ஓட்டுநராக இருக்கும் தங்கராசு (தாழ்த்தப்பட்டவர்), உதவியாளராக இருக்கும் ஏழுமலை (கவுண்டர்) இருவருக்கும் இடையில் லாரி தார்பாய் கிழிந்த விவகாரத்தில் சிறு சச்சரவு ஏற்பட்டது. சாதிவெறியனான ராகவ கவுண்டரின் குலக் கொழுந்து பன்னீர் செல்வம் மற்றும் தேவன் இருவரும் தாழ்த்தப் பட்டவர்கள் நம் சாதிப் பையனை கேள்வி கேட்பதா என ஊதிப் பெருக்கியதோடு ஓட்டுநரை மடக்கி தாக்கவும் செய்தனர். இதை தாழ்த்தப்பட்ட மக்கள் சிலர் எதிர்த்துக் கேட்டனர்.

சிறுவத்தூர் பண்ணையார் ராகவ கவுண்டரின் குலக் கொழுந்துகள் ராதா கிருஷ்ணன் (வக்கில், பண்ருட்டி), ராசேந்திரன், பன்னீர் செல்வம், சேகர் பண்ணையாரின் அண்ணன் வெங்கடேச கவுண்டர் மற்றும் கோவிந்த கவுண்டர், குப்பன் படையாச்சி, அய்யனார் போன்றவர்கள் தலைமையில் ஊர் பஞ்சாயத்து கூட்டம் நடந்தது. மறுநாள் (17-11-94) அங்குசெட்டிபாளையம் 'காலனி' மக்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்பதற்காக ஆள் திரட்டுவதற்காக வன்னியர்கள் அனைவரும் ஊரில் இருக்க வேண்டும் என்று கட்டுப்பாடு போட்டனர்.

அதிகாலை 5.30 மணிக்கு சுமார் 100 பேரைத் திரட்டிக் கொண்டு அங்கு செட்டிபாளையம் 'காலனி'க்குள் புகுந்து தாக்கியது, சாதிவெறிக் கும்பல். அந்நேரத்தில் உறக்கத்திலிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் திடீர் தாக்குதலால் செய்வதறியாது நிலைகுலைந்து போயினர். காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டு விரப்பட்டனர். வீடுகளும் விலையுயர்ந்த பொருட்களும் நகைகளும் சூறையாடப்பட்டன. செய்தியறிந்து போலீசு வந்தது. ஆனால் போலீசார் 10 பேரே இருந்தால் வேடிக்கைதான் பார்க்க முடிந்தது. போலீசாரையும் தாழ்த்தப்பட்ட மக்கள்தான் அடைக்கலம் கொடுத்து காப்பாற்றினர். சாதிவெறிக் கும்பல் புதுக்காலனிக்குள்ளும் புகுந்து வீடுகளுக்கு தீ வைத்ததும் பதற்றம் அதிகரித்தது. மீண்டும் காலனிக்குள் புகுந்து பல வீடுகளை கொளுத்தி வெறியாட்டம் போட்டனர். நிர்கதியாக நின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் கூட குடிக்க முடியாத வண்ணம் தண்ணீர் தொட்டியிலும் ''பாலிடால்'' விஷ மருந்தைக் கலந்து விட்டு சென்றது வெறிக்கும்பல்.

போலீசு அதிகாரி, துணை மாவட்ட ஆட்சியாளர் தாக்குதலை நேரடியாகப் பார்த்தும் சாதிவெறிக் கும்பல் கைது செய்யப்படவில்லை. ராகவ கவுண்டர் தலைமையிலான முக்கிய புள்ளிகளைத் தவிர்த்து ஒப்புக்கு சிலரை மட்டும் கைது செய்தது; பின் அவர்களையும் விடுவித்து சமாதான நடவடிக்கை என நாடகமாடியது, போலீசு. இரு பிரிவினரும் குற்றம் செய்ததாகவே அதிகார வர்க்கக் கும்பலின் அணுகுமுறை இருந்தது. தாழ்த்தப்பட்டோர் மேல்சாதி பெண்களை கிண்டல் செய்ததாக, சாதிவெறியர்களோடு போலீசும் சேர்ந்து கொண்டு வதந்தி பரப்பியது. அப்பாவி நாகராசன் (கால் ஊனமானவர்) என்பவரை சிறுவத்தூர் தண்ணீர் தொட்டியில் விஷம் கலக்க முயன்றதாக பொய் வழக்கு போட்டு சிறையிலடைத்தது, போலீசு கும்பல்.

தாழ்த்தப்பட்ட அமைப்புகள் குறிப்பாக ''தலித் சிறுத்தைகள்''(DPI) அமைப்பினர் மக்களுக்கு பொருளுதவி கிடைக்க ஏற்பாடு செய்ததோடு சாலை மறியல் போராட்டம் நடத்தி கண்டனம் தெரிவித்தனர். 28-11-94 அன்று கண்டனப் பேரணியும் பொதுக்கூட்டமும் நடத்தினர். ஓட்டுக் கட்சிகள் எதுவும் கண்டு கொள்ளவில்லை. மேல்சாதிக் காரர்களின் ஓட்டு போய்விடும் என்ற அச்சமே காரணம்.

பார்ப்பனீய சாதிச் சிந்தனையும் இதைப் பாதுகாக்கக் கூடிய நிலபிரபுத்துவ பொருளாதார கட்டுமானமும் தகறும் போதே சாதியக் கொடுமைகள் ஒழியும். இதைச் சாதிக்க சாதி வேறுபாடின்றி சிறுவத்தூர் மேல்சாதி கூலி - ஏழை விவசாயிகளும் தாழ்த்தப்பட்ட கூலி - ஏழை விவசாயிகளும் வர்க்கமாக ஒன்று திரள வேண்டும். சாதிவெறியர்களை தனிமைப்படுத்தி அக்கும்பலின் அடாவடித்தனத்திற்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும்.

— தகவல்:
தொழிலாளர் பிரச்சாரக் குழு,
நெய்வேலி

மேல்சாதிவெறியாட்டம்; தாழ்த்தப்பட்டவர்களின் குடிசைகள் தீக்கிரை





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

பத்தாம் ஆண்டு

**3 - 4**

16 டிச. '94 - 15 ஜன. '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.00
ஆண்டு சந்தா: ரூ. 72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

அட்டை ஓவியங்கள்: கரோ



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.


# ஆந்திரா, கர்நாடகா தேர்தல் முடிவுகள்: ஓநாய்களுக்குப் பதிலாக நரிகள்

அண்மையில் நடந்து முடிந்த ஆந்திரா, கர்நாடகா, சிக்கிம், கோவா சட்டமன்றத் தேர்தல்களில் இதுவரை காணாத பெருந்தோல்வியை காங்கிரசுக் கட்சி சந்தித்துள்ளது. தென்னிந்தியாவின் மிகப் பெரிய மாநிலமும், பிரதமர் நரசிம்மராவின் சொந்த மாநிலமுமான ஆந்திராவில் காங்கிரசுக் கட்சி படுதோல்வியடைந்து 292 தொகுதிகளில் வெறும் 25 இடங்களையே கைப்பற்றியுள்ளது. கவர்ச்சிவாத - பிராந்தியக் கட்சியான என்.டி.ஆரின் தெலுங்கு தேசக் கட்சி இதுவரை காணாத அளவுக்கு மிகப் பெரிய வெற்றியைச் சாதித்துள்ளது. கர்நாடகத்தில், இதற்கு முன்பு காங்கிரசுக் கட்சி தோல்வி அடைந்திருந்தாலும் இப்போது மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டதைப் போன்றதொரு தோல்வியை இதுவரை சந்தித்ததில்லை. குறிப்பாக, தாழ்த்தப்பட்டோருக்கான 34 ''ரிசர்வ்'' - தனித்தொகுதிகளில் இரண்டில்தான் காங்கிரசு வெற்றி பெற்றுள்ளது. இது தவிர பல மாவட்டங்களில் ஒரேயொரு இடத்தைக்கூடப் பெற முடியாமல் படுதோல்வியடைந்துள்ளது. காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் முதல்வர் பங்காரப்பா தனிக்கட்சியைத் தொடங்கி தேர்தலில் போட்டியிட்டதாலும், காங்கிரசிலேயே கட்சிக் கட்டுப்பாட்டை மீறி 35 தொகுதிகளில் போட்டி வேட்பாளர்கள் நின்றதாலும், இந்த ஓட்டுப் பிளவைச் சாதகமாக்கிக் கொண்டு நடைபிணமாகக் கிடந்த ஜனதா தளக் கட்சி மீண்டும் புத்துயிர் பெற்று பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி ஆட்சியை நிறுவியுள்ளது. இது தேர்தல் ஆய்வாளர்களின் கணக்கு.

அடுத்தடுத்து கட்சி மாறிகளால் ஆட்சிக் கவிழ்ப்புகளைச் சந்தித்துவரும் கோவா மாநிலத்தில் காங்கிரசுக் கட்சி கணிசமான இடங்களைக் கைப்பற்றிய போதிலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. கட்சி மாறிகளால் எப்போதும் கவிழலாம் என்ற எதிர்பார்ப்புடன் காங்கிரசு சிறுபான்மை ஆட்சி நிறுவப்பட்டுள்ளது. சிக்கிமில் காங்கிரசுக்கு என்றுமே வேரோ, விழுதோ கிடையாது. அதுவும் டெல்லிக்குக் காவடி தூக்கும் சிக்கிம் சங்கராம் பரிஷத்தும் படுதோல்வி அடைந்தன; புதிய பிராந்தியவாதக் கட்சியான சிக்கிம் ஜனநாயக முன்னணி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியை நிறுவியுள்ளது.

வடக்கே செல்லாக் காசாகிவிட்ட காங்கிரசுக் கட்சி தற்போது தெற்கேயும் கிடைத்த மரண அடியைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. தனிமனிதக் கவர்ச்சியோ, செல்வாக்கோ இல்லாத நரசிம்மராவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும்; சோனியாவைத் தலைவராக நியமிக்க வேண்டும்; மக்கள் நலத் திட்டங்களைக் கைவிடாமல் புதிய பொருளாதாரக் கொள்கையைத் திருத்தியமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று காங்கிரசு அதிருப்தி கோஷ்டிகள் கலகம் செய்ய ஆரம்பித்து விட்டன. அதேசமயம் பிரதமருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அம்பலமாகிப்போன ஊழல் மந்திரிகளைப் பதவி நீக்கம் செய்யமுடியாத அளவு பலவீனமாகிப் போனார், ராவ். சின்ன மந்திரிகள் கூட அவரது கண்ணில் விரல்விட்டு ஆட்டுகின்றனர். உ.பி.யில் கூட்டணி ஆட்சி அமைத்த செருக்கோடு, தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரே கட்சி என்று ஆரவாரத்தோடு ஆந்திராவில் 274 தொகுதிகளில் போட்டியிட்ட பகுஜன் சமாஜ் கட்சி ஒரு இடத்தில்கூட வெற்றிபெற முடியாமல் மண்ணைக் கவ்வியுள்ளது. இந்துவெறி பாரதீய ஜனதா கட்சி வெறும் 3 இடங்களைத்தான் கைப்பற்றியுள்ளது. அதே சமயம் கர்நாடகத்தில் 40 இடங்களைக் கைப்பற்றி இந்து வெறியர்கள் காலூன்றியுள்ளனர்.

நாட்டை அந்நிய ஏகாதிபத்தியங்களிடம் மறு அடகு வைத்துவிட்ட காங்கிரசுக் கயவாளிகள் நடைமுறைப்படுத்தி வரும் புதிய பொருளாதாரக் கொள்கை, விலைவாசி உயர்வு, வேலையின்மை, அடிப்படை வசதிகள் புறக்கணிப்பு, இந்து மதவெறிக்குத் துணைபோனது முதலானவற்றால் வெறுப்படைந்துள்ள மக்கள் காங்கிரசு துரோகிகளுக்கு இத்தேர்தல் மூலம் முகத்தில் கரி பூசியுள்ளனர். இதுதவிர காங்கிரசில் நிலவிய கோஷ்டிப் பூசல் காரணமாக அதிருப்தியாளர்களும் போட்டியிட்டு வாக்குகளைச் சிதறடித்தனர். இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு கவர்ச்சி வாக்குறுதிகள், மணலைக் கயிறாய்த் திரிக்கும் மாய்மாலங்களைக் காட்டி எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன. இன்னும் சொல்லப் போனால், இது அவர்களே எதிர்பார்த்திராத ஆச்சரியப்படும் வெற்றி!

இவ்வெற்றியானது ராவ் அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக விழுந்த மரண அடி; தமது கொள்கை - லட்சியங்களுக்குக் கிடைத்த வெற்றி என்று எதிர்க்கட்சிகள் மார் தட்டுகின்றன. ஆனால் ராவ் அரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து இக்கட்சிகள் மாற்றுத் திட்டமோ தொடர்ச்சியான இயக்கமோ, பிரச்சாரமோ செய்தது கிடையாது. தற்போதைய தேர்தலில் நாடு மறுகாலனியாக்கப்படுவதை முன்வைத்து அவை பிரச்சாரம் செய்யவுமில்லை. இந்நிலையில் தமது கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றியாக இக்கட்சிகள் பீற்றிக்கொள்ளச் சிறிதளவும் அருகதை கிடையாது. உண்மையில் ராவ் அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு மாற்றுக் கொள்கை எதுவும் இக்கட்சிகளிடம் கிடையாது.

இன்னொரு புறம், தேசிய முன்னணி - 'இடதுசாரி' கூட்டணி, இத்தேர்தல் முடிவுகள் மூலம் மறுமலர்ச்சி பெற்று, புதிய தேசிய மாற்றாக வளருவதற்கான வாய்ப்புகள் பெருகியுள்ளதாக இக்கட்சிகள் பெருமை கொள்கின்றன. ஆனால், வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்த பிறகு தேசிய முன்னணி இன்று காலிப் பெருங்காய ''டப்பா''வாகி விட்டது. தேசிய முன்னணியின் பிரதானக் கட்சியான ஜனதா தளம், ஐக்கியப்பட்ட கட்சியாக இல்லாமல் பல கோஷ்டிகளாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது. கர்நாடகத்தில்கூட தேவகௌடா கோஷ்டியும், ஹெக்டே கோஷ்டி

தொடர்ச்சி 6-ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

### பிரேமானந்தா குற்றங்கள்:

# காவிக்குத் துணையாக காக்கிகள்

**அரசியலைப் போல மத-ஆன்மீகத் துறையும் சமூக விரோதிகளின் பிழைப்புக்கான தொழிலாகிவிட்டது**

இலங்கையைச் சேர்ந்த ரவி என்கிற தெருபொறுக்கி தமிழகம் வந்து ஆசிரம் அமைத்து பிரேமானந்தா சாமியாரானான். இவன் ஆசிரமத்திலுள்ள சிறுமிகளையும் அருள்வாக்கு வாங்கவரும் பெண்களையும் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தும் காமுகனாகவும்; ஆபாசப் படமெடுத்து விற்கும், எதிர்ப்பவர்களை கொலை செய்து புதைக்கும், கள்ளப்பணத்தைப் பதுக்கும் கிரிமினலாகவும், வெளிநாடுகளுக்கு பணத்தை கடத்தும் நாட்டுத் துரோகியாவும் இருந்துள்ளது சந்தி சிரித்து விட்டது.

பிரேமானந்தா திருச்சி - பாத்திமா நகரில் 200 ஏக்கர் நிலத்தை வளைத்துப் போடுவதற்கும் சமூக அந்தஸ்து பெறுவதற்கும் தமிழகத்தைச் சேர்ந்த நில பண முதலைகள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் பக்தர்களாகவும் கூட்டாளிகளாகவும் இருந்து உதவியதும் வெளிவந்துள்ளது. ஜெயலலிதாவின் தோழி சசிகலா நடராஜன் மற்றும் சசிகலாவின் உறவினர்கள் பிரேமானந்தாவுடன் நெருக்கமாக இருந்துள்ளனர். புதுக்கோட்டை மாவட்ட வளர்ச்சி அதிகாரியாக இருந்த சசிகலாவின் அக்கா கணவர் விவேகானந்தன் பிரேமானந்தாவிற்கு அரசு உதவிகளை செய்து கொடுத்திருக்கிறார். சசிகலா உறவினர்களும் பிரேமானந்தாவும் சேர்ந்து அறக்கட்டளைகள் தொடங்கி பள்ளி - கல்லூரிகளை நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

இதுவல்லாமல் அ.தி.மு.க. அமைச்சர்கள் சிலரும், தி.மு.க., காங்கிரசைச் சேர்ந்த பெரும்புள்ளிகளும், வாண்டையார் போன்ற பண்ணையார்களும், துணிக்கடை, வீடியோகடை தொழிலதிபர்களும் பிரேமானந்தாவின் பக்தர்களாகவும் கூட்டாளிகளாகவும் இருந்துள்ளனர். குஜராத் போலிச் சாமியார் கேசவானந்தாவிற்கு ஆதரவாக வாதாட அங்கே ஒரு வழக்கறிஞர் கூட முன்வரவில்லை. ஆனால் இங்கு பிரேமானந்தாவுக்காக வாதாட தி.மு.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர் எம்.எஸ். வெங்கடாச்சலம் முன்வந்து தொழில்தர்மம் பேசிக் கொண்டிருக்கிறார்.

ஆசிரமத்திலிருந்து தப்பித்து வந்த இரு பெண்கள் மூலம் பிரேமானந்தாவின் உண்மை முகம் தெரியவந்து சில நாட்கள் கழித்து தாமதமாகவே நடவடிக்கையில் இறங்கியது போலீசு. பிறகு உண்மைகளை - ஆதாரங்களை எல்லாம் கைப்பற்றி மறைப்பதில்தான் வேகங்காட்டியது. போலீசு செய்த தாமத்தைப் பயன்படுத்தி பிரேமானந்தா ஆதாரங்களை மறைத்ததும், திவ்யா போன்ற நபர்களை எச்சிரித்து பாதுகாத்துக் கொண்டதும் தான் நடந்தது. பிரேமானந்தவைக் கைது செய்து சிறையில் முதல் வகுப்பு வசதி கொடுத்தும் இவனை தரிசிக்க - பார்க்க வருபவர்களுக்கு அனுமதி கொடுத்தும் காவல் நீட்டிப்பிற்கு கூட சிறையிலிருந்து வெளிக் கொண்டு வராமல் பாதுகாத்தும் வருகின்றன, அதிகார பீடங்கள்.

பிரேமானந்தாவின் பேட்டிகளே இவன் குற்றவாளி என்பதற்கான வாக்குமூலங்களாக இருக்கின்றன. என் மீதான குற்றச் சாட்டு வேண்டாதவர்களின் சதி என்றான்; பிறகு கிறிஸ்துவ அமைப்புகளின் சதி என்றான். இவனுடைய அக்கிரமத்தை எதிர்த்த ரவி என்கிற பொறியாளர் ஆசிரமத்தை விட்டு ஓடி விட்டதாக முதலில் கூறினான்; ரவியின் பிணம் ஆசிரமத்தில் தோண்டியெடுக்கப்பட்ட பின் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறினான். இப்படி ஏராளமாக, முரணாக உளறுவதோடு திமிர் பிடித்து ஆசிரமப் பெண்களைப் பற்றி அவதூறு பேசுவது கிரிமினல் - கேடிக்கே உரிய மூளையோடு கற்பனை கதை கட்டி தனது செயலுக்கு நியாயம் கற்பிக்கிறான். போலீசோ, ஆசிரமத்தில் கிடைத்த ஆதாராங்களை இருட்டடிப்பு செய்து விட்டதோடு முக்கிய ஆதாரத்திற்காக புலனாய்வு நடத்தி இவன் மீது நடவடிக்கை எடுக்கக் காத்திருப்பதாக நாடகமாடுகிறது.

ஆனால் ஓட்டுக் கட்சிகள், அதிகார பீடங்களின் ஆதரவு - உறவு இருப்பதாக எழுதுகிற கிசுகிசு பத்திரிகைகள் இன்னொரு புறம் பிரேமானந்தாவிற்கு எதிராக போலீசு தீவிர நடவடிக்கை எடுப்பதாகவும் போலீசுக்கும் பிரமோனந்தவிற்கும் முரண்பாடு எழுவதாகவும் ஆட்சியாளர்கள் தலையீடின்றி சுதந்திரமாக போலீசு இயங்குவதாகவும் எழுதி மாயையைத் தோற்றுவிக்கின்றன. அதிகார பீடங்களின் ஆதரவுடன் பிரமோனந்தா சொகுசாக - கவலையின்றி இருப்பதும் தப்பிக்க திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறான் என்பதும்தான் உண்மை.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை மற்றும் கிரிமினல் குற்றங்களில் குஜராத்தில் கேசவானந்தா, டில்லியில் ராம் பிரசாத், அசாமில் சந்திர கோசுவாமி, ஆந்திராவில் சாய்பாபா, வடக்கில் சடாச்சாரி, தேவேந்திர பிரம்மச்சாரி, ரஜனீஷ், தமிழகத்தில் மவுனச்சாமி, பிரேமானந்தா என்று காவியுடைக் கயவர்களின் பட்டியல் நீண்டு கொண்டிருக்கிறது. அரசியல் கிரிமினல்மயமாகி அம்பலப் பட்டுள்ளதைப் போல மத - ஆன்மீகத் துறையும் கிரிமினல்மயமாகி அம்பலப் பட்டு வருவது அண்மைக்கால நிகழ்வு. சீரழிந்த இந்தியப் பண்பாடு, நிலை குலைந்த இந்தியப் பொருளாதாரம் ஆகியவை ஏராளமானோரை வேலையற்றவர்களாகவும் உதிரிப் பாட்டாளிகளாகவும் மாற்றி வருகிறது. இவர்களிலிருந்து சமூக விரோத சக்திகளாக தலையெடுக்கும் கும்பல் அரசியல், கலை, மத - ஆன்மீகத் துறை என அனைத்திலும் நுழைந்து செல்வாக்கு செலுத்துகிறது. அரசியலைப் போல மத - ஆன்மீகத் துறையும் சமூக விரோதிகளின் பிழைப்புக்கான தொழிலாகி விட்டது.

சமூக மற்றும் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு வடிகாலாக அல்லது ஒரு தப்பித்தலாக மன நிம்மதி பெற மக்கள் மத - ஆன்மீக போதனைகளை, பக்தியை நாடுகிறார்கள். அரசியலைக் காட்டிலும் மத - ஆன்மீகத் துறை பெரும்பான்மை மக்களை ஈர்த்து வலிமையுடையதாகவும் விளங்குகிறது. மேலும் மடங்கள், ஆதீனங்கள், கோயில்கள் (சிறுபான்மை



போலீசின் பிடியில் மகிழ்ச்சியுடன் பிரேமானந்தா



படிப்பகம்

www.padippakam.com

மத நிறுவனங்களும் விதிவிலக்கல்ல) அரசின் ஏராளமான சலுகைகள், உதவிகள் பெற்று வளர்ந்து வருகிற அதேசமயம் நிறுவனத்திற்குள் அதிகாரிகளின் - சட்டத்தின் தலையீடோ, சோதனையோ இல்லாமல் தனி சுயாட்சி பிரதேசங்கள் போல ஒரு அந்நிய நாட்டு தூதரகத்தைக் காட்டிலும் வசதியாக இயங்குகின்றன. இது பல்வேறு கிரிமினல் - சமூக விரோத - 'தேச'விரோத செயல்கள், சதிகள் அரங்கேற்ற மிக எளிதாகவும் வசதியாகவும் இருக்கிறது.

இதனால்தான் சந்திராசாமி, ரஜனீஷ், பிரேமானந்தா, சாய்பாபா போன்ற கிரிமினல்கள் சாமியார்வேடம் தரிக்கின்றனர். இவர்களுடன் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், ஆளும் வர்க்கங்களும் கை கோர்க்கிறார்கள். இக்கூட்டின் விளைவாக சாமியார்கள் அரசியலிலும் அரசு விவகாரங்களிலும் தலையிட்டு முடிவெடுப்பவர்களாகவும் ஆலோசகர்களாகவும் விளங்குகிறார்கள். இக்காவியுடைக் கயவர்களில் சாய்பாபா போன்றவர்கள் சந்திசிரித்துவிட்டார்கள்; சங்கராச்சாரிகள் போன்றவர்கள் இன்னும் அம்பலத்திற்கு வரவில்லை அவ்வளவுதான்.

காவியுடைக் கயவர்களின் காலில் பாமரன் விழுவதற்கும் அரசு உயர் பதவியிலிருப்போர் விழுவதற்கும் வித்தியாசம் உண்டு. அரசியல்வாதிகள், அதிகாரிகள், பெரும் பண முதலைகள் அம்மணச் சாமியார் காலில் மிதிபடுவதற்கும், சங்கராச்சாரிகள், சாய்பாபாவின் காலில் விழுவதற்கும் பக்தியோ, ஆன்மீக உணர்வோ காரணமல்ல; சுயநலனும் வர்க்கப் பாசமுமே காரணம்.

ஆத்மா, மெய்யுணரா சக்தி, புனிதம் - மனத்தூய்மை போன்ற சாத்வீகமான தெய்வக் கோட்பாடுகள் என ஏதோ ஒன்றின் மூலம் மக்களைக் கவர்வது பழங்கதையாகி வருகிறது. லிங்கம், தங்கம், சிலை முதலியவை வரவழைக்கும் அதீத சக்தியுடையவராக கட்டுக்கதைகளை உருவாக்கியோ, ரஜனீஷ் போன்று பக்தியுடன் வக்கிர பாலுணர்வை இணைத்தோ, ஏதாவது சாகச - சித்து வேலைகள் செய்தோதான் பிழைப்பு நடத்த முடிகிறது, இக்கயவர்களால். மேலதிகமாக மக்களின் கண்களை கட்டுவதற்காக அனாதை ஆசிரமங்கள், பள்ளி கல்லூரிகள், மருத்துவமனைகள், கோயில்கள், சத்திரங்கள் அமைத்துத் தருகிற பொதுப்பணிகளையும் இவர்கள் கையிலெடுத்துக் கொள்கிறார்கள். உலக அளவிலிருந்து உள்ளூரளவு வரை இத்தகையோர் நிறைந்திருப்பதும் அனைத்து மதங்களும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதும் இக்கயவர்களின் தகுதி, புகழ், செல்வாக்கிற்கு ஏற்ப அரசு பீடங்கள் கூட்டு வைத்துக் கொண்டு பாதுகாக்கின்றன என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி.

போலீசு துறையில் 'கற்பழிக்கும்', கொலை செய்யும் குற்றவாளிகளைத் தண்டித்தால் அவ்வமைப்பு மீதான நம்பிக்கை உடைந்துவிடும் என்று எப்படி ஆளும்வர்க்கங்கள், , ஆட்சியாளர்கள் பார்க்கிறார்களோ அதேபோல்தான் காவியுடைக் கயவர்களின் குற்றங்கள் மீதான நடவடிக்கையிலும் அணுகி மத - ஆன்மீக நிறுவன அமைப்பை பாதுகாத்து வருகிறார்கள். எதிர்ப்பு பெருகி நெருக்கடி ஏற்பட்டால் இவ்வமைப்புகளில் உள்ள தனிநபர் சிலர்தான் சரியில்லை என்று காட்டி ஓரளவு நடவடிக்கை எடுப்பார்கள். எனவே இக்காவியுடைக் கிரிமினல்கள் மீது மக்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவதில்தான் இப்பிரச்சினைக்குத் தீர்விருக்கிறது. ● ராசு

# பிரேமானந்தாவைத் தூக்கிலிடு! ஆசிரமத்தைக் கொளுத்துவோம்!

## எழுச்சிமிகு இயக்கம்

செருப்பு, துடப்பத்துடன் பிரேமானந்தாவைத் தூக்கிலிட ஆர்ப்பாட்டம்



"அந்த நாயைக் கல்லாலடித்துக் கொல்ல வேண்டும்! கண்டதுண்டமாக வெட்டியெறிய வேண்டும்! அவனது ஆண்குறியை அறுக்க வேண்டும்! அணுஅணுவாகச் சித்திரவதை செய்து துடிதுடிக்க சாகடிக்க வேண்டும்! அந்த வெறிபிடித்த மிருகத்தை உயிருடன் கொளுத்த வேண்டும்!" - என்று தமது ஆத்திரத்தைக் கொட்டாதவர்கள் இல்லை எனலாம். காமுகனும், கிரிமினலுமான பிரேமானந்தாவைப் பற்றி கேள்விப்பட்டவர்கள் எல்லாம் இப்படி ஏதோ ஒன்றை உச்சரிக்கவே செய்தனர்.

மக்களின் இத்தகைய உணர்விற்கு திருச்சியிலுள்ள மக்கள் கலை இலக்கியக் கழகத்தினரும், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினரும், பெண்கள் விடுதலை முன்னணியினரும் செயல் வடிவம் கொடுத்தனர். பிரேமானந்தா ஆசிரமத்திலிருந்து தப்பித்து வெளிவந்து இருபெண்கள் பத்திரிகைக்கு செய்தி கொடுத்து பலநாட்கள் ஆகியும் அக்காமுகன் கைது செய்யப்படவில்லை. அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் ம.க.இ.க. ஆசிரமத்தை முற்றுகையிட்டு நடவடிக்கை எடுக்கும் என்று அறிவித்தனர். பிரேமானந்தாவைக் கைது செய்து தூக்கிலிடு என 19.11.94 அன்று பெ.வி.மு.வினர் திருச்சி தெப்பக்குளம் அஞ்சலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். பின்னர் போலீசு பிரேமானந்தாவைக் கைது செய்து ஆசிரமத்தில் சோதனை நடவடிக்கை மேற்கொண்டாலும் மெத்தனமாகவே செயல்பட்டது. வழக்கம்போல விசாரணை, ஆய்வு, சோதனை என்ற பெயரில் நாடகமாடி காலத்தை இழுத்தடித்து இக்காமவெறியனையும் பின்னாலிருக்கும் முக்கிய புள்ளிகளையும் காப்பாற்றுவது, உண்மைகளை இருட்டடிப்பு செய்வதே அரசின் நோக்கமாக உள்ளது. பிரேமானந்தாவுக்குச் சிறையில் முதல்வகுப்பு அறை வசதி கொடுத்து சொகுசாக இருந்து கொண்டு திமிர்த்தனமாகப் பேட்டிக் கொடுக்க அனுமதித்துக் கொண்டிருக்கிறது.

பிரேமானந்தாவை மருத்துவப் பரிசோதனைக்கு புத்தூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு வந்தபோது ம.க.



படிப்பகம்

www.padippakam.com

இ.க., பு.மா.இ.மு., பெ.வி.மு. ஆகிய அமைப்பினர் இணைந்து செருப்பு, துடப் பத்துடன் ஆர்ப்பாட்டம் செய்தனர். பிரே மானந்தாவை செருப்பால் அடிக்க முயன் றும் பலத்த போலீசு பாதுகாப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கையால் இயலாமல் போனது. வீசப்பட்ட செருப்பு காமுகன் மேல் விழுவதற்குப் பதிலாக அவன் சென்ற வாகனத்தின் மீதுதான் விழுந்தது. 21.11.94 அன்று ஒரு மணி நேரமாக நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தைக் கண்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மத்தி யிலிருந்து வந்த வார்த்தை "அவனை அடித்தே கொல்ல வேண்டும்" என்பது தான். அன்று உறையூரில் பொதுக்கூட் டம் வாயிலாகவும் மக்களிடம் பிரச்சி னையை எடுத்துச் சென்று நடவடிக் கைக்கு ஆதரவு திரட்டினார்கள், இவ்வ மைப்பினர்.

தீப்பந்தங்களை உயர்த்திப் பிடித்ததும் பர பரப்பு இன்னும் கூடியது. வேடிக்கைப் பார்த்த பொதுமக்களை தடியடி நடத்தி கலைத்த போலீசை தட்டிக் கேட்டதால் போராட்டக்காரர்கள் மீதும் தடியடி பிர யோகம் நடந்தது. எனினும் பெண்கள், குழந்தைகள் உட்பட போராட்டக்காரர் கள் உறுதிகுலையாமல் சாலையை மறித்து நின்று ஒரு மணி நேரமாக ஆர்ப் பாட்டம் செய்தனர். பின்னர் கைது செய்து அப்புறப்படுத்திய போலீசு சில பொய் வழக்குகளைப் போட முயன்று ஏனோ அதை கைவிட்டு விடுவித்துவிட் டது. மக்கள் மத்தியில் மேலும் வெறுப் பைத் தேடிக் கொள்ள வேண்டாம் என்று போலீசு நினைத்து இவ்வாறு செய்தாலும் பிரேமானந்தாவையும் போலீசையும் ஒருங்கே இணைத்து குற்றவாளிகளாக மக்கள் கரித்துக் கொட்டினர்.



ஆசிரமத்தைக் கொளுத்த இவர்கள் தீப்பந்தத்தையும் இதைத் தடுக்க போலீசார் லத்தியையும் ஏந்தினர்.

பிரேமானந்தா ஆசிரமத்திலிருந்து ஆபாச புகைப்படங்கள், கொலை செய்து புதைக்கப்பட்ட பிணம், கள்ளப்பணம் -வருமானவரி ஏய்ப்புக்கான ஆதாரங் கள், அந்நிய - ஆடம்பர - ஆபாசப் பொருட்கள் முதலானவற்றை அதிகாரி கள் கைப்பற்றினர். நாளும் நாளும் புதிய ஆதாரங்கள் வெளிவந்து கொண்டுள் ளன. அந்த ஆசிரமமே தமிழகத்திற்கு ஒரு அவமானச் சின்னமாக விளங்கிய தால் அதை டிசம்பர் 6-ல் கொளுத்துவ தாக மேற்கண்ட அமைப்புகள் அறிவித் தன. நகரெங்கும் பல வடிவங்களில் பிரச் சாரம் செய்து ஆதரவு திரட்டினர். திருச்சி நகரின் சந்து பொந்துகளில் எல்லாம் மக்க ளின் பேச்சு இப்போராட்டத்தை பற்றிய தாகவே இருந்தது என பத்திரிகைகள் நிலைமையை படம் பிடித்துக் காட்டின. டிசம்பர் 6 அன்று ஊர்வலம் புறப்பட இருந்த தெப்பக்குளம் அஞ்சலகம் முன் பும் பிரேமானந்தா ஆசிரமத்தைச் சுற்றி யும் ஏராளமான போலீசைக் குவித்து, அரசு பீதியூட்டியது. ஆசிரமத்தின் காட் டுப்பகுதியில் கூட போலீசு ஆயுதங்களு டன் வழிமறித்து நின்றது.

அறிவித்தபடி ம.க.இ.க., பு.மா. இ.மு., பெ.வி.மு.-வினர் சுமார் 100 பேர் திடீர் என குழுமி முழக்கங்கள் எழுப்பி

● வேலூரில் ம.க.இ.க.-வினர் 28.11.94 அன்று பிரேமானந்தாவைத் தூக்கிலிடக் கோரி காந்தி சிலையிலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை ஆர்ப் பாட்ட ஊர்வலம் நடத்தினர். பிரேமானந் தாவின் கொடும்பாவியை கழுதையில் வைத்து எடுத்து வந்து எரிக்க முயன் றதை போலீசு தடுத்தது. இதனால் பொம் மையை செருப்பால் அடித்து தெருவில் இழுத்துச் சென்றனர்.

பிரேமானந்தாவை புதுக்கோட்டை கீரனூர் நீதிமன்றத்திற்கு காவல் நீட்டிப் பிற்கு கொண்டு வர இருந்த நாளன்று பகுதி பா.ம.க.வினர் முற்றுகையிட குழு மினர். இதனால் நீதிபதியே திருச்சி மத் திய சிறைக்குச் சென்று காவல் நீட்டிப்பு உத்தரவு பிறப்பித்து வந்தார். பிரேமானந் தாவிற்கு எதிரான இத்தகைய நடவடிக் கைகளும் மக்களின் தார்மீக ஆதரவும் தான் அரசு அவனை பிணையில் வெளியே விடாமல் இருப்பதற்குரிய கார ணம். சிறையில் பாதுகாப்பளித்து பிரச்சி னையை ஆறப்போட்டு பின்னர் அரசு அவனை வெளியே விடலாம்! அக்காமு கனும் வெளிநாட்டிற்குத் தப்பிப் போக லாம்! ஆனால் மக்களின் சினத்தீ அவ னையும் அவனது ஆசிரமத்தையும் பற் றாமல் அணையாது.

**தலையங்கம் தொடர்ச்சி**

யும் தேர்தலை முன்னிட்டுத்தான் கூட் டுச் சேர்ந்து நின்றுள்ளன.

மேலும், தெலுங்கு தேசக் கட்சி யும், ஜனதா தளமும், போலிக் கம்யூ னிஸ்டுகளும் மக்கள் விரோத காங்கிர சுப் பெருச்சாளிகளுக்கு ஒரு போதும் தேசிய மாற்றாகிவிட முடியாது. அத்த கைய மாற்றுக் கொள்கை எதுவும் இக் கட்சிகளிடம் கிடையாது என்பதே கடந்த கால வரலாறு. அதிலும் என்.டி. ஆரின் கட்சியோ, பாசிச எம்.ஜி.ஆர். - ஜெயா பாணியிலான ஜனநாயகம் அறவே இல்லாத தனிநபர் சர்வாதிகாரக் கட்சி. கவர்ச்சிவாதமும் பிழைப்புவாத மும்தான் அதன் கொள்கை; கட்சி மாறி கள், பதவி வெறியர்கள், பிழைப்புவாதி களைக் கொண்ட கூடாரம்தான் அது. இதே போல கர்நாடக ஜன்தா தளமும் பதவி வெறியர்கள், பிழைப்புவாதிகள், சாதிவெறியர்களின் கூட்டணிதான். முதல்வர் தேவகௌடாவின் பதவி யேற்பு விழாவின்போதே அக்கட்சிக் குள் நிலவும் கோஷ்டிச் சண்டை பகி ரங்க தெருச்சண்டையாக மாறி சந்திசி ரித்தது. மோதலைத் தணிக்க, 3 எம்.எல். ஏக்களுக்கு ஒரு மந்திரி வீதம் 37 பேருக்கு மந்திரி பதவி அளித்து மிகப் பெரிய அமைச்சரவையை புதிய ஜனதா தள அரசு நிறுவியுள்ளது.

இக்கட்சிகளின் தேர்தல் வாக்குறுதி கள் அனைத்தும் கவர்ச்சிவாத - காகிதப் பூ திட்டங்கள்தான். ஏற்கனவே உலக வங்கியின் கட்டளைப்படி "ரேஷன்" கடைகளில் புழுத்துப் போன அரிசி விலை ரூ. 7 ஆக உயர்த்தப்பட்டுள்ள நிலையில், ஒரு கிலோ அரிசி ரூ. 2 வீதம் 20 கிலோ அரிசி வழங்கப்படும் என்றும் என்.டி.ஆர் வாக்குறுதியளித்துள்ளார். இது எப்பொழுது நடைமுறையாகும் என்பது சந்தேகமாகவே உள்ளது. மத் திய அரசு உரிய மானியம் தரவில்லை என்று இதர எதிர்க்கட்சி அரசுகளைப் போல டெல்லி ஆட்சியாளர்கள் மீது பழிபோட்டுத் தப்பித்துக் கொள்வதாக முடியும்.

புரட்சிகர இயக்கம் பலவீனமாக உள்ள நிலையில், மக்கள் விழிப்புணர்வு பெற்று, புதிய மாற்று அரசியல் சக்தி வளர்ச்சியடையாத நிலையில் ஓநாய்க ளுக்குப் பதிலாக நரிகள் ஆட்சிக்கு வந் துள்ளதையே தேர்தல் முடிவுகள் காட்டு கின்றன. காங்கிரசு அரசுகள் மீது வெறுப் புற்று வாக்களித்துள்ள மக்கள் எதிர்க்கட் சிகளின் புதிய அரசுகளது மாய்மாலங்க ளுக்குப் பலியாகி விடக்கூடாது. மீண் டும் செக்குமாட்டுப் பாதையில் சென்று மாறி மாறி ஏமாந்துவிடவும் முடியாது. பிழைப்புவாத - கவர்ச்சிவாத புதிய அர சுகளின் தகிடுதத்தங்களை விழிப்புடனி ருந்து முறியடிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஜெயா - வீரப்பன் யார் தலைமையை ஏற்பது? போலீசு திணறல்

சந்தன மரக் கடத்தல் மன்னன் வீரப்பன், துணைக் கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் மற்றும் அவரது உறவினர்கள் இருவரையும் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றுள்ளான். பிணைக்கைதிகளை விடுவிக்க அவன் முன்வைத்துள்ள பத்து கட்டளைகளைக் கண்டு, தமிழக அரசு எந்திரமே கதிகலங்கிப்போய் நிற்கிறது. கோவை மாவட்ட ஆட்சியாளருக்குத் தனது கோரிக்கைகளை உள்ளடக்கி அவன் அனுப்பிய ஒலிநாடாவை பகிரங்கமாக வெளியிட்டும், வீரப்பனின் வலது கரமான அவனது தம்பி அருச்சுனனுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தும், சிறையிலுள்ள வீரப்பன் குடும்பத்தினரை அருச்சுனன் சந்தித்துப் பேச அனுமதியளித்தும், அதிரடிப்படையின் நடவடிக்கைகளை நிறுத்திவைத்து, பிணைக் கைதிகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தும் அவனது உடனடிக் கோரிக்கைகளை ஏற்று தமிழக அரசு தற்காலிகமாகப் பின் வாங்கியுள்ளது.

1000 கோடி நிவாரணத் தொகையும் மற்றும் பிற கோரிக்கைகளையும் முன்வைத்து சரணடைவதற்கு அவன் விதித்துள்ளதாகக் கூறப்படும் நிபந்தனைகளுக்கு ஜெயா அரசு இன்னமும் அதிகாரப் பூர்வமாக தனது முடிவை அறிவிக்கவில்லை. அதேசமயம் வீரப்பன் கும்பலுடன் கோவை மாவட்ட ஆட்சியாளரும் போலீசு உயரதிகாரிகளும் இரகசியமான முறையில் பேச்சு வார்த்தைகள் - பேரங்கள் நடத்தி வருவதாக செய்திகள் கசிந்துள்ளன.

கடந்த 15 ஆண்டுகளாக யானைகளைக் கொன்று தந்தங்கள் எடுத்தும், சந்தன மரங்களை வெட்டியும் பல கோடி ரூபாய் மதிப்புடைய கடத்தல்களை வீரப்பன் கும்பல் தொடர்ந்து செய்து வருகிறது. கார், ஜீப், லாரி, வேன் சகிதம் மரபு வழி ஆயுதங்கள் வெடிகுண்டுகள், கண்ணிவெடிகள், நவீன துப்பாக்கிகளுடன் தனியார் இராணுவமாகவே இக்கும்பல் இயங்குகிறது. காட்டுப் பகுதியிலுள்ள பல கிராம வாசிகளுக்கு தானதர்மங்கள் செய்தும் மிரட்டிப் பணிய வைத்தும் ஆயுத பலத்தால் தனது செல்வாக்கு - ஆதிக்கத்தை தமிழக - கர்நாடக எல்லையில் உள்ள சத்திய மங்கலம், மாதேஸ்வர மலைக் காட்டுப் பகுதிகளில் நிலைநாட்டியுள்ளது.

வீரப்பன் கும்பல் மீது போர்ப்பிரகடனம் செய்து நடவடிக்கையில் இறங்கிய தமிழக - கர்நாடக மாநிலங்களின் வனத்துறையும் போலீசுத் துறையும் பலமுறை படையெடுத்துப் பலத்த சேதங்களுடன் தோற்றுப் போய் திரும்பியுள்ளன. கடைசியாக 'சூரப்புலி' தேவாரம் தலைமையில் 600 ஆயுதப் போலீசாரைக் கொண்டு சிறப்பு அதிரடிப்படை அமைத்து ''ஆபரேசன் ஸ்நாப்'' என்ற இராணுவ பாணி நடவடிக்கையில் இறங்கியும் கூட, வீரப்பன் கும்பலை அழித்தொழிக்க முடியவில்லை. கண்ணிவெடித்தாக்குதலில் எஸ்.பி.கோபாலகிருஷ்ணன் படுகாயமுற்று, போலீசாரும் துப்புக் கொடுப்பவர்களுமாக 22 பேர் பலியாகினர். இதுதவிர 10 வனத்துறை அதிகாரிகளும், போலீசுக்கு துப்பு கொடுத்த பொதுமக்களில் 50 பேரும் வீரப்பன் கும்பலால் கொன்றொழிக்கப் பட்டுள்ளனர்.

ஒரு கிரிமினல் கும்பல் இவ்வளவு தூரம் எப்படி வளர முடிந்தது? தமிழக - கர்நாடக அரசுகளுக்கு சவால் விட்டு கொட்டமடிக்கும் அளவுக்கு இக்கும்பலுக்கு எப்படி துணிச்சல் வந்தது? நீண்டகாலமாகவே தமிழக - கர்நாடக மாநிலங்களின் அரசியல் பிரமுகர்கள், வனத்துறை - போலீசு அதிகாரிகள்தான் இந்த கும்பலை ஊட்டி வளர்த்து ஆதாயமடைந்து வந்துள்ளனர். குறிப்பாக, எம்.ஜி.ஆர். ஆட்சியில் மந்திரி முத்துசாமி, ஜெயா ஆட்சியில் அமைச்சர் செங்கோட்டையன், மேட்டூர் எம்.எல்.ஏ. நாச்சிமுத்து, பென்னாகரம் போலிக் கம்யூனிஸ்டுப் பிரமுகர் நஞ்சப்பன், கொள்ளேகால் காங்கிரசு முன்னாள் எம்.எல்.ஏ. ராஜகௌடா பலரும் வீரப்பன் கும்பலோடு கூட்டு வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. தற்போதைய துணை கண்காணிப்பாளர் கடத்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு போலீசாருக்கும் வீரப்பனுக்குமிடையே நடந்த ரகசிய ஒலிநாடா பரிமாற்றங்களின் போது வீரப்பனே சூசகமான முறையில் இக்கூட்டாளிகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளான்.

தூது வந்த வீரப்பனின் தம்பி அருச்சுனன்.



அரசியல் பிரமுகர்கள், வனத்துறை - போலீசு அதிகாரிகளுக்கும் வீரப்பன் கும்பலுக்கும் இடையே நடந்த பேரங்கள், துரோகங்கள் காரணமாக கூட்டாளிகளிடையே இப்போது பிளவும் போட்டியும் மூண்டுள்ளது. எனவேதான் வீரப்பன் கும்பலை ஒழித்துக் கட்டுவதில் இப்போது தீவிரம் காட்டப்படுகிறது. எஜமானர்களின் கட்டுப்பாட்டை மீறி கிரிமினல்கள் வளர்ந்து விடும் போது, பங்குபோடுவதில் தகராறு ஏற்பட்டு நாயச்சண்டையாக மாறிவிடும்போது, பகுதிமக்களுக்கு எதிராக அட்டூழிங்கள் பெருகிவிடும்போது அதிகார வர்க்கமும் போலீசும் உத்தம வேடம் போட ஆரம்பித்து விடுகிறார்கள். சட்டம் - ஒழுங்கு, நீதியை நிலைநாட்டும் வீரதீர நாடாடகமாடுகிறார்கள்.

ஆனால் வீரப்பன் கும்பலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் போலீசார் நடத்திய அட்டூழிங்களால் பாதிக்கப்பட்டு பரிதவிப்பது காட்டுப்பகுதி கிராம மக்கள்தான். வீரப்பனின் கூட்டாளிகள் என்று அப்பாவி மக்களைப் பிடித்து சித்திரவதை செய்வது, காட்டு பகுதியில் வழிகாட்டவும் போலீசாருக்குப் பணிவிடைகள் செய்யவும் அப்பாவிகளை நிர்பந்தமாக இழுத்துச்சென்று பலியிடுவது, ஆடு - மாடு மேய்ப்பவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு வீரப்பனின் கூட்டாளிகளை 'மோதலில்' தீர்த்துக்கட்டியதாக கணக்கு காட்டுவது, பெண்கள் மீது பாலியல் வன்முறையை ஏவுவது என்பதாக போலீசாரின் அட்டூழியங்கள் கேள்விமுறையின்றி இன்னமும் தொடர்கின்றன. காட்டுப் பகுதி கிராமங்கள் அனைத்தும் போலீசு கும்பலால் ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்டு அங்கே என்ன நடக்கிறது என்பதே வெளியுலகுக்குத் தெரியாமல் இரும்புத் திரை போடப்பட்டுள்ளது. அதிரடிப் படையின் அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட மக்கள், முதல்வரின் உதவியாளரிடம் வந்து கதறி அழுதபோதிலும், டெல்லியைச் சேர்ந்த மனித உரிமை அமைப்புகள் தொடரும் சித்திரவதைகளைக் கண்டித்து விசாரணை நடத்த கோரியும்கூட, பாசிச ஜெயா அரசு இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடனடி ஆதாயம் ஏதும் இல்லாததால் எந்தவொரு ஓட்டுக் கட்சியும் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்துப் போராட முன்வரவுமில்லை. இதனைச் சாதகமாக்கிக் கொண்டு, பாதிக்கப்படும் மக்களின்



படிப்பகம்

சார்பாக வீரப்பன் போலீசு கும்பலுக்கு எதிராகச் சாடுகிறான்; சவால் விடுகிறான். போலீசாரின் காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்து ஆத்திரத்தை உமிழ்கிறான். இதன்மூலம் எல்லையோர கிராம மக்களின் தார்மீக ஆதரவையும் செல்வாக்கையும் பெறுவதே அவனது நோக்கமாக உள்ளது. இருப்பினும் வீரப்பனின் ஒலி நாடாக்கள் போலீசு கும்பல் நடத்திவரும் கற்பழிப்புகள், கொலைகள், சித்திரவதைகளை வெளியுலகுக்கு அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.

வீரப்பனும் அவனது கூட்டாளிகளும் தற்போதைய படைபலம் - பணபலத்தோடு கௌரவமான முறையில் சரணடைய விருப்பம் தெரிவித்த போதிலும் போலீசார் அதை ஏற்கவில்லை. இத்தகைய வீரப்பன் வேட்டையில் கிடைக்கும் சிறப்புப் பதவி, சலுகை - சன்மான சுகங்களை இழந்துவிடக் கூடாது என்பதிலேயே அவர்கள் குறியாக உள்ளனர். மேலும் வீரப்பன் பெயரைச் சொல்லி தந்தங்களையும் சந்தன மரங்களையும் கடத்துவதைத் தொடர இது அவர்களுக்கு வசதியாக உள்ளது. பஞ்சாபில் பயங்கரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில், கணக்கில் வராத பணமும் ரகசிய கொலைக் குழுக்களையும் கொண்டு பத்தாண்டுகளுக்கும் மேலாக போலீசார் நரவேட்டையாடி கொட்டமடித்ததைப் போல, அதிகார போதையேறி அட்டூழியங்கள் செய்வதற்கு வீரப்பன் வேட்டை அவர்களுக்கு வசதியாகப் போய்விட்டது.


வீரப்பன் கும்பலின் பிணைக் கைதிகள் கடத்தல் விவகாரத்தையும், ஒலி நாடாக்கள் பற்றியும் தமிழக கிசுகிசு பத்திரிகைகள் பரபரப்பூட்டி வருகின்றன. ''வீரப்பர் கூறியுள்ளார்; அருச்சுனர் பேட்டியளித்தார்'' என்று வெட்கமின்றி மரியாதை அளித்து இக்கிரிமினல் கும்பலுக்கு மறைமுகமாக வக்காலத்து வாங்குகின்றன. ஆனால், சட்டபூர்வ கிரிமினல்களான போலீசுக்கும் சட்டவிரோத கிரிமினல்களான வீரப்பன் கும்பலுக்குமிடையே நடக்கும் நாய்ச் சண்டையில் எந்த தரப்பும் நியாயமானதோ, மக்களுக்குப் பொறுப்பானதோ அல்ல. இவ்விரு தரப்பினாலும் உழைக்கும் மக்கள்தான் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இத்தகைய கிரிமினல் மாஃபியாக்களை ஊட்டி வளர்த்த ஓட்டுக் கட்சிப் பிரமுகர்கள், வனத்துறை - போலீசு அதிகாரிகள்தான் முதன்மைக் குற்றவாளிகள்.

இப்படித்தான் சர்வகட்சிக் கிரிமினலான ''ஆட்டோ'' சங்கர் விவகாரத்திலும் நடந்தது. இதேபோல அரசு நிலங்களைக் கைப்பற்றுவது, பாறைகளை உடைத்து கருங்கல் ஏற்றுமதி, சிலைகளைக் கடத்துவது, கொலை - கொள்ளை, கள்ளச்சாராயம் - விபச்சாரம் என சமூக விரோதத் தொழில்களில் ஈடுபடும் மாஃபியா கும்பல்களும் பெருகி வருகின்றன. ஒவ்வொரு கும்பலுக்கும் பின்னே அரசியல்வாதிகள் - போலீசு அதிகாரிகளைக் கொண்ட ஒரு கூட்டம் இருக்கிறது. எனவே இக்கூட்டத்தின் உத்தம நாடகத்தை நம்புவதோ, கிரிமினல்களை ஒழிக்க அவர்களிடம் முறையிடுவதோ ஒருபோதும் பலனளிக்காது. போலீசு மற்றும் வீரப்பன் கும்பலின் அட்டூழியங்களுக்கு எதிராக, உள்ளூர் அளவில் உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து இக்கிரிமினல் கும்பல்களைத் திருப்பித் தாக்கும் வகையில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இல்லையானால் அவர்கள் நமது வாழ்வின் அனைத்து விவகாரங்களிலும் ஏறிமிதித்து ஆதிக்கம் செய்யக் கிளம்பி விடுவார்கள்.

'பார்ப்பன பாசிசத்துக்கு எதிரான போர்முழக்கம்'

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**

நடத்தும்



**தமிழ் மக்கள் இசைவிழா**

(இரண்டாம் ஆண்டு)

**சனவரி-12, 1995, வியாழக்கிழமை**

**தஞ்சையில்**

காலை முதல் மாலை வரை

**கருத்தரங்கம்**

உரையாற்றுவோர்

**மருதையன்**, பொதுச்செயலர், ம.க.இ.க. தமிழ்நாடு.

முனைவர் **கே.ஏ.குணசேகரன்**, பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்.

முனைவர் **அறிவு நம்பி**, பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்.

திரு. **அருளி**, தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு. **தண்டபாணி**, ஆசிரியர், 'திராவிடர் இசை' ஆய்வு நூல்.

திரு. **ஞாநி**, பத்திரிகையாளர்.

**திருவையாறில்**

மாலை முதல் இரவு வரை

**கலை, இசை நிகழ்ச்சிகள்**



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# விசைத்தறி தொழிலாளர்களின் அவலம் ஓட்டுக்கட்சி சங்கங்களின் துரோகம்

ஈரோடு பள்ளிபாளையம், விசைத்தறி தொழிலில் துணி உற்பத்தியில் இந்தியாவிலேயே பம்பாய்க்கு அடுத்தபடியாக சிறந்து விளங்குகிறது. ஆனால் இங்குள்ள விசைத்தறி தொழிலாளர்களின் வாழ்க்கையோ நாயைவிட மோசமாக - கீழான நிலையில் இருக்கிறது. விசைத்தறி கூடங்களை சிறுதொழில் - குடிசை தொழில் என்ற ரீதியில் பதிவு செய்து தொழிலாளர்களுக்குரிய உரிமையையும் - ஊதியத்தையும் கொடுக்காமல் சுரண்டி வருகிறார்கள் முதலாளிகள். 10 பேர் வேலை செய்தாலே அத்தொழிற்கூடத்தை தொழிற்சாலை சட்டத்தில் பதிவு செய்ய வேண்டும். ஆனால் இப்பகுதியில் 15 பேருக்கு மேல் வேலை செய்யும் சுமார் 5000 தொழிற்கூடங்கள் இருந்தும் 87 மட்டுமே தொழிற்சாலை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றிலும் நடைமுறையில் தொழிலாளர்களுக்குரிய விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதில்லை.

விசைத்தறி தொழிலாளர்கள் தினம் 14 மணி நேரம் கடுமையாக உழைத்த போதும் வாழ்க்கை நிலைமைகள் எள்ளளவும் முன்னேறவில்லை. தொழிலாளர்களின் வறுமையை சாதகமாக்கிக் கொண்டு குளியலறை அளவில் ஒரு வீடு கட்டிக் கொடுத்தோ, 20,000 ரூபாய் வரை கடன் கொடுத்தோ கொத்தடிமை போல் நடத்துகிறார்கள், முதலாளிகள். குறைந்த கூலி கொடுப்பது, மீட்டர் அளவுகளில் தில்லுமுல்லுகள் செய்வது போன்ற பித்தலாட்டங்கள் செய்கின்றனர். தொழிலாளர்கள் எளிதாக விடுப்பு எடுக்கவோ, தறி கூடங்களை மாற்றிக் கொள்ளவோ முடியாத வண்ணம் அடக்குமுறை ஏவப்படுகிறது. எதிர்த்துக் கேட்டாலோ மிரட்டுவது, வீட்டைக் காலி செய்து நடுத்தெருவில் நிறுத்திவிட்டு உடனே கடனைக் கட்ட வேண்டுமென நிர்பந்திப்பது, ஆள் வைத்து தாக்குவது, சில சமயங்களில் கொன்று மரத்தில் தொங்க விட்டோ கிணற்றில் எறிந்தோ தற்கொலையாகச் சித்தரிப்பது போன்ற அட்டூழியங்கள் தொடர்கின்றன. அதிகாரிகள், போலீசு, பிரேத பரிசோதனை செய்யும் மருத்துவர்கள் முதலியோருக்கு லஞ்சம் கொடுத்து அனைத்து அடக்குமுறை, தில்லுமுல்லுகளையும் சாதாரணமாக நிகழ்த்துகிறார்கள், விசைத்தறி முதலாளிகள்.

விசைத்தறி தொழிலாளர்களுக்கென காங்கிரசு முதல் யு.சி.பி.ஐ. வரை அனைத்து ஓட்டுக்கட்சிகளின் சங்கங்களும் உள்ளன. இதில் போலி கம்யூனிஸ்டுகளின் சி.ஐ.டி.யு. சங்கமே செல்வாக்கு செலுத்துகிறது. இவை போனஸ், கூலி மற்றும் பிற பொருளாதார நலன்களுக்கான போராட்டங்களை மட்டும் நடத்துகின்றன. அதுவும் போர்க்குணமற்ற சடங்குத்தனமான முறையிலேயே நடத்தி இறுதியில் சமரசம் செய்து கொள்கின்றன; அல்லது தொழிலாளர்களுக்கு துரோகமிழைக்கின்றன. தீபாவளி போனசுக்காக வேலை நிறுத்தம் அறிவிப்பது; பின் அதைக் கைவிட்டு குறைவான தொகையை ஏற்றுக் கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவது என்பது வருடா வருடம் நிகழும் ஒன்றாகும். இந்த ஆண்டும் முதலாளிகளின் பிச்சைக் காசு ரூ. 515-க்கு இணங்கி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டன. "வியாபாரம் இல்லை; நட்டத்தில் வேறுவழியில்லாமல் தொழில் நடத்துகிறோம்; தொழிலாளர்கள் வேலையை ஒழுங்காக செய்வதில்லை; இருந்தும் ஆயிரக்கணக்கில் கடன் கொடுத்திருக்கிறோம்; அதற்கு வட்டி எவ்வளவு ஆகிறது தெரியுமா" என்றெல்லாம் முதலாளிகள் வடித்த நீலிக் கண்ணீர் காரணங்களுக்கு தொழிற்சங்கங்கள் தலையாட்டி வழிமொழிந்தன.

இவ்வொப்பந்தத்தை சி.ஐ.டி.யு. ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் வேலை நிறுத்தத்தை நடத்தாமல் காலவரையின்றி ஒத்திவைத்துவிட்டு ரூ. 515-ஐ முன்பணமாக ஏற்றுக் கொண்டு தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்யுமாறு பிரச்சாரம் செய்தது. 90-ம் ஆண்டு விசைத்தறி தொழிலாளர்களின் போராட்டத்தைக் கொடுமையாக ஒடுக்கியது போல் இம்முறை வேலைநிறுத்தம் நடந்தால் ஒடுக்குவதற்காக பள்ளிபாளையம் போலீசு ஆய்வாளர் "சவுக்கடி" சந்திரசேகரன், உதவி ஆய்வாளர் தங்கராசு ஆகியோருக்கு 2 1/4 லட்சம் ரூபாய் லஞ்சம் முதலாளிகள் சார்பில் கொடுக்கப்பட்டதாக செய்திகள் வந்தன. இதை முறியடித்துப் போராட திராணியில்லாத சி.ஐ.டி.யு.வினர் மிரண்டு போய்த்தான் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு தொழிலாளர் நீதிமன்றத்தின் மூலம் பெற்றுத் தருவதாக பேசித் திரிகிறார்கள்.

இத்தகைய சூழலில் பள்ளிபாளையம் விசைத்தறி தொழிலாளர்கள் மத்தியல் புரட்சிகர விசைத்தறி தொழிலாளர் சங்கம் (RPLU) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. பிற தொழிற்சங்கங்களின் துரோகத்தனத்தை, சமரசப் பாதையை அம்பலப்படுத்தி பேசியதற்காக இச்சங்கத்தைச் சேர்ந்த தோழர் தர்மராஜ் என்பவருடன் அரசியல் பேசக்கூடாது என்று சி.ஐ.டி.யு. தலைவர்கள் கட்டுபாடு விதித்துள்ளனர். "இவர்கள் நக்சலைட்டுகள், தீவிரவாதிகள், தறிகூடங்களுக்குத் தீ வைத்துக் கலவரம் உருவாக்குவார்கள், சீர்குலைவுவாதிகள்" என்றெல்லாம் அவதூறு பரப்பி வருகிறது, சி.ஐ.டி.யு. தலைமை. ஆனால் இப்புரட்சிகர அமைப்பினரின் தெளிவான கருத்துக்களும், போர்க்குணமிக்க நடத்தைகளும், உறுதியும் தொழிலாளர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

23-10-94 அன்று போனசு கோரிக்கை உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி RPLU வின் பொதுக் கூட்டம் நடந்தது. மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்ற கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சியும் நடந்தது. மத்திய - மாநில அரசுகளின் தொழிலாளர் விரோதக் கொள்கையை அம்பலப்படுத்தியும் இதற்கு எதிராக செயல்பட திராணியற்ற ஓட்டுக்கட்சி தொழிற்சங்கங்கள், ஓட்டுக் கட்சிகளை தோலுரித்தும் பேசிய கருத்துக்கள் தொழிலாளர்களிடையே நம்பிக்கையையும் வரவேற்பையும் பெற்றன. ஏராளமானோர் திரண்டிருந்து ஆதரித்ததோடு தாராளமாக நன்கொடையளித்தும் உதவினர்.

**பார்வைக்கு**

**தஞ்சையில்
உலகத்தமிழ் மாநாடு நடத்தும்
மாண்புமிகு தமிழக முதல்வர்
அவர்களே!**

**69 சதவீத இட ஒதுக்கீட்டிற்காக டெல்லி சென்று வென்று வந்த சமூக நீதி காத்த வீராங்கனையே! தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டின் நிலையைப் பாரீர்! பாரீர்!!**

| | | பி.சாதி | ஆதி திராவிடர் |
|---|---|---|---|
| பேராசிரியர் | : | 14 | 0 |
| இணைப் பேராசிரியர் | : | 17 | 0 |
| முதுநிலை விரிவுரையாளர் | : | 35 | 0 |
| விரிவுரையாளர் | : | 0 | 1 |
| ஆய்வு உதவியாளர் | : | 33 | 0 |

இவண்
**தமிழ்நாடு ஆதிதிராவிடர்
மற்றும் மலைவாளர் கழகம்
தமிழ்நாடு**



படிப்பகம்

www.padippakam.com

# திராவிடக் கட்சிகளின் தமிழ்த் துரோகம்

## சேஷன் எதிர்ப்புப் போராட்டத்தின் மறுபக்கம் திராவிட இயக்கங்களின் துரோகங்கள் நிரம்பியது

தலைமைத் தேர்தல் கமிஷனர் சேஷனைத் தமிழ்நாட்டுக்குள் நுழையவிடாமல் துரத்தித் துரத்தி "அடிக்கின்றன" திராவிடக் கட்சிகள். "தமிழர்களின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும், தமிழர் தலைவர் பேரறிஞர் அண்ணாவையும் இழிவுபடுத்தி விட்டார்" என்பது சேஷன் மீதான குற்றச்சாட்டு. மதுரை மாவட்ட ஆட்சியாளர் என்கிற முறையில் அன்று இந்தி எதிர்ப்பு போராட்டத்தை காட்டுமிராண்டித்தனமாக ஒடுக்கியும் இன்று அப்போராட்டத்தை இழிவுபடுத்தியும் வருகிறார் பார்ப்பன - பாசிச சேஷன். ஆனால் திராவிட இயக்கத் தந்தை ஈ.வெ.ரா. அதே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை கடுமையாக எதிர்த்து அவதூறு செய்தார்; அண்ணாதுரை காட்டிக் கொடுத்து துரோகமிழைத்தார் என்பதுதான் உண்மை. இந்த உண்மையை மூடிமறைத்து தமிழின் பெயராலும் தமிழினத்தின் பெயராலும் திராவிட இயக்கத்தினர் தொடர்ந்து அரசியல் ஆதாயம் அடைந்து வருகின்றனர். சேஷன் எதிர்ப்புப் போராட்டத்தின் மறுபக்கம் திராவிட இயக்கங்களின் துரோகங்கள் நிரம்பியது.

திராவிட இயக்கத்தின் உயிர் மூச்சென்று சொல்லப்படுபவை மூன்று உரிமைகள் - தமிழ் இன உரிமை; தமிழ் மொழி உரிமை; வகுப்புரிமை ஆகியன.

"அவர்கள் பேசுவதில் பத்தில் ஒன்பது பொய். மீதி ஒன்றும் திரிக்கப்பட்டது" என்று திருத்தல்வாதிகளைப் பற்றி லெனின் சொன்னார். இது திராவிட இயக்கத்தினருக்கும் பொருந்தும்.

அரசியல் ஆதாயத்துக்காக தமிழ் இன உரிமையையும் மொழி உரிமையையும் காட்டிக் கொடுத்து பச்சை துரோகம் செய்துள்ளார்கள் என்பதே அவர்களின் வரலாறு; இருந்தாலும் இன, மொழி உரிமை தங்களின் உயிர் மூச்சென்று இன்னமும் புளுகி வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான வகுப்புரிமை என்பதை பார்ப்பனரல்லாத மேல்சாதி, மேட்டுக்குடி வகுப்புரிமை என்பதாகத் திரித்து விட்டார்கள்.

இதற்கு திராவிட இயக்கத்தின் தந்தையான பெரியார் ஈ.வே.ரா. முதல் அதன் வாரிசுரிமை கோரி களத்தில் புதிதாகக் குதித்துள்ள வை.கோ. வரையில் யாரும் விதிவிலக்கல்ல. இப்படிச் சொல்வதற்காக அந்த இயக்கத்தினர் மட்டுமல்ல, பெரியாரைத் தமது சித்தாந்த குருவாக ஏற்றுக் கொண்டு புறப்பட்டிருக்கும் இனவாதக் குழுக்களும் கூட நம்மீது பாய்வார்கள்; நம்மீது பார்ப்பன முத்திரை குத்துவார்கள்; துரோகப்பட்டம் கட்டுவார்கள். ஆனால் இப்படிச் செய்வதைத் தவிர நாம் முன் வைக்கும் சான்றுகளுக்குத் தகுந்த பதிலேதும் அவர்களால் கூறமுடியாது.

சூத்திரன் என்கிற முறையில் அடக்கி ஒடுக்கிப் பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமையாக வகுப்புரிமை இட ஒதுக்கீடு கோரிக்கை நியாயமாகிறது. ஆனால் திராவிட இயக்கத்தின் முன்னோடிகளான நீதிக் கட்சியின் மேல்சாதி, மேட்டுக்குடியினர் - முக்கியமாக சத்திரிய, வைசிய சாதியினர் - தாம்தான் சூத்திரர்கள் என்று சாதித்து, பார்ப்பனர்களுடன் போட்டியிட்டு அதிகார அரசியலில் பங்கு கோரிப் பெற்றனர். பின்னர் வந்த திராவிட இயக்கத்தினரும் பார்ப்பனர் அல்லாதார் அனைவரும் சூத்திரர்தாம் என்று திரித்துச் சொல்லி அதே மேல் சாதி மேட்டுக் குடியின் நலன்களையே முன்னிறுத்தினர். இந்த ஏற்பாட்டினால் ஒருசில மேல்சாதிகளே ஆதாயம் அடைந்தன என்பதை சட்டநாதன் கமிசன் மற்றும் மண்டல் கமிசன் ஆய்வுரைகள் எடுத்துச் சொல்லியும் கருணாநிதி தலைமையில் திராவிட இயக்கம் அதே கொள்கையைப் பற்றி நின்றது. இடையில் இட ஒதுக்கீட்டிற்குத் தகுதியற்றவை என்று தள்ளி வைக்கப்பட்டிருந்த மேல்சாதிகளையும் சூத்திர சாதிகள் - பிற்பட்டவர்கள் என்று சேர்த்துக் கொண்டனர். பிற்படுத்தப்பட்ட சாதிகள் நூற்றுக் கணக்கிலானவை என்று பட்டியல் இருப்பினும் ஒரு சில சாதிகள், அதிலும் சில மேல் தட்டு வர்க்கத்தினரே இந்த "வகுப்புரிமை"யினால் பயனடைகின்றனர் என்று ஆய்வுகள் பலவும் எடுத்துக் காட்டியும் அவர்களின் நலன்களையே எப்போதும் திராவிட இயக்கத்தினர் முன்னிறுத்துகின்றனர்.



1965-இல் மாணவர் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உச்சநிலை எட்டியபோது, அது தீயசக்திகளின் கைகளுக்குப் போய் விட்டது, உடனே நிறுத்த வேண்டும் என்றார், அண்ணா.

1938 இறுதியில் வேலூரில் நடந்த மாகாணத் தமிழர் மாநாட்டில் "தனித் தமிழ்நாடு" திட்ட விவாதம் நடத்தி அதற்கான பணியைத் துவக்கி 1939 இறுதியில் விளக்க விழாவும் நடத்தினர், திராவிட இயக்கத்தினர்; 1940 - திருவாரூர் நீதிக் கட்சி மாகாண மாநாட்டில் பெரியார் தலைமையில் "திராவிட நாடு" கோரிக்கைத் தீர்மானம் நிறைவேற்றி திட்டவட்டமான விளக்கமும் அளித்தனர். நீதிக்கட்சியானது திராவிடர் கழகமாக மாறிய 1945 சேலம் மாநாட்டிலும் அதன் பிறகு நடந்த திருச்சி மாநாட்டிலும், 1949 இல் தி.மு.க. நிறுவப்பட்டபோதும் அதன் பிறகு 1961 வரை நடந்த ஒவ்வொரு மாநாட்டிலும் "திராவிட நாடு" கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெரியாரின் "விடுதலை" ஏட்டின் மூல முழக்கமாக முதலில் "திராவிட நாடு, திராவிடருக்கே" என்றும் பிறகு "தமிழ்நாடு தமிழருக்கே" என்றும் தாங்கி வந்தது. பெரியார் உணர்ச்சி வசப்பட்டுப் பேசும்போது மட்டும் இதை நினைத்துக் கொண்டு விளக்கமும், உறுதி மொழியும், முழக்கமும் போட்டார். ஆனால் இதை அடைவதற்கான வழிவகை நடைமுறை எதுவும் பெரியாரிடம் இருந்ததில்லை. அவர் "பச்சைத் தமிழர்" ஆட்சியைக் காப்பது, அதன் மூலம் அரசியல் செல்வாக்குச் செலுத்துவது என்ற கொள்கையை மேற்கொண்டு தனது தன்னுரிமைக் கோரிக்கைக்கு சமாதி கட்டி விட்டார். தனது இயக்கம் ஒரு அரசியல் இயக்கமல்ல; சமூக-பண்பாட்டு இயக்



படிப்பகம்

www.padippakam.com

கம்தான் என்கிற அவரது பிரகடனமே இதை உறுதிசெய்து விட்டது. "தமிழ்நாடு தமிழருக்கே!" - "தமிழர் தன்னுரிமை" என்பது அடிப்படையில் ஒரு அரசியல் முழக்கம்; அரசியல் இயக்கமின்றி அதை அடைந்திட முடியாது என்பது அவருக்கு நன்கு தெரியும்.

1949-ல் தி.மு.க. நிறுவிய நாளில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 17- அன்று திராவிட நாடு விடுதலை விழாவாகக் கொண்டாடினர். ஆனால் இப்போது நடத்தும் முப்பெரும் விழாக்களில் ஒன்றாக, "திராவிட நாடு விடுதலை' யை எடுத்துவிட்டு கழக நிறுவன விழா மட்டுமே உள்ளது. 1960-இல், சி.பி. ராமசாமி அய்யர் "தேசிய ஒருமைப்பாடு குழு" ஒன்றமைத்து அதன் ஆய்வறிக்கை என்கிற பெயரில் "பிரிவினைத் தடை சட்டம்" இயற்றும்படி கோரினார். பார்ப்பனர் முன் முயற்சியில் அது சட்டமாக்கப் பட்டவுடன் தி.மு.க வெறும் முணுமுணுப்புக்கூட இல்லாது அதற்கு அடிபணிந்தது. கழகத்தின் அணிகளையோ, பொதுக் குழுவையோ கூட கூட்டவில்லை; சில சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளடங்கிய செயற்குழுவைக் கூட்டி பின்வருமாறு கழகத்தின் குறிக்கோள் என்ற விதியைத் திருத்திவிட்டனர். "தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும் இந்திய அரசுரிமை, ஒருமைத்தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றிற்குள் இயன்ற அளவு கூடுதலான அதிகாரங்களைப் பெற்று நெருங்கிய திராவிடக் கூட்டமைப்பாக நிலவப் பாடுபடுவது."

அப்போதே, அண்ணாதுரை காலத்திலேயே இந்திய ஒருமைத்தன்மை ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாநில சுயாட்சி கூடக் கிடையாது, கூடுதல் அதிகாரம் தான் கோரிக்கை; திராவிடக் கூட்டமைப்பு என்பது "திராவிட நாடு" என்பது தொடர்வதான வெறும் பிரமையூட்டுவதற்குத்தான். ஆகவே பின்னாளில் கருணாநிதியும், எம்.ஜி.ஆரும்தான் துரோகம் செய்துவிட்டார்கள் என்பது சரியல்ல.

பிரிவினைத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்து 1963 ஏப்ரலில் ஓர் ஆட்சி மொழிசட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது. அதன்படி "1965 ஜனவரி 26 முதல் இந்தி மொழி மட்டுமே ஆட்சி மொழியாகும்; இந்திக்குத் துணையாக ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம்" என்றானது. இச்சட்டத்தின் மூன்றாவது விதியின்படி ஆங்கிலத்தின் இடத்தை இந்தி ஆக்கிரமித்துக் கொள்ளும்; குடியரசுத் தலைவர் ஒப்புதலுடன் அரசினர் வெளியிடும் இந்தி மொழி பெயர்ப்பு, மத்திய அரசு சட்டங்கள், ஆணைகள், கட்டளைகள், நெறிகள், துணைச்சட்டங்கள் முதலியவைதாம் அதிகார பூர்வமானவையாகக் கருதப்படும். இதேபோல இவற்றின் இந்தி மொழிபெயர்ப்புகளை அரசிதழ்களில் வெளியிட்டால்தான் அவை அதிகார பூர்வமானவையாகக் கருதப்படும். மற்றபடி மாநிலங்கள் அவற்றின் தாய் மொழியிலோ, ஆங்கிலத்திலோ வெளியிடுபவை அதிகார பூர்வமானவையாக ஏற்கப்படமாட்டா என்றானது.

அப்போதிருந்து இந்தச் சட்டம்தான் அமுலில் இருக்கிறது. ஆனால் 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக, "இந்தி பேசாத" மாநிலங்களில் இது உடனடியாக அமுலுக்கு வருவது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது; அதேசமயம் இதை அமுலாக்குவதற்காக அவ்வப்போதும், மறைமுகமாகவும், மெதுவாகவும் இந்தித் திணிப்பு செய்துவருகிறார்கள். இந்த நிலை திராவிட இயக்கத்தினரின் அரசியலுக்கு மிகவும் வசதியானதாகத் தான் இருக்கிறது. ஏனென்றால் இந்தித் திணிப்பில் இருந்து நிரந்தரமான பாதுகாப்பு தேடித் தருவதோ, தமிழை ஆட்சிமொழி ஆக்குவதோ அவர்களுடைய நோக்கமே கிடையாது. இதுவரை திராவிட இயக்கத்தின் கோரிக்கை எல்லாம் ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டும்; தமிழ் மக்களாக ஏற்கும்வரை இந்தி ஆட்சி மொழியாகவும் கூடாது; திணிக்கவும் கூடாது என்பது தான்.

பிரிவினைத் தடைச் சட்டம் வந்து, திராவிட நாடு கோரிக்கையைக் கைவிடும் வரை இந்தியாவுக்கு என்று ஆட்சி மொழி எதுவும் தேவை இல்லை; இணைப்பு மொழியாக ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பதுதான் திராவிட இயக்கக் கோரிக்கை. அதற்கு அவர்கள் சொன்ன காரணம், "இந்தியப் பேரரசில் ஒரு பகுதியாக அடக்கி வைக்கப்பட்டுள்ள திராவிடம் விடுதலை பெற்று, திராவிட கூட்டாட்சி எனும் தனியரசாக மலர வேண்டும் எனப் பணியாற்றி வரும் திராவிட முன்னேற்றக் கழகம், துணைக் கண்டமாக உள்ள இந்தியா முழுமைக்கும் ஒரு ஆட்சி மொழி தேவை என்ற தத்துவத்தை மறுக்கிறது" (மதுரை மாநாட்டுத் தீர்மானம் 1961 ஜுலை 13-16). ஆட்சி மொழித் தத்துவமே போலியானது; இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் இந்தி மொழி ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர டில்லி ஆதிக்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்று கண்டித்தது.

ஆக, பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையும் — திராவிட இயக்கத்தின் திராவிட நாடு கோரிக்கையும் — மொழி உரிமையும் ஒன்றோடு ஒன்று இணைந்தது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். ஆனால் தன்னுரிமை - தனிநாடு கோரிக்கையைக் கைவிட்டு இந்திய அரசின் ஒருமைத் தன்மையை ஏற்றுக் கொண்டபிறகு மொழி உரிமைப் போராட்டங்கள் எல்லாம் நிழல் சண்டைதான். 'அதுவும் தமிழ் ஆட்சி மொழி ஆகவேண்டும் என்பதற்காக அல்ல. இந்தி திணிப்புக் கூடாது; ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டும்; அதற்கான நேருவின் வாக்குறுதி காப்பாற்றப்பட வேண்டும் என்பது தான்.

இந்தி ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றிய 1963-ஆம் ஆண்டு முதல் 1969 வரை ஆறாண்டுகள் அதற்கு எதிராகப் போராடப் போவதாக தி.மு.க. அறிவித்தது. தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் இந்தி ஆட்சிமொழிச் சட்ட எரிப்பு மற்றும் அறவழி மறியல் போராட்டங்கள்; அண்ணாதுரை, கருணாநிதி உட்பட ஆயிரக்கணக்கான தலைவர்களும், அணிகளும் சிறையிலடைக்கப்பட்டனர். அதன் தொண்டர்கள் இருவர் சிறையிலேயே



தமிழகம் வந்த சேஷனை முற்றுகையிட குழுமிய அ.தி.மு.க.வினர்.



படிப்பகம்

www.padippakam.com

மாண்டனர். இறுதியாக 1965 ஜனவரி 26 குடியரசு நாளை - இந்தி ஆட்சி மொழியாகும் துக்க நாளாக அறிவித்து கருப்புக் கொடிகள் ஏற்றி, கருப்புச் சின்னமணிந்து கடும் அடக்குமுறைகளை எதிர்கொண்டு போராடினர். ஆக்கபூர்வமான பணிகளினால் மொழியை வளர்த்தும், பல போராட்டங்கள், பிரச்சாரங்களினால் மொழிப் பற்றையும், இன உணர்வையும் ஊட்டித் தமிழ் மக்களை விழிப்புறச் செய்ததில் திராவிட இயக்கத்துக்குரிய தனிச் சிறப்பான பங்கை உரிமை பாராட்டிக் கொள்வதில் அதற்கு நியாயமிருக்கிறது. ஆனால் அது அந்தத் துக்க நாள் போராட்டத்தோடு முடிந்து போனது.

மொழி உரிமைப் போராட்டத்தில் தீக்குளித்த தி.மு.க. தியாகிகளின் கல்லறையிலேயே திராவிட இயக்கத்தினர் தமது மொழிப் பற்றையும் உணர்வையும் வைத்துச் சமாதி கட்டி விட்டனர். மொழிப் போரின் பலன்களை 1967 பொதுத் தேர்தல்களில் அறுவடை செய்துகொள்வது என்று குறிவைத்தபோதே துரோகப் பாதையில் நடைபோடத் துவங்கி விட்டனர்.

மொழிப்பற்று - உணர்வால் எழுச்சியுற்ற மாணவர்கள் 1965 ஜனவரி 25-ம் நாளையே மாநிலந் தழுவிய துக்கநாளாகக் கடைபிடித்து, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு "இந்தி அரக்கி" எரிப்பு, ஊர்வலம் எனப் பெரும் போராட்டத்தில் இறங்கினர். பல இடங்களில் கட்சி சாரா மாணவர்கள் தன்னெழுச்சியாகவும், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தினரும் இவற்றுக்குத் தலைமையேற்றனர். அன்றைய காங்கிரசு - பக்தவச்சலம் அரசு மாணவர்களைக் கைதுசெய்தும், காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கியும், துப்பாக்கிச் சூடுகள் நடத்தி பல மாணவர்களைப் படுகொலை செய்தும் மொழிப் போரை அடக்க முயன்றது. அடிபணிய மறுத்த மாணவர்கள் பிப்ரவரி 9 முதல் அஞ்சல் நிலைய மறியல், இரயில் நிறுத்தம், பொதுவேலை நிறுத்தம், இந்தி பிரச்சாரப் புத்தகங்கள் எரிப்பு என அமைதி வழிப் போராட்டத்திற்குத் திட்டமிட்டு இறங்கினர். தமிழகத்தின் பல இடங்களிலும் போலீசு துப்பாக்கிச் சூடு நடத்தி மிருகத்தனமாக மாணவர்களைப் படுகொலை செய்தது; அதைக் கண்டு கொதித்தெழுந்த மக்கள், மாணவர்களோடு மொழிப்போரில் குதித்தனர்; போலீசுக்கெதிரான தாக்குதலிலும், தபால், இரயில் நிலையங்கள், பஸ் - இரயில்களுக்குத் தீயிடலிலும் இறங்கினர். அதுவரை கண்டிராத மாபெரும் எழுச்சியைத் தமிழகம் கண்டது.

இந்த நேரத்தில் மாணவர்கள் - மக்களோடு களத்தில் நிற்கவேண்டிய தி.மு.க.; பின்னாளில் மொழிப் போருக்கும் தியாகத்துக்கும் உரிமை பாராட்டிக் கொள்ளும் தி.மு.க, "இந்தப் போராட்டத்துக்கும் எங்களுக்கும் தொடர்பு கிடையாது; ஜனவரி 26 துக்க நாள் கடைப்பிடித்ததோடு எங்கள் போராட்டம் முடிந்து போனது!" என்று பகிரங்கமாக அறிவித்து துரோகமிழைத்தது; கழகத்தின் முக்கியப் பிரமுகர்கள் பலர் "மன்னிப்பு" எழுதிக் கொடுத்துவிட்டு சிறையில் இருந்து விடுதலையடைந்தனர். இந்தத் துரோகத்துக்கு தி.மு.க. தலைமை அதிகாரபூர்வ ஒப்புதல் அளித்த வரலாறு பின்வரும் காரணம் கூறியது:

"போராட்டம் பலாத்கார உருவெடுத்து வளரும் அபாயத்தைத் தடுத்து நிறுத்த நாட்டில் அமைதியான சூழ்நிலை உண்டாக்கத் தி.மு.க தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் போராட்டத்தை நிறுத்தி நாட்டில் அமைதியையுண்டாக்கும்படி மாணவர்களையும் பொதுமக்களையும் கேட்டுக் கொண்டார். அவரது முயற்சி பயனற்றதாகியது"

> 1965 மாணவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று எழுதிக் கொடுத்துவிட்டு சிறையில் இருந்து வெளியேறினர் தி.மு.க.வினர்.

பிப்ரவரி 12 பொது வேலை நிறுத்தத்தை நடத்தியே தீருவது என்று மாணவர்கள் உறுதியாக இருந்தனர். அதை அடக்கி ஒடுக்க இராணுவம் வரவழைக்கப்பட்டது. "போராட்டம் மாணவர் கையிலிருந்து சமூக விரோதிகள் கைக்குச் சென்றுவிட்டது" என்று கூறி கண்டதும் கடும் உத்திரவு போட்டது காங்கிரசு இந்தி ஆதிக்க அரசு. பாண்டியிலும், தமிழ்நாட்டிலும் நடந்த துப்பாக்கி சூட்டிற்கு மேலும் பலர் பலியாயினர். அப்போது காங்கிரசின் எண்ணத்திற்கும் நோக்கத்துக்கும் இசைவாகவே அண்ணாதுரை செயல்பட்டார்.

"மாணவர் கிளர்ச்சியில், தீய சக்திகளுக்கு இடமளிக்கப்பட்டதைக் கண்ட அறிஞர் அண்ணா அவர்கள் மிக்க மன வேதனை அடைந்து ஒருமுறைக்கு இருமுறை அறிக்கைகள் மூலம் அமைதியைக் காக்க முயற்சித்தார். மாணவர் தலைவர்களை அழைத்து விவாதித்தார். இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தத் தானும் தன்னுடைய கட்சியும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக வாக்களித்தார். நாட்டில் நடைபெற்றுள்ள வன்முறைச் செயல்களால் ஏற்பட்டுள்ள இழப்புகளை எடுத்துக்காட்டி அறிவுரை வழங்கினார். மாணவர் தலைவர்களும் அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரையை ஏற்று இந்தி ஆதிக்க எதிர்ப்பு குழுவில் ஆலோசனை செய்வதற்கு முற்பட்டனர்.

மாணவர் போராட்டத்தின் காரணமாகச் சிறை செய்யப்பட்டுள்ள மாணவர் தலைவர்கள் பெரும்பாலோர் சிறையில் இருந்தனர். எஞ்சியுள்ள சிலர் கூடி மாணவர்களின் "நேரடி நடவடிக்கை நிறுத்தப்பட்டது" என்று முடிவு எடுத்தனர். எல்லா தினசரி இதழ்களிலும் இவை வெளிவந்தன. தி.மு. கழகத் தோழர்கள் நாடெங்கும் சென்று அமைதிக்கான வழி வகைகளைக் கண்டனர்; பத்து நாட்களுக்குப் பிறகு நாட்டில் அமைதி ஏற்பட்டது." (தி.மு.க வரலாறு: டி.எம். பார்த்த சாரதி, பக்:520,522).

எவ்விதத் தீர்வும் காணாமல், "இந்தித் திணிக்கப்படமாட்டாது" என்கிற காங்கிரசின் வழக்கமான வாக்குறுதியை மட்டும் நம்பி, மொழிப் போராட்டத்தை விலக்கிக் கொள்ளும்படி செய்த அண்ணாதுரையும் அவரது கட்சியும் மாணவர்களுக்கு அளித்த வாக்குப்படி இந்தி ஆதிக்கத்தைத் தடுக்கும் பொறுப்பை எந்த அளவு நிறைவேற்றினார்கள்?

எதிர்க்கட்சியாக இருந்தபோது, தமிழை ஆட்சி மொழியாக்கும் தீர்மானத்தை மதியழகன் கொண்டு வந்தார்; நிறைவேறவில்லை. அதன் பிறகு சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெற்றபோதும், மத்தியில் கூட ஜனதா அரசுகளில் பங்கேற்றபோதும் தமிழை ஆட்சி மொழி ஆக்கவும், இந்தித் திணிப்பைத் தடுக்க நேருவின் வாக்குறுதியைச் சட்டமாக்கி நிரந்தரத் தீர்வு காணவும் எந்தவொரு பாரதூரமான முயற்சியும் மேற்கொள்ளவில்லை. மத்திய அரசு தொடர்ந்து பல முறை, பல வழிகளில் இந்தித் திணிப்பு செய்து கொண்டுதான் வருகிறது. திராவிடக் கட்சிகள் மத்திய அரசு, ஆளும் கட்சிகளுடனான உறவைப் பொருத்து, அதைச் சகித்துக் கொள்கின்றன; அல்லது சட்டபூர்வமாக அடையாள எதிர்ப்பை மட்டுமே காட்டுகின்றன. ஆளும் கட்சியாக இருக்கும்போது இந்தித் திணிப்பை எதிர்க்காத அதே சமயம் எதிர்க் கட்சியாக இருக்கும்போது, தனது அரசியல் வலுவைக் கூட்டிக் கொள்ளப் போராடுகின்றன. அண்ணாதுரை காலத்திலேயே 1968 ஜனவரியில் மீண்டும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மாணவர்கள் துவங்கியபோது அவர், அதை அடக்கினார். கருணாநிதி, எம்.ஜி.ஆர். கழகங்கள் "இந்தி ஆட்சிமொழி" அமுலாக்கத்துக்குத் துணைபோன சம்பவங்களும் உண்டு. கருணாநிதி கழகத்தினர் இந்தித்



படிப்பகம்

www.padippakam.com



இந்தியை எதிர்த்து மாணவர்களின் எழுச்சிகர இயக்கம்; பெரியார் முதல் திராவிட கொழுந்துகள் வரை இதை அவதூறு செய்தனர்

திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தை, பக்தவச்சலம் செய்ததைப் போலவே எம்.ஜி.ஆர். கடுமையாக ஒடுக்கினார்.

திராவிட இயக்கத்தின் தாய்க் கழகமான திராவிடர் கழகத்தின் மொழி உரிமைத் துரோகம் இன்னும் மோசமானது. 1937-இல் இராசாசி தலைமையிலான காங்கிரசு அரசு இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியது. அப்போது ஜனநாயக பூர்வமாகவும், உறுதியாகவும் மக்களைத் திரட்டி கட்டாயப்பாட உத்திரவு விலக்கிக் கொள்ளும்வரை, முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தலைமையேற்று வழி நடத்தியவர் பெரியார் ஈ.வெ.ரா. அதற்காக மூன்றாண்டு சிறைத் தண்டனையும் பெற்றார். அதேபோல, 1946 இல் இரண்டாவது இந்தித் திணிப்புப் போராட்டத்தையும் வெற்றிகரமாக நடத்தினார். இந்தி எதிர்ப்புக்குத் தானே முதல் களப்பலியாவதாகவும் அதனால் மணியம்மையைத் திருமணம் செய்து கொண்டு கழகத்துக்கு வாரிசாக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகவும் கூடச் சொன்னார். ஆனால் இந்தி ஆட்சி மொழியானபோது அதற்கு எதிரான போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி தீவிரமாகச் சாடினார்.

(1965 ஜன 25-பிப் 12) ''அண்மையில் நடந்த அராஜக நாசவேலைகள் மொழி பற்றியதல்ல; காங்கிரசுக் கட்சியின் சமதர்மத் திட்டத்தைக் குலைக்கவே ''நடந்தவை என்று கி. வீரமணி தலைமையில் கூடிய தஞ்சை மாவட்ட தி.க. செயற்குழு தீர்மானம் போட்டது. ''இந்தி எதிர்ப்பு பெயரால் நடைபெற்ற கலவரங்கள், காலித்தனங்களைப் பார்ப்பனர்களும் பணக்காரர்களும் அவர்களது அரசியல் காலிகளும் நாட்டில் அராஜகத்தைக் கிளப்பிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் கிளப்பிவிட்டதே தவிர மற்றபடி அது மொழி பற்றிய உண்மையான அச்சத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. சமதர்மத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தக் காங்கிரசு ஆட்சியைக் கவிழ்க்கும் உள்நோக்கத்தைக் கொண்டதேயாகும் என்று இக்குழு கருதுகிறது''

''மீண்டும் அம்மாதிரிக் காலித்தனங்களும் கலவரங்களும் வன்முறைகளும் தலைதூக்கினால் அவற்றை சமாளிக்கவும் பொதுச் சொத்திற்கு ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்க்கவும் அரசாங்கத்தை மட்டுமே நம்பியிராமல், ஆங்காங்கு உள்ளவர்களைக் கொண்டு பொதுச் சொத்துக் காப்புக் கமிட்டி, பொது ஒழுங்கு பராமரிப்புக் குழு போன்றவைகள் அமைத்தல் வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்களது அறிவுரையை செயலாக்க கழகத் தோழர்கள் வழிவகை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறது'' (விடுதலை '65 ஏப் 8)

இதையும் விஞ்சிவிடும் வகையில் திராவிட இயக்கத்தின் தந்தையான பெரியார் ஈ.வெ.ரா இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி, இழிவுபடுத்தி அவதூறும் செய்தார் என்பதுதான் மிகவும் வியப்புக்கும் அதிர்ச்சிக்கும் உரியது. அதற்கு பின்வருவது ஒருசிறு சான்று.

''சமீபத்தில் ஜன 26ம் தேதி முதல் பிப்ரவரி 12-ம் தேதி வரை என்று நினைக்கிறேன்; நாட்டில் மிகப் பெரிய காலித்தனமும் அராஜகமும் நடைபெற்றது. ரயில் நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கோர்ட்டுகள் கொளுத்தப்பட்டன;... எனது வண்டியும் திருச்சியில் தாக்கப்பட்டது. வீதியில் எரிந்து கொண்டிருந்த லைட்டுகள் யாவும் நொறுக்கப்பட்டது.... உங்களிடம் சொல்லப்பட்ட காரணம் எல்லாம் இந்தி ஆட்சி மொழியாகிறது; இனி நீங்கள் உங்கள் மனைவியிடம் இந்தியில் தான் பேச வேண்டும். தாயை மாதாஜி என்றுதான் அழைக்க வேண்டும். அம்மா என்று அழைத்தால் தண்டிப்பார்கள். கடைகளில் சென்று சாமான் வாங்க வேண்டுமானால் இந்தியில்தான் கேட்க வேண்டும். இனி உங்கள் குழந்தைகள் இந்திதான் படிக்க வேண்டும். இந்தி படித்தால்தான் வேலை கிடைக்கும். வேலையில் உயர்வு வேண்டுமானால் இந்தி படிக்க வேண்டும். இனி இந்தி படிக்காமல் இந்த நாட்டில் இருக்க முடியாது என பல கற்பனை காரணங்களை மாணவர்களிடம் கூறி அவர்களை தூண்டிவிட்டு அவர்களோடு காலிகளையும் கூலிகளையும் கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பவனையும் சமூக விரோதிகளையும் கலக்கவிட்டு மாணவர்களின் பெயரை உபயோ



படிப்பகம்

www.padippakam.com

கப்படுத்திக் கொண்டு இந்தக் காலிகள் செய்தவைதான் இத்தனை நாசமும் சேதமும்; இவைகள் மாணவர்களால் செய்யப்பட்டதல்ல.

ஒரு ஆட்சியைக் கவிழ்க்க மற்ற என்னென்ன காரியங்களை செய்ய வேண்டுமோ அவற்றைத் திட்டம் போட்டு செய்திருக்கிறார்கள். இதை இப்படியே விட்டால் வரும் தேர்தலில் காங்கிரஸ் நிச்சயம் தோல்வியடையும் என்பதோடு காங்கிரஸ் பெயரால் நிற்பவர்கள் தாங்கள் ஜாமீன் தொகையை வாங்குவது கூட சிரமமாக இருக்கும்.

மக்களிடத்திலே அரசாங்கத்திற்கு விரோதமான எண்ணத்தைத் தூண்டி மக்கள் மனத்திலே அரசாங்கத்தின் மீது வெறுப்பு ஏற்படும் படியாக செய்து விட்டார்கள். என்னிடமே சிலர் நீங்கள்தானே முதன்முதலில் 1938-ல் இந்தி கூடாது என்று இந்தி எதிர்ப்பைத் துவக்கினீர்கள்; இப்போது மக்கள் இந்தியை எதிர்க்கத் திரும்பி இருக்கும்போது நீங்கள்- இந்தியை எதிர்க்காமல் ஆதரிக்கிறீர்களே என்று கேட்கிறார்கள்.

தோழர்களே, நீங்கள் நன்கு சிந்திக்க வேண்டும்; இந்தியில் உங்களுக்கு வந்த கேடு என்ன? தமிழகத்தில் இந்தி எங்கு வந்திருக்கிறது? எந்தப் பள்ளியில் இந்தி கட்டாயப் பாடமாக இருக்கிறது? இந்திப் படித்தால்தான் உத்யோகம் என்று எங்கே இருக்கிறது? இந்தியில் மார்க் வாங்கினால்தான் பரீட்சையில் பாஸ் செய்ய முடியுமென்று எங்கேயாகிலும் சொல்கிறார்களா என்று கேட்டால் இப்படிப்பட்ட கட்டாயம் இல்லாமலே இவ்வளவு தூரம் செய்தார்கள் என்று திருப்பிக் கேட்கிறார்களேயொழிய உண்மை நிலையை இன்னும் மக்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

....இந்தி வந்துவிட்டது என்பதானது (பிசாசு, பேய், பூதம் இருக்கிறது என்பதுபோல்) பொய்மையான, கற்பனையான ஒரு நிலையேயாகும். இதைக் கூறியே மக்களை ஏமாற்றி விட்டார்கள்.

முதல் மந்திரி திரு. பக்தவத்சலானர் கூட நடைபெற்ற கிளர்ச்சி காலித்தனம் இவைகளை செய்தவர்கள், பின்னிருந்து தூண்டிவிட்டவர்கள் பார்ப்பனர் என்று சொல்ல பயப்படுகிறார்கள். கண்ணீர் துளி செய்தான், பணக்காரன் செய்தான், மில் முதலாளி செய்தான் என்றுதான் சொல்கிறாரே ஒழிய பார்ப்பான் செய்தான் என்று சொல்லவே அஞ்சுகிறாரே! அவர் மட்டுமல்ல சாதாரண காங்கிரஸ்காரர்களும் கூட அப்படியே பயப்படுகின்றனர்.

காங்கிரசு போய் வேறு யாராவது வந்துவிட்டுப் போகட்டும் என்கிறார்கள்; இது மாறினால் அடுத்து ஆட்சி க.து.விடம் போனாலும் அனார்க்கிஷம் வந்தாலும் பரவாயில்லை. எப்படியாவது போகட்டும். இந்த ஆட்சிப் போனால் அடுத்தது வருவது பார்ப்பானுடைய ஆட்சியாகத்தானிருக்கும். பார்ப்பான் வரவில்லை என்றாலும் அவனுடைய அடிமைகளே அவன் சொல்படி ஆட்சி செய்வான். கண்ணீர்த் துளியின் மூலவரான அண்ணாதுரை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இராஜாஜியின் சொற்படி அவர் அறிவுரைப்படிதான் ஆட்சி நடத்துவோம் என்று சொல்லியிருக்கிறார். காங். ஒழிந்து விட்டது என்று கொஞ்சம் சிந்தனை செய்து பாருங்கள்! என்ன நேரும். அடுத்து மனுதர்ம (ஆச்சாரியாரின்) ஆட்சிதானே வரும். மக்களுக்குப் பாதுகாப்பே இருக்காதே!

....தோழர்களே, உங்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1857-ல் நடைபெற்ற சிப்பாய் கலகத்திற்கும் தற்போது இந்தியின் பெயரால் நடைபெற்ற கலவரம், காலித்தனங்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. சிப்பாய் கலகத்தைத் தூண்டி விட்டவன் பார்ப்பான். இதை நான் சொல்லவில்லை. அண்ணாமலை பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டிருக்கும் "இந்திய வரலாறு" என்ற புத்தகத்தில் இருக்கிறது. அதை எழுதியவன் பார்ப்பான் தான். அவனால் உண்மையை மறைக்க முடியவில்லை. வெள்ளைக்காரன் பள்ளிக்கூடம் வைக்கிறான். மூட நம்பிக்கை செய்கைகளை தடைசெய்கிறான். பெண்களையெல்லாம் படிக்க வைக்கிறான். கல்வியை வளர்க்கிறான். இது பார்ப்பன சமுதாயத்தை அழிக்கும் என்று எண்ணி சிப்பாய்களிடம் பொய்யான, சமூக விரோதமான மத விரோதமான, கருத்துக்களை சொல்லித் தூண்டினானோ அப்படியேதான் தற்போது காமராசர் வந்ததும் மிக வேகமாக யாருமே நினைத்துப் பார்க்கக் கூட முடியாத வகையில் நடப்பதற்கு எங்கு பார்த்தாலும்... (காமராஜரின் கல்விப் பணி விளக்கப்படுகிறது - கட்டுரையாளர்)... தமிழகத்தில் இல்லாத இந்தியை இருப்பதாகச் சொல்லி இந்தக் கலவரத்தைத் தூண்டினான்.

**1965 மாணவர் இந்தி எதிர்ப்பு போராட்டம் காலித்தனம், அராஜகம், கலவரம், வன்முறை, பார்ப்பனர்கள் தூண்டிவிட்டு நடத்துவது; மக்கள் கமிட்டி அமைத்து எதிர்க்க வேண்டும் என்றார், பெரியார்.**

முன் நடந்த சிப்பாய் கலகத்திலும் பார்ப்பான் எவனும் பாதிக்கப்படவில்லை. தற்போது நடைபெற்ற இந்தக் கலவரத்திலும் பார்ப்பான் ஒருவன் கூட ஒரு சிறிது கூடப் பாதிக்கப்படவில்லை. செத்தவர்கள் அனைவரும் நம் தமிழ்மக்களே! நாசமடைந்த சொத்துக்கள் யாவும் தமிழர்களின் சொத்துக்களே!"

மொழிப் போராட்டம் முடிந்து 19-4-65 அன்று பெரியார் ஈ.வெ.ரா. காரைக்குடியில் ஆற்றிய உரை இது. போராட்டத்துக்கு முன்னும் பின்னும் அதை எதிர்த்து பெரியாரும் வீரமணியும் அவர்தம் கழகமும் செய்த "துரோகத்தனங்கள்" வெளியே தெரியக்கூடாது என்று அப்போதைய "விடுதலை" இதழ் தொகுதி எண் 1 பெரியார் நூலகத்தில் இருந்து அகற்றப்பட்டிருக்கிறது.

அரசியல் ஆதாயம் கருதி ஒரு ஆட்சியை ஆதரிப்பது என்று முடிவு செய்தால் அதற்கு எதிரான எல்லா போராட்டங்களையும் கொச்சைப்படுத்தி, பார்ப்பன முத்திரை குத்தி இழிவு படுத்துவதும் அவதூறு செய்வதும் பெரியாருடைய, அவரது வழியில் வீரமணியுடைய நடைமுறையாக உள்ளது. முதல் இந்திய சுதந்திரப் போராட்டம் முதல் இறுதிக் கட்ட சுதந்திர எழுச்சி வரை அனைத்தையும் இந்த வகையில்தான் பெரியார் அணுகினார். இதே அணுகுமுறைதான் இந்தி எதிர்ப்புப் போரின் போதும், கருணாநிதி அரசை எதிர்த்த நச்சல்பாரிப் புரட்சியாளர்களிடமும் பெரியார் மேற்கொண்டது; இன்று ஜெயலலிதாவின் பார்ப்பன - பாசிச ஆட்சியை எதிர்ப்பவர்களிடம் வீரமணி மேற்கொள்வது.

இன்றைய தலைமைத் தேர்தல் அதிகாரி சேஷன் அடிப்படையில் ஒரு பார்ப்பன-பாசிஸ்டு; இன்னொரு ஜெயலலிதா; இன்னொரு எம்.ஜி.ஆர் என்றும் கருதலாம். அவர் மதுரை மாவட்ட ஆட்சியாளர் என்கிற முறையில் "ஒரு தோட்டா கூட வீணாகக் கூடாது; ஒவ்வொரு தோட்டாவும் ஒரு தமிழனை பலி வாங்க வேண்டும்" என்று அன்று நேரடி எதிரியாக நின்று மொழி உரிமைப் போராட்டத்தை ஒடுக்கியவர்; இன்று அதைக் கொச்சைப்படுத்தி இழிவுபடுத்துகிறார். அவர் தமிழ் மக்களின், மொழியின் எதிரி என்பது பகிரங்கமாகத் தெரிகிறது. ஆனால் தமிழர் தன்னுரிமைக்கும், தமிழ்மொழிக்கும் தொடர்ந்து துரோகம் செய்து வரும் இந்தத் திராவிட இயக்கத்தவரை என்ன சொல்வது; என்ன செய்வது என்று தமிழினம் ஒரு இறுதி முடிவு செய்திட வேண்டும்.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# ரவுடி எம்.எல்.ஏ.-வைச் சிறை வைத்து அரசுப் பணியாளர்கள் போராட்டம்

பசும்பொன் மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் வி.எம். சுப்பிரமணியன் 19.12.94 அன்று பகல் 2.30 மணியளவில் சிவகங்கை கோட்ட வளர்ச்சி அலுவலகத் தலைமை எழுத்தரிடம் தனது அடியாட்கள் பத்துப் பேருடன் சென்று தொகுயில் பழுதான டி.வி., ரேடியோக்களை பற்றி கேட்டுள்ளார். அது தனிப்பிரிவு ஆகையால் ரேடியோ மேற்பார்வையாளர் அறையைக் காண்பித்து அவரிடம் சென்று கேளுங்கள் எனத் தலைமை எழுத்தர் வி.இராமநாதன் பதிலளித்துள்ளார். இதற்கு எம்.எல்.ஏ., ''இதுகூடத் தெரியாமல் ஹெட் கிளார்க்குக்கு என்ன சிறைக்கிற வேலையா? உனக்கெல்லாம் எவன்டா வேலை கொடுத்தது?'' என ஆளும் கட்சிக்கே உரிய திமிரோடு பொறுக்கித்தனமான வார்த்தைகளால் திட்டினார். அதிர்ச்சியடைந்த தலைமை எழுத்தர், ''மரியாதையாகப் பேசக் கற்றுக் கொள்ளுங்கள்'' என்று சொன்னதுதான் தாமதம் ''என்னடா உனக்கு மரியாதை வேண்டிக் கிடக்கு? நான் எம்.எல்.ஏ.டா! உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று சொல்லிக் கொண்டே முஸ்டியைத் தூக்கி தாக்குதல் தொடுக்க எத்தனிக்கவே அலுவலகத்திலிருந்த மற்ற அரசுப் பணியாளர்கள் தலைமை எழுத்தரை பத்திரமாக பாதுகாத்து வேறு அறைக்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

இச்செய்தி அரசுப் பணியாளர் மத்தியில் காட்டுத்தீ போல பரவியது. அரசுப் பணியாளர் சங்கத் தலைவர்கள் எஸ்.சுந்தரபாண்டியன், ப.ஹைதர் அலி, எஸ்.சந்திரசேகரன், ஏ.பி.கந்தசாமி, சுகுமாறன் முதலானோர் முன்னணிப் பாத்திரம் வகித்து பத்தே நிமிடங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்-பெண் பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திரட்டினர். அரசு அலுவல்கள் முடக்கப்பட்டன. எம்.எல்.ஏ.-வைக் கைது செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருந்தபோதே எம்.எல்.ஏ. தனது அடியாட்கள் 10 பேருடன் ஆட்சியர் அலுவலகத்தின் வேறொரு வழியாக உள்ளே நுழைவதைப் பார்த்தவுடன் ஆர்ப்பாட்டத்தை உடனே முடித்துக் கொண்டு அரசுப் பணியாளர்கள் அவர்களை விரட்டி சென்றனர். அதற்குள் அவர்கள் ஆட்சியர் அலுவலகத்திலுள்ள திட்ட அலுவலரின் அறையில் புகுந்து கொண்டனர். அவர்கள் வெளியே வரமுடியாதவண்ணம் அலுவலக மாடி முழுவதும் அரசுப் பணியாளர்கள் நெருக்கமாக அமர்ந்து ரவுடிகளை கைது செய்யக் கோரி முற்றுகைப்



போராட்டம் நடத்தினர். மாவட்ட ஆட்சியரும் போலீசும் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. என்பதால் கைது செய்யத் தயக்கம் காட்டி சண்டித்தனம் செய்யவே ஒரு கட்டத்தில் மாவட்ட ஆட்சியாளரின் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே செல்ல பணியாளர்கள் முயன்றனர். அதற்குள் பாதுகாவலர்கள், ஆட்சியாளரின் கதவுகளைப் பூட்டி பாதுகாப்பாக நின்று கொண்டனர்.

இதற்கிடையில் சிறை வைக்கப்பட்டிருந்த ஆளும் கட்சிக் குண்டர்கள் அறையில் கிடந்த நாற்காலிகளை உடைத்து அதன் கால்களையும், அவர்கள் தயாராகக் கொண்டு வந்திருந்த சோடா பாட்டில்களையும் உடைத்து ஜன்னல் வழியேயும் பலவந்தமாக கதவைத் திறந்து கொண்டும் பணியாளர்கள் மீது விசிறியடித்தனர். பல பணியாளர்களுக்கு காயம் ஏற்பட்டது. கொந்தளிப்பான பணியாளர்கள், குண்டர்களை உள்ளே தள்ளி கதவுகளைப் பூட்டினர்.

சிறைவைக்கப்பட்ட எம்.எல்.ஏ. திட்ட அலுவலரின் தொலைபேசியைப் பயன்படுத்தி தனது கட்சிக்காரர்களுக்குச் செய்தியை தெரிவித்ததும் ஆளுங்கட்சிக் குண்டர்கள் திமுதிமுவென உள்ளே நுழைந்தனர். ஆளுங்கட்சி குண்டர்கள் அவர்களுக்கே உரிய பாணியில் சங்கத் தலைவர்களை நோக்கி கொலை மிரட்டல் செய்தனர். சவால்விட்டுப் பேசினர். ஒரு கட்டத்தில் ஆளுங்கட்சிக்குண்டர் சந்திரனுக்கும் பணியாளர் சங்க முன்னனித் தலைவர் எஸ்.சுந்தரபாண்டியனுக்கும் கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது. சமரசப் பேச்சுக்கு இடமே இல்லை என்பதை சுந்தரபாண்டியன் அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டார். இதற்கிடையில் போலீஸ், ஆளும் கட்சிக் குண்டர்களை அறையிலிருந்து விடுவித்து கூட்டிச் சென்றுவிட்டது.

இவ்வளவு அமளிக்குப் பின்னர்தான், தலைமைச் செயலரிடமிருந்தும் 'பத்தினித் தெய்வத்திட'மிருந்தும் மாவட்ட ஆட்சியாளரிடமிருந்தும் ஆணையைப் பெற்று ஆளும்கட்சி எம்.எல்.ஏ.வும் அவரது அடியாட்களும் போலீசால் கைது செய்யப்பட்டனர். அதன்பிறகு நூற்றுக்கணக்கான பணியாளர்களை ஒன்றுதிரட்டி இரவு 9 மணி வரை கூட்டம் நடைபெற்றது. சங்கத் தலைவர்கள் ப.ஹைதர் அலி, எஸ்.சுந்தரபாண்டியன், பா.வடிவேலு, எஸ்.கருப்பையா முதலானோர் எழுச்சியுரையாற்றினர். பிரச்சினைக்கு உரிய தலைமை எழுத்தர் வி.இராமநாதன் நன்றி கூறினார். அனைத்துச் சங்கங்களின் போராட்டக்குழு அமைக்கப்பட்டு தொடர் நடவடிக்கைக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதே சட்டமன்ற உறுப்பினர் பல்வேறு அலுவலகங்களில் நுழைந்து ஏற்கனவே இப்படி ரவுடித்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதெல்லாம் சங்கப் போராட்டக் குழு 'சட்டபூர்வமான' போராட்ட நடவடிக்கைகளையே மேற்கொண்டது. சிவகங்கை ஆர்.டி.ஓ. பிரச்சினையில் (இந்த எம்.எல்.ஏ. அதிகாரிகளையும் பணியாளர்களையும் மிக மோசமாகத் திட்டியதற்காக பணியாளர்கள் அப்பொழுதே கண்டித்துப் போராடினர்) போராட்ட வேகத்தை மழுங்கடித்து உள்ளூர் மந்திரி கண்ணப்பன் இழுத்தடித்த பேச்சுவார்த்தை நாடகத்திற்கு வளைந்து கொடுத்ததால் கிடப்பில் போடப்பட்டது. சில சங்கத் தலைவர்கள் இம்முறையும் முற்றுகைப் போராட்டம் நடத்திட தயக்கம் காட்டியதோடு பலவாறாகப் பேசி போராட்ட வேகத்தைப் பின்னுக்கிழுக்க முயற்சித்தபோதும் பணியாளர்கள் சரியான தலைமையின்கீழ் இந்த போலிச் சட்டத்தையும், மரபுகளையும் தூக்கியெறிந்துவிட்டு போர்க்குணமிக்க போராட்ட வடிவத்தை மேற்கொண்டதாலேயே இந்த அளவு வெற்றியை ஈட்ட முடிந்தது. தற்போது போலீசு, சங்கத் தலைவர்கள் மீது போட்டுள்ள பொய் வழக்குகளையும் முறியடிக்க பணியாளர்கள் இதே போர்க்குணத்துடன் தொடர் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

மேலும் அரசுப் பணியாளர்கள், இந்த சட்டபூர்வமான அலுவலகங்களில் சில கோரிக்கைகளை நிறைவெற்றித் தரக் கோரி வரும் மக்களிடம் எவ்வித லஞ்சலாவண்யமும் பெறாமல் தொண்டுள்ளத்தோடு என்பதைவிட கடமை என்ற அளவிலாவது காரியம் செய்து கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே, பணியாளர்களின் போராட்டத்தில் முழுமையான நியாயம் இருக்க முடியும். மக்களின் ஆதரவைப் பெறமுடியும். பணியாளர்கள் அதிகார வர்க்கத்தையும், பொறுக்கி அரசியலையும் சரியான கோணத்தில் கிரகித்து மக்களுக்கான புரட்சிகர போராட்டங்களுடன் இணைவதன் மூலமே சமூகத்தில் நிலவும் சகலவிதமான கொடுமைகளுக்கும் தீர்வு காணமுடியும்.

**தகவல்: எழில்மாறன்**



படிப்பகம்

www.padippakam.com

# மலிவானதோ மக்கள் உயிர்!

## நாக்பூர் கோவாரி மக்கள் 200 பேர் போலீசாரின் தடியடி-நெரிசலால் மாண்ட கோரம்

மருத்துவமனையில் அடுக்கப்பட்ட பிணங்கள் (வலதுபுறம்); உறவினர்களை இழந்த பெண்கள்



மலை சாதியினர் மீது நடத்தப்படும் தாக்குதல்களைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். தங்களை மலைசாதியாக அறிவிக்க வேண்டும் என்று கோரியதற்காகவே கொலை செய்யப்பட்ட மக்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

கத்தியின்றி, ரத்தமின்றி பெற்ற சுதந்திரம் நடத்தும் ஆட்சியில் கத்தியின்றி, ரத்தமின்றி, சத்தமுமின்றி 200 பேர் செத்து மடிந்த செய்தியை அறிவீர்களா?

தளபதி டயருக்கு தோட்டாக்கள் தேவைப்பட்டன; யூனியன் கார்பைடுக்கு நச்சுவாயு தேவைப்பட்டது. நாக்பூர் காவல் துறைக்கோ வெறும் தடிக்கம்புகளே போதுமானதாக இருந்தது —— 200 பேரைக் கொல்ல.

இயற்கையின் சீற்றம், பட்டினி, காவல்துறையின் ரத்தப் பசி —— இவை ஒவ்வொன்றுக்கும் இந்த மண்ணின் மைந்தர்கள் தங்களை இரையாகத் தருவது இந்த நாட்டில் அதிசயமல்ல; இது மரணம் மரத்துப் போன நாடு.

எனினும் பச்சைக் குழந்தைகள் மூட்டைப் பூச்சிகளைப் போல நசுங்கிச் சாகும் போது, துறுதுறுக்கும் சிறுவர்களின் நெஞ்செலும்புகள் நொறுங்கி நுரையீரலைக் கிழிக்கும் போது, மூச்சுக் காற்றுக்கு ஏங்கித் தவிக்கும் முதிய தாய்மார்களின் தொண்டைக் குழியின் மீது அடையாளம்காண முடியாத, ஆயிரம் குதிகால்கள் ஏறி மிதிக்கும்போது நாம் அமைதிகாக்க முடியாது.

ஏனெனில் அமைதிக்குக் கிடைத்த பரிசுதான் அது.

நவம்பர் 23-ம் தேதி நாக்பூரில் கூடிய மகாராட்டிர மாநில சட்டமன்றத்தின் வாயிலில் உயிர்நீத்த அந்த மக்கள் கோவாரி என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மாடு மேய்ப்பவர்கள். மாடுகள் அவர்களுக்குச் சொந்தமில்லை; புல்வெளிகளும் சொந்தமில்லை; மடியைத் தொட்டுப் பால் கறக்கும் உரிமையும் அவர்களுக்கு இல்லை. மகாராட்டிரத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் சிதறிக் கிடக்கும் இந்த மேய்ப்பர்களின் எண்ணிக்கை 15 லட்சம்.

மாடுகள் மேய்ந்து காடுகள் அழியும் இரகசியத்தை நாட்டின் மேய்ப்பர்கள் கண்டு பிடித்தவுடனே, இந்த மேய்ப்பர்களின் புல்வெளி பறிபோனது. மாடுகளுக்கு வேறு தீவனம் கிடைத்தது. மேய்ப்பர்களுக்கோ வயிறு காய்ந்தது.

மந்தை மந்தையாக நகரத்தை நோக்கி நகர்ந்தார்கள் அந்தப் பரிதாபத்திற்குரிய மேய்ப்பர்கள். பத்தாயிரம் பேரில் ஒருவருக்கு அரசு வேலை கிடைத்தது. .001 விழுக்காடு.

இந்தச் சாதனை இலக்கை எட்டுவதற்குள் அவர்களுக்கிருந்த பழங்குடியினர் எனும் சட்டத் தகுதியைப் பறித்துக் கொண்டது மகாராட்டிர அரசு. கோண்ட், கோவாரி என்று பழங்குடியினர் பெயரைப் பட்டியல் போடும்போது இடையிலுள்ள "கமா" குறியை அழித்தான் ஒரு அதிகாரி. சமூகத்தகுதி மாறாமலிருக்கும் போது சாதிப் பெயர் மட்டும் கோண்ட் கோவாரி என்று மாறியது அந்த மேய்ப்பர்களுக்கு. விளைவு பழங்குடியினர்க்கான கல்வி, வேலைவாய்ப்புச் சலுகைகள் அவர்களுக்குக் கிடையாது எனப் பறிக்கப்பட்டன.

உச்சரிக்கத் தெரியாத மன்னன் அல்லது காது கேட்காத சேவகர்களால் பறிக்கப்பட்டது ஒரு கோவலனின் உயிர். இது சனநாயக சகாப்தம். ஒரு பேனா முனையின் அசைவு போதும் 200 உயிர்களைக் காவு கொள்ள. பேனா என்பது ஒரு ஈரமில்லாத கட்டை. மையின் ஈரமோ உலர்வதற்கென்றே உருவாக்கப்பட்ட ஈரம். அதனைக் கையில் பிடித்த அதிகார வர்க்கத்தின் நெஞ்சமோ ஈரமின்றி உலர்த்திப் பதப்படுத்தப்பட்டது.

காணாமல்போன அந்தக் 'கமா'வை சேர்க்கச் சொல்லி ஆண்டுதோறும் மன்றாடினார்கள் கோவாரிகள். இந்த ஆண்டும் வந்தார்கள் பெரும் எண்ணிக்கையில் - பெண்டு பிள்ளைகளுடன் குஞ்சு குளுவான்களுடன். ஒரு தோளில் பிள்ளையும் இன்னொரு தோளில் துணியில் முடிந்த சுக்கா ரொட்டியுமாக, அகன்ற விழிகளுடன் நாக்பூர் நகரத்தைத் தரிசித்தபடியே சட்டமன்றத்தின் வாயிலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

உள்ளே குளிர்காலக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்தது. வெளியே சுட்டெரிக்கும் வெயிலில்



படிப்பகம்

www.padippakam.com

ஓட்டுகின்ற தார்ச்சாலையில் அவர்கள் காத்திருந்தார்கள் - மனுக் கொடுக்க.

சட்டமன்றத்தின் உள்ளே தன் சனநாயக கடமையை நிறைவேற்றிக் கொண்டிருந்த அமைச்சருக்கோ, வெளியே காத்திருக்கும் சனங்களைச் சந்திக்க நேரமில்லை. ''எங்கள் கோரிக்கையை நிறைவேற்றாவிட்டாலும்

வெள்ளம் சுட்டெரித்த வெயிலாலும் அவமானத்தாலும் கொதிக்கத் தொடங்கியது. அவர்களை அமைதிப்படுத்தும் முயற்சியில் பேசத் தொடங்கினார்கள் தலைவர்கள். 40,000 பேர் கொண்ட அந்த மக்கள் வெள்ளத்தில் பின்வரிசைகளில் இருந்தவர்களுக்கு ஏதும் காதில் விழாததால் சற்றே முன்னேறினர்.



பரவாயில்லை; பல நூறு மைல்கள் தொலைவிலிருந்து வந்திருக்கும் எங்கள் மக்களை மதித்து உங்கள் திருமுகத்தையாவது அவர்களுக்குக் காட்டுங்கள்'' என்று மன்றாடினார்கள் தலைவர்கள். அமைச்சர் இரங்கவில்லை.

நண்பகலிலிருந்து மாலை 5 மணிவரை காத்திருந்த அந்த மக்கள்

சனநாயகத்தின் கோட்டையான சட்டசபையை சனங்களிடமிருந்து பாதுகாக்க காவல்துறை எழுப்பியிருந்த தடையரண்கள் சரியத் தொடங்கின. சனநாயகத்திற்கு நேரவிருக்கும் ஆபத்தை உணர்ந்த காவலர்கள் கன நேரத்தில் செயலாற்றத் தொடங்கினர்.

முன்னாலே தடையரண்; முப்புறமும் தாக்குதல். ஜாலியன்

வாலாபாக்கின் மக்கள் தப்பிச் செல்வதற்கு ஒரு வழியாவது திறந்திருந்தது. இங்கே அதுவும் இல்லை. 5 மணிநேரம் தங்களை வெயிலில் காக்க வைத்த 'மாடுமேய்க்கிற பயல்கள்' மீது சனநாயகத்தின் காவல்நாய்கள் வெறியுடன் பாய்ந்தன.

ஆண், பெண், குழந்தை என்ற வேறுபாடின்றி தடிக்கம்புகள் அவர்களைத் தீண்டின. பணியாத மாடுகளைக் கூட அப்படி அடியாதவர்கள் அந்த மேய்ப்பர்கள். தாங்கள் எதற்காகத் தாக்கப் படுகிறோம், எதனால் தாக்கப்படுகிறோம் என்று புரிந்து கொள்வதற்கு முன்னரே அவர்களில் 200 பேரின் உயிர் பிரிந்து விட்டது.

மாலை 6.45-க்கு கூட்டம் கலைக்கப்பட்டு விட்டது. சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட்டு விட்டது. தடையரண்கள் பாதுகாப்பாக இருந்தன. காவலர்கள் யாருக்கும் சிறு காயம்கூட இல்லை.

தடியடி நடந்த இடங்களில் செருப்புகளும், பைகளும் சிதறிக் கிடப்பது வழக்கம். அவர்கள் செருப்பு அணியுமளவு நாகரீகமில்லாதவர்கள். செருப்புகளுக்குப் பதிலாக மனித உடல்களும், பைகளுக்குப் பதிலாக சுக்கா ரொட்டிகளும் அங்கே சிதறிக் கிடந்தன. மூடிய கதவுகளுக்குப் பின்னால் சட்டமன்றம் இரவு 8 மணி வரை அமைதியாக நடந்து கொண்டிருந்தது. நாக்பூர் நகரம் வழக்கம் போல உறங்கச் சென்றுவிட்டது.

சட்டமன்ற வளாகத்தை சுத்தம் செய்யத் தொடங்கினார்கள் துப்புரவுப் பணியாளர்கள். சுக்கா ரொட்டிகள் குப்பைத் தொட்டிக்கும், மனித உடல்கள் மருத்துவமனைக்கும் அனுப்பப்பட்டன.

இறந்தவர்கள் எண்ணிக்கை 200; காணாமல் போனவர்கள் 168 பேர் என்றார் கோவாரி இன மக்கள் சங்கத்தின் தலைவர் காஜ்பே. இறந்தவர்களில் அவரது உறவினர்கள் மூன்று பேரும் அடக்கம். செத்தவர்கள் 130 பேர்தான் என்று சாதித்தார் பவார். நிவாரணம் தலா ஒரு லட்சம் என்றார். ஆனால் பிணங்களை அடையாளம் காட்டுவதற்குக்கூட நாக்பூரில் யாரும் இல்லை. அரசாங்க நிவாரணத்தை அரசாங்க சவுண்டிகளே பங்கு போட்டுக் கொள்ளலாம்.

''காவல் துறைக்கு மூளையில்லை இன்னும் புத்திசாலித்தனமாக நிலைமையை சமாளித்திருக்கலாம்'' என்று தலையங்கம் எழுதின பத்திரிகைகள்.



படிப்பகம்

www.padippakam.com



**''பணியாத மாடுகளைக் கூட அப்படி அடியாதவர்கள் அந்த மேய்ப்பர்கள். தாங்கள் எதற்காகத் தாக்கப்படுகிறோம், எதனால் தாக்கப்படுகிறோம் என்று புரிந்து கொள்வதற்கு முன்னரே அவர்களில் 200 பேரின் உயிர் பிரிந்து விட்டது.''**

''அமைச்சருக்கு மூளையில்லை; அவர்களது குறைகளை சும்மா காது கொடுத்து கேட்டிருக்கலாமே'' என்றனர் எதிர்க்கட்சிகள்.

''கோவாரி மக்களின் தலைவர்களுக்கு மூளையில்லை. ஒரு ஒலி பெருக்கி கூட கையில் இல்லாமல் இத்தனை பெரிய கூட்டத்தை யாராவது கொண்டு வருவார்களா?'' என்று குற்றம் சாட்டினார் பவார்.

''காவல்துறை கொஞ்சம் புத்திசாலித்தனமாக தடியடி நடத்தியிருந்தால் எலும்பு முறிவுடன் பிரச்சினை முடிந்திருக்கும். ஆறாம் பக்கத்து துணுக்கு செய்தியாக வரவேண்டியதை தலைப்பு செய்தியாக போட நேர்ந்ததே'' என்ற வருத்தம் பத்திரிகைகளுக்கு. இதென்ன மண்டல் எதிர்ப்பு தீக்குளிப்பா முதல் பக்கத்தில் வெளியிடுவதற்கு?

''அமைச்சர் 'சும்மனாச்சிக்கும்' மனுவை வாங்கிக் கொண்டு ஒருபுகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தால் அவரது ஜனநாயகக் கடமை முடிந்திருக்கும். இதுகூடத் தெரியாமல் ஒன்றுமில்லாத விவகாரத்தை பெரிதாக்கி விட்டாரே'' என்பது ஓட்டுப் பொறுக்கிகளின் சாடல்.

''ஒலி பெருக்கி, புகைப்படக்காரர் சகிதமாக வந்து கைதாகி, வண்டியிலேறும் போது கையசைத்து புகைப்படம் வெளியிடக்கூட துப்பில்லாத தலைவர்கள் 40,000 பேரைக் கூட்டி வரலாமா'' என்பது பவாரின் வியப்பு.

தங்களது காடும் புல்வெளியும் பறிக்கப்பட்டபோது சகித்துக் கொண்டிருந்து விட்டு, இப்போது இல்லாத வேலையில் ஒதுக்கீடு கேட்டு வந்த கோவாரிகள் 'அறிவிலிகள்' தாம்.

200 பேர்களுக்கு வேலை கொடுத்த அரசுக்கு 200 உயிர்களை பலி கொடுத்த கோவாரிகள் 'முட்டாள்கள்' தாம்.

வெறிகொண்டு தாக்கிய சில நூறு காவல் நாய்களை வெறும் கைகளாலேயே அடித்துக் கொல்லும் ஆற்றல் இருந்தும் அதைச் செய்யத் தவறிய கோவாரிகள் கோழைகள்தாம்.

கோபன் பாதிரியின் தலைமையில் ஜார் மன்னனிடம் ரொட்டித் துண்டை யாசிக்கச் சென்று தோட்டாக்களுக்கு இரையான ரசிய மக்களும் முட்டாள்களாகத்தான் இருந்தார்கள் - அந்த ரத்த ஞாயிறன்று.

பிறகு அவர்கள் புத்திசாலிகளான போது தாங்கள் நெஞ்சில் சுமந்த தோட்டாக்களை திருப்பிக் கொடுப்பதற்காக மீண்டும் சென்றார்கள் - ஜார் மன்னனிடம். இந்த முறை அவர்கள் கையில் துப்பாக்கி இருந்தது; தோட்டா ஜார் மன்னனின் மார்பில் இருந்தது.

இந்த 'ரத்த ஞாயிறு' கோவாரி மக்களையும் புத்திசாலிகளாக்கும்.

மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

# உறுதிமிக்க போராட்டத்தால் சாதிவெறிக் கும்பல் பணிந்தது

கரூர் - தான்தோன்றிமலை அரசினர் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் இராமசாமி தலைமையிலான சாதிவெறிக் கும்பல், +2 படிக்கும் தாழ்த்தப்பட்ட மாணவி மாணிக்கத்தை பள்ளியிலிருந்து நீக்கி, இழிவாகப் பேசி இழைத்த கொடுமைகளைப் பற்றி ஏற்கனவே புதிய ஜனநாயகத்தில் எழுதியுள்ளோம். கரூரில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், நுகர்வோர் பாதுகாப்புக் குழுவினர், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் ஆகியோர் போராடியதன் பயனாக மாணிக்கம் பள்ளியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

மாவட்ட கல்வி அதிகாரி, முதன்மைக் கல்வி அதிகாரி, மாவட்ட துணை ஆட்சியாளர், போலீசு ஆய்வாளர், தீண்டாமை ஒழிப்பு பிரிவு ஆய்வாளர், அமைச்சர் சின்னசாமி ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பியும் அவர்களை நேரில் சந்தித்தும் மாணவி மாணிக்கமும் அவரது தந்தையும் நியாயம் கேட்டனர். அதிகார வர்க்கமும் போலீசும் அமைச்சரும் மேல்சாதி வெறியர்களுக்குச் சாதகமாகவே நடந்து கொண்டனர்.

மாணவி மாணிக்கத்தை மீண்டும் பள்ளியில் சேர்க்கக் கோரி அருகிலுள்ள கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். உள்ளூர் நுகர்வோர் பாதுகாப்புக் குழுவும் தொடர்ந்து போராடி வருவதோடு தலைமை ஆசிரியருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றும் தொடுத்துள்ளது. இதனால் இக்குழு செயலர் மீது போலீசு துணையுடன் பல பொய் வழக்குகளை போட்டது, பள்ளி நிர்வாகம். பகுதியிலுள்ள பு.மா.இ.மு.வினர் பிரசுரம், சுவரொட்டி வாயிலாக பிரச்சினையை மக்கள் மத்தியில் பரவலாக்கினர். பாதிக்கப்பட்ட மாணவியை பள்ளியில் சேர்க்கக் கோரி 20.11.94 அன்று பள்ளியை முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்தனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனுக்கள் மூலம் எச்சரிக்கை அறிவிப்பு விடுத்தனர்.

பள்ளியின் காவலாளி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டதால் இப்போராட்டம் தள்ளி வைக்கப்பட்டது. எதிர்ப்புகள் வலுத்து வருவதைக் கண்டு அஞ்சிய பள்ளி நிர்வாகம் மற்றும் அதிகார வர்க்கக் கும்பல் மாணிக்கத்தை அழைத்து மன்னிப்பு கேட்கும்படி நிர்பந்தித்தது. மன்னிப்பு கேட்டால் பள்ளியில் சேர்த்துக் கொள்வதாக ஆசை காட்டியது. ஆனால் மாணிக்கம் தனது தரப்பில் தவறில்லை என்பதை விளக்கி மன்னிப்பு கேட்க மறுத்து உறுதியுடன் இருந்தார். வேறுவழியின்றி அதிகாரிகள், 23.10.94 முதல் பள்ளியில் மாணிக்கத்தை சேர்த்துக் கொள்ளுமாறு உத்தரவு போட்டார்கள். பள்ளிக்குச் சென்ற மாணிக்கத்தை நிர்வாகத்தினரும் மன்னிப்பு கேட்கும்படி நிர்பந்தித்தும் பயனில்லாததால் குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்தனர். மறுநாள் மாணிக்கத்தைப் பற்றி அவதூறாக எழுதி பிரசுரம் வெளியிட்டும் கட்டிடக் குழு நபர்கள், பொது மக்கள், பெற்றோர் சங்கம் என்ற பெயரில் தலைமையாசிரியரின் கும்பல் கதவடைப்பு, மறியல் செய்தும் அடாவடித்தனம் செய்தனர். பள்ளிக்குச் சென்ற மாணவ - மாணவிகளை தடுத்ததால் காவலுக்கிருந்த போலீசாரால் அப்புறப்படுத்தப் பட்டனர்.

தலைமையாசிரியர், கட்டிடக் குழு வகையறாக்களின் அடாவடிச் செயலைக் கண்டித்து பு.மா.இ.மு. சுவரொட்டி ஒட்டியது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்கக் கோரியும் மாணவி மாணிக்கத்திற்குப் பாதுகாப்பு கோரியும் தந்தி கொடுக்கப்பட்டது. உடன் அதிகாரிகள் தலையிட்டு நிர்வாகத்தினருடன் பேச்சு வார்த்தை நடத்தி கட்டிடக் குழுவினருக்கும் இதற்கும் தொடர்பில்லையென்றும் இக்குழுவைக் கலைத்துவிட வேண்டும் என்றும் தெரிவித்தனர். பின்னர் மாணிக்கம் பள்ளிக்குள் அனுமதிக்கப்பட்டார்.

எந்த ஓட்டுக்கட்சிகளும் இப்பிரச்சினையை கண்டு கொள்ளவில்லை என்பதும் மாணிக்கத்திற்கு எதிராக செயல்பட்டவர்களில் பொட்டுக்கடலை தங்கவேலு அ.தி.மு.க.வையும், வி.கே. தங்கவேலு ம.தி.மு.க-வையும் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மாணவர்களுக்கும் பகுதி மக்களுக்கும் இச்சம்பவம் சாதி-மத சங்கங்களையும் ஓட்டுக் கட்சிகளையும் புறக்கணித்த புரட்சிகர அரசியல் நடவடிக்கையின் பயனை உணர்த்தியது.

# இந்துவெறிக் கும்பலின் பேடித்தனம்

டிசம்பர் - 6 : கருப்பு நாள் இயக்கம்

★ மதுரை - செல்லூர் பகுதியில் டிசம்பர் 5-ந் தேதி "கருப்பு நாள்" பொதுக் கூட்டம் ம.க.இ.க. - பு.மா.இ.மு. சார்பாக நடைபெற்றது. தோழர் கதிரவன் இந்து மதத்தின் வரலாற்று மோசடிகள் குறித்தும் நாடு முழுவதுமுள்ள சாமியார்களின் அயோக்கியத்தனங்கள் குறித்தும் விளக்கிப் பேசினார். தோழர்கள் இரவீந்திரனும் பார்வேந்தனும் பார்ப்பன மதவெறிக் கும்பலின் சூழ்ச்சிகளை விளக்கிப் பேசினர். பகுதித் தோழர்கள் புரட்சிகர பாடல்களை எழுச்சியுடன் பாடினர். மேலும் நகரெங்கும் பரவலாக "கருப்பு நாள்" சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

★ திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் விக்கிரமசிங்கபுரத்தில் செயல்படும் தொழிலாளர் பிரச்சாரக் குழு தோழர்கள், "கருப்பு நாள்" சுவரொட்டிகளை மிகப் பெரிய அளவில் தயாரித்து நகரின் முக்கியப் பகுதிகளில் ஒட்டினர். ஆனால் அச் சுவரொட்டிகளை இரவோடு இரவாகவே இந்து மதவெறிக் கும்பல் கிழித்தெறிந்ததோடு, டயர் தட்டிகளையும் திருடிச் சென்றுவிட்டது. உடனே தோழர்கள் திருப்பி பதிலடி கொடுக்கும் முகமாக கருப்பு நாள் முழக்கங்களோடு, இந்து மதவெறிக் கும்பலின் பேடித்தனத்தையும் அம்பலப்படுத்தி சுவரெழுத்து பிரச்சாரத்தை மேற்கொண்டனர். மறுபடியும் அப்பேடிக் கும்பல் அச் சுவரெழுத்துக்களோடு, "அடிமைச் சாசனம்" ஒலி நாடா விளம்பரங்களையும் அழித்தது. தொ.பி.கு.வினர் இந்து மதவெறிக் கும்பலுக்கு எதிராக மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான பிரச்சாரம் காரணமாக, கும்பல் கிலி பிடித்துப் போயிருப்பதையே இவை காட்டுகின்றன.

★ சென்னை - சேத்துப்பட்டு பகுதியில் ம.க.இ.க. - பு.மா.இ.மு. சார்பாக "கருப்பு நாள்" பொதுக் கூட்டம் டிசம்பர் 6-ந் தேதியன்று நடைபெற்றது. தோழர் அகிலன் தலைமையேற்க, வேலூர் - ம.க.இ.க. கிளைச் செயலர் தோழர் குமார் சிறப்புரையாற்றினார். பொதுக் கூட்ட முடிவில் பகுதித் தோழர்கள் புரட்சிகர பாடல்களை எழுச்சியுடன் பாடினர். நகரெங்கும் பரவலாக "கருப்பு நாள்" சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

## கருணாகரன் அரசின் காட்டுமிராண்டித்தனம்

கேரளத்தில் கண்ணூர் மாவட்டத்தில் கடந்த நவம் 25-ந் தேதியன்று மாநிலக் கூட்டுறவு அமைச்சருக்கு எதிராக மறியல் செய்த 'மார்க்சிஸ்ட்' கட்சியின் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் (டி.ஒய்.எஃப்.ஐ.) மீது போலீசார் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கி சூட்டில் 5 இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். மாநில முதல்வர் கருணாகரனின் காலாட் படைகள் என்பதை கேரளப் போலீசார் இக்காட்டு மிராண்டித்தனத்தின் மூலம் மீண்டும் நிரூபித்துள்ளனர்.

கேரளத்தில் சாதி-மத அடிப்படையில் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் பெருகி வளர அனுமதித்துள்ள கருணாகரனின் காங்கிரசுக் கூட்டணி அரசு, இவையும் போதாதென்று புற்றீசலாக சுயநிதி தொழிற் கல்லூரிகளையும் அனுமதித்து வருகிறது. இந்தக் கல்வி வியாபாரத்துக்கு நீதிமன்றம் விதித்துள்ள தடையைக் குப்பைக் கூடையில் வீசியெறிந்து விட்டது. இச்சுயநிதிக் கல்லூரிகள் - தொழிற்கல்வி நிலையங்கள் நடத்தப்படும் முறையையும், பயிற்றுவிக்கும் சூழ்நிலையையும் கண்டு மாணவர்களும் மக்களும் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ளனர். இந்நிலையில் கேரளத்தில் ஊழல் அமைச்சர்களுக்கு எதிராக மறியல் போராட்டத்தை டி.ஒய்.எஃப்.ஐ. அமைப்பு, சுயநிதிக் கல்லூரிகளை அனுமதிக்கும் மாநில அரசின் கல்விக் கொள்கையை எதிர்த்து எஸ்.எஃப்.ஐ. எனும் 'மார்க்சிஸ்டு' மாணவர் அமைப்பும் மாநிலம் முழுவதும் போராட்டங்களை நடத்தி வந்தன.

கடந்த நவம்பர் 25-ந் தேதியன்று கண்ணூர் மாவட்டத்தில் கூத்துப்பறம்பு என்ற ஊரில் நகர்ப்புற கூட்டுறவு வங்கியைத் திறந்து வைக்க, கூட்டுறவு அமைச்சர் ராகவன் வந்தபோது, அவருக்கு எதிராக இளைஞர்கள் நடத்திய போராட்டத்தில்தான் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது. அமைச்சர் ராகவன், 1986-ல் 'மார்க்சிஸ்ட்' கட்சியிலிருந்து வெளியேறி "கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட்" என்ற புதுக்கட்சி தொடங்கி காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து, கூட்டணி அரசில் அமைச்சராக உள்ளவர். முஸ்லீம் லீக் மற்றும் காங்கிரசுடன் சந்தர்ப்பவாதக் கூட்டணி கட்டிக் கொண்டு அரசியல் பிழைப்பு நடத்திவரும் இவரது கட்சி, 'மார்க்சிஸ்டு'களின் மறைந்த தலைவரான ஏ.கே.கோபாலன் நினைவு அறக்கட்டளை கூட்டுறவு மருத்துவமனையின் இயக்குனர் தேர்தலிலும் வெற்றி பெற்றுள்ளது. இதனால் 'மார்க்சிஸ்டுகள்' இரட்டிப்பு ஆத்திரத்துடன் அமைச்சர் ராகவனுக்கு எதிராக இப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர்.

துப்பாக்கி சூட்டைக் கண்டித்து 'மார்க்சிஸ்டுகள்' நடத்திய போராட்டம், பழிக்குப் பழி வாங்கும் வன்முறையாக மாறிப் போனது. ராகவனுடைய பண்ணையும் உறவினர் வீடுகளும் 'மார்க்சிஸ்டு' குண்டர்களால் தீ வைக்கப்பட்டதோடு, மாநிலம் முழுவதும் அரசு பேருந்துகளும் ரயில்களும் தாக்கப்பட்டுள்ளன. ஊழல் அமைச்சர்களுக்கும் கேடுகெட்ட கல்விக் கொள்கைக்கும் எதிரான நியாயமான போராட்டம் கடைசியில் ரவுடித்தனமாக மாறி மக்களிடம் வெறுப்பையே சம்பாதித்துள்ளது. அண்மைக் காலமாக, கேரளத்தில் மார்க்சிஸ்டுகள் - பாரதீய ஜனதா - ராகவன் கட்சிகளுக்கிடையே நடக்கும் போராட்டங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்-கொலை வெறியாட்டங்களாகவே நடக்கின்றன. கட்சிப் பிரமுகர்கள் பலத்த பாதுகாப்போடு மரண பயத்துடன் நடமாட முடிகிறது. இவற்றைக் காரணங்காட்டி எதிர்த்தரப்பினர் மீது பழிபோட்டுவிட்டு தனது ஊழல் -ஒடுக்குமுறை ஆட்சியை நியாயப்படுத்தி வருகிறது கருணாகரன் கும்பல், மக்களை அணிதிரட்டி இவற்றை முறியடிக்க வக்கற்று, தமது திசைதவறிய போராட்டங்களால் போலிக் கம்யூனிஸ்டுகள் தனிமைப்பட்டுக் கிடக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்யும் 'மார்க்சிஸ்டு' கட்சியினர் மீது தடியடித் தாக்குதல் நடத்தும் கருணாகரனின் காலாட் படைகள்.



## தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக ஜெயா அரசின் வக்கிரம்

சென்னையை அடுத்த மாமல்லபுரம் அருகிலுள்ள காரணை கிராமத்தில் தமக்கு உரிமையுள்ள பஞ்சமி நிலத்தை மீட்கவும், அபகரிக்கப்பட்ட அந்த நிலத்தில் அம்பேத்கர் சிலையை நிறுவவும் தாழ்த்தப்பட்ட மக்கள் கடந்த அக்டோபர் மாதத்தில் போராடிய போது, போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூவர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். அதைத் தொடர்ந்து சென்னையில் பேரணி - பொதுக் கூட்டம் நடத்திய தாழ்த்தப்பட்ட மக்கள், கடந்த டிசம்பர் 6-ம் நாளான்று மீண்டும் காரணையில் அம்பேத்கர் சிலையை நிறுவ முற்பட்டபோது இருநூறுக்கும் மேற்பட்டோரைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளது, பார்ப்பன - பாசிச ஜெயா அரசு.

ஒரு புறம் தாழ்த்தப்பட்டோரின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கி வரும் ஜெயா அரசு, மறுபுறம் தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டுக்கான பஞ்சுமிட்டாய்த் திட்டங்களை அவசரமாக அறிவித்து அவர்களை ஏய்க்கவும் கிளம்பியுள்ளது. கடந்த டிசம்பர் 6-ம் நாளன்று தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவரும், சென்னை மாநகராட்சியின் முன்னாள் மேயருமான என். சிவராஜ் அவர்களின் சிலையைத் திறந்து வைத்த ஜெயா, தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காக 12 புதிய நலத் திட்டங்களை அறிவித்துள்ளார். இத் திட்டங்கள் அனைத்தும் ஓராண்டுக்குள் நிறைவேற்றப்படும் என்றும் உறுதியளித்துள்ளார். ஆனால் இவை எவையும் புதிய திட்டங்கள் அல்ல.

உதாரணமாக, மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் பெண் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் 500 ரூபாய் வழங்கும் திட்டம், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம், சுய வேலை


படிப்பகம்

www.padippakam.com

வாய்ப்புத் திட்டம், லாரி வழங்கும் திட்டம் முதலான பல திட்டங்கள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை மற்றும் பிற ஆவணங்களில் குறிப்பிடப்பட்டு வருகிறது. இவை தவிர ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிப்பைத் தொடர முடியாத தாழ்த்தப்பட்ட பெண் குழந்தைகளுக்கு மாதம் ரூ. 100 வழங்கும் திட்டம் கடந்த ஜூன் மாதத்தில் அறிவிக்கப்பட்டு இன்னமும் காகிதத் திட்டமாகவே உள்ளது. இதே போல, தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு தமிழக அரசுப் பணிகளில் இடஒதுக்கீடு அடிப்படையில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதாக அறிவித்த திட்டம் காற்றிலே கரைந்து விட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக, கைகளால் மலம் அள்ளும் இழிவான துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ள சுமார் 34,000 பேரை விடுவித்து மறுவாழ்வு அளிக்கும் திட்டத்துக்கு 15 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டதாக ஜெயா அரசு கணக்கு காட்டுகிறது. ஆனால் கடந்த ஆண்டில் மொத்தம் 86 பேர்தான் விடுவிக்கப்பட்டதாக அரசு அறிக்கையே ஒப்புக் கொள்கிறது. இதுதவிர, தலித் மக்களின் வேலை வாய்ப்புக்காக மத்திய அரசு அளித்த கோடிக்கணக்கான ரூபாயை ஜெயா அரசு பயன்படுத்தாமல் வீணாக்கியுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்கள் மீது திடீர் கரிசனம் கொண்டு பார்ப்பன ஜெயா அரசு ஆடும் நாடகத்தின் யோக்கியதை இதுதான். ஜெயா அரசின் பம்மாத்து திட்டங்களை நம்பி தாழ்த்தப்பட்ட மக்கள் ஏமாந்து விடக் கூடாது. ஜெயா அரசுக்கு எதிரான தமது போராட்டத்தைத் தளர்த்தவும் கூடாது.

## ஆழ்கடலிலும் அந்நிய ஆதிக்கம்

நாட்டைத் தவணை முறையில் ஏகாதிபத்தியங்களுக்குத் தாரை வார்த்து வரும் ராவ் அரசு, இப்போது இந்திய கடல் வளத்தையும் அன்னிய ஏகபோக நிறுவனங்களுக்கு விற்கத் துணிந்து விட்டது. ராவ் கும்பலின் தாராளமயக் கொள்கையின் விளைவாக இந்திய கடற்பகுதியில் சுமார் 900 வெளிநாட்டுக் கப்பல்கள் அரசு அனுமதியுடன் மீன்பிடிப்பில் இறங்கியுள்ளன. இதனால் இந்தியாவின் மீன்வளம் பெருமளவு கொள்ளையடிக்கப்படுவதோடு, ஏறத்தாழ 2 கோடிக்கும் மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் வறுமைக் கடலில் தள்ளப்பட்டுள்ளனர்.

கடலின் அடிமட்டத்தில் உள்ள சேறு நிறைந்த பகுதியில்தான் மீன் குஞ்சுகள் உற்பத்தியாகின்றன. மேலும் மீனுக்கு உணவாகும் பாசி போன்ற தாவரங்களும் இங்குதான் உள்ளன. அதிநவீன வசதியும் அதிக சக்தியும் கொண்ட வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள், இப்பகுதியில் பெரிய வலைகளை வீசி, கப்பல்களை சில கடல் மைல் தூரத்துக்கு இயக்குகின்றன. இதனால் கடல் சேறு, வயற்காட்டை உழுவதுபோல புரட்டப்பட்டு, தாவர இனங்களும் இனப் பெருக்கத்திற்காக வரும் தாய் மீன்களும் குஞ்சுகளும் கொல்லப்படுகின்றன. இது உற்பத்திக் களத்தையே அழிக்கும் மிகப்பெரிய கொள்ளையும் கொடுஞ்செயலுமாகும். இதுதவிர, கடற்கரைக்கு 40-50 கடல் மைலுக்கு அப்பாலிருந்து வரும் மீன்கள் அங்கேயே தடுக்கப்பட்டு வெளிநாட்டுக் கப்பல்களால் பிடிக்கப்படுவதால், பாரம்பரிய முறையில் மீன்பிடிக்கும் விசைப்படகு, கட்டுமர மீனவர்களின் வாழ்வு இன்று கேள்விக்குறியாகி விட்டது. மேலும், இந்த வெளிநாட்டு நிறுவனங்கள் பிடிக்கும் மீன்கள் இந்தியச் சந்தைகளில் விற்பனைக்கு வராது. இதனால் மீன்களின் விலை தாறுமாறாக உயர்ந்து, ஆடம்பர உணவாக மாறிவிடும்.



ஏகாதிபத்திய மீன்பி
கப்பல்களை
அனுமதித்தால்
கட்டுமர
மீனவர்களின் கதி
என்ன? கண்ணீர்
கடலில் மீனவர்கள்

ஏகாதிபத்தியங்களின் பகற்கொள்ளைக்காக, மீனவர்களின் வாழ்வைச் சூறையாடும் ராவ் அரசு, வெளிநாட்டுக் கப்பல்களின் மீன்பிடிப்புக்கு கடற்பகுதியில் எல்லைகள் ஏதும் வரையறுக்கவில்லை. மேலும் இக்கப்பல்களுக்கு வரம்பு ஏதுமின்றி, ஒரு லிட்டர் டீசலை ரூ.2.00 விலைக்கு மானிய விலையில் வழங்குகிறது.

அந்நிய மீன்பிடிக் கப்பல்களால் தங்கள் வாழ்வும் கடல் வளமும் கொள்ளை போவதை எதிர்த்து இந்திய மீனவர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர். கடந்த இரு மாதங்களில் குமரி மாவட்டத்திலும் பாண்டிச்சேரியிலும் மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் வேலை நிறுத்தப் போராட்டங்களில் இறங்கி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். கோவாவில் கடந்த நவம்பர் 23-ம் தேதியன்று மர்மகோவா துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களை கட்டுமர மீனவர்கள் சூழ்ந்து கொண்டு கடலிலேயே முற்றுகைப் போராட்டத்தை நடத்தினர். கேரளாவில் கொச்சி துறைமுகப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் போராட்டத்துக்கு அணி திரண்டு வருகிறார்கள். கடல் வளம் கொள்ளை போவதை எதிர்த்து சுற்றுச்சூழல்வாதிகளும் மீனவர்களோடு சேர்ந்து போராட முன் வந்துள்ளனர். மீனவர்களின் நியாயமான போராட்டத்தை நாட்டைச் சூறையாடும் காட்டங்கல் ஒப்பந்தங்களுக்கு எதிரான ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக வளர்த்தெடுக்க வேண்டியது, புரட்சிகர சக்திகளின் இன்றைய முக்கிய கடமையாக உள்ளது.

## போபர்ஸ் கொள்ளையனுக்கு போலிகளின் வக்காலத்து

வேலை நிறுத்தங்களில் இனி தொழிலாளர்கள் ஈடுபடாமல் பார்த்துக் கொள்வோம் என்ற உறுதிமொழியுடன் அன்னிய மூலதனத்தை வரவேற்ற மே. வங்க போலிக் கம்யூனிஸ்டுகள், இப்போது மேலும் ஒரு படி முன்னேறி போபர்ஸ் ஆயுதபேரத் தரகர்களும், ரகசிய உலகப் பேர்வழிகளுமான இந்துஜாக்க


படிப்பகம்

www.padippakam.com

ளின் முதலீட்டையும் ஆதரிக்கக் கிளம்பி விட்டனர். பாசிச ராஜீவ் கும்பல் ஸ்வீடனின் போபர்ஸ் பீரங்கி பேரத்தில் கோடிகோடியாய் கொள்ளையடிக்க இடைத்தரகர்களாகச் செயல்பட்டவர்கள்தான் இந்த இந்துஜாக்கள் என்பது நாடறிந்த உண்மை. அன்று போபர்ஸ் ஊழல் கொள்ளைக்கு எதிராக எதிர்க்கட்சிகளோடு சேர்ந்து போராட்டம் நடத்திய 'மார்க்சிஸ்டுகள்' இன்று வெளிநாட்டில் வாழும் இந்தியர்களான இந்துஜாக்களின் ரகசிய உலக கள்ளப் பணத்தை வங்கத்தில் முதலீடு செய்வதை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கின்றனர்.

அன்று ஸ்வீடனின் வானொலி போபர்ஸ் ஊழலைப் பற்றி வெளிப்படையாக ஒலிபரப்பிய போது ''ஊழலே நடக்கவில்லை; ராஜீவுக்கு இதில் தொடர்பில்லை'' என்று காங்கிரசு பெருச்சாளிகள் கூச்சலிட்டதைப் போலவே, இன்று போலிகளும் போபர்ஸ் கொள்ளையர்களுக்கு நற்சான்றிதழ் கொடுக்கின்றனர். ''போபர்ஸ் பீரங்கி பேரத்தில் இந்துஜாக்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக இதுவரை நிரூபிக்கப்படவேயில்லை'' என்று நியாயம் பேசுகிறார், போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசு. தனது பேரனுக்கு சனாதன முறைப்படி பூணூல் போட்ட 'மார்க்சிஸ்டு' எம்.பி.யும். மே. வங்க தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவருமான சோமனாத் சட்டர்ஜி,''இந்துஜாக்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு நீங்கள் ஏதாவது ஆதாரம் காட்ட முடியுமா''? என்று கொள்ளையர்களுக்கு பரிந்து பேசுகிறார்.

**போபர்ஸ் ஆயுதபேரத் தரகர்கள் இந்துஜாக்களின் முதலீட்டையும் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கத் கிளம்பி விட்டனர்.**

''பூனை வெள்ளையாக இருந்தாலென்ன, கருப்பாக இருந்தாலென்ன, எலியைப் பிடித்தால் சரி'' என்று சீனாவில் சோசலிச அமைப்பைத் தகர்த்து முதலாளித்துவத்தை - ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிறுவினார், துரோகி டெங்சியாவோ பிங். அவரது உண்மையான வாரிசுகள் நாங்கள்தான் என்று தங்களது புதிய தொழிற்கொள்கை மூலம் மார்க்சிஸ்டுகள் நிரூபித்து விட்டார்கள். உலக வங்கியின் தரகனான நிதியமைச்சர் மன்மோகன் சிங்கின் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகப் போராட்டம் நடத்திவிட்டு தமது மாநிலத்தில் அதே கொள்கையை அமுல்படுத்துவது தான் 'மார்க்சிஸ்டு' மாதிரி தொழிற்கொள்கை என்பது அம்பலப்பட்டு போயுள்ளது. மே. வங்க இடதுசாரி கூட்டணிக் கட்சிகளே இப்போது இந்துஜாக்களை ஆதரிக்கும் 'மார்க்சிஸ்டு'களை வெளிப்படையாகச் சாடுகின்றனர்.




''வங்கத்தைப் பார்''! என்று அதை முன்னுதாரணம் காட்டி 'மார்க்சிஸ்டு' அணிகள் நீண்ட காலமாகப் பிரச்சாரம் செய்து வந்தனர். இப்போது ''வங்கத்தைப் பார்!'' என்று தரகுப் பெருமுதலாளிகள் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்து விட்டனர். ''வங்கத்தில்தான் தொழில் அமைதி சிறப்பாக உள்ளது'' என்று அம்பானியும் டாடாவும் பாராட்டுகின்றனர். இப்போது இந்துஜாக்கள், ''இந்தியாவில் முதலீடு செய்வதற்கேற்ற மிகச் சிறந்த மாநிலம் மே. வங்கம் தான்''! என்று புகழ் பாடுகின்றனர். இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் மட்டுமின்றி, ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்களும் தங்களைப் பாராட்ட வேண்டும் என்பதற்காக, மே. வங்கத்தின் சால்ட்லேக் மின்னணு தொழிற்கூடப் பகுதியிலுள்ள ஒரு தெருவுக்கு ஜெர்மானிய ஏகபோக நிறுவனத்தின் நினைவாக சீமென்ஸ் தெரு என்று போலிகள் பெயரிட்டுள்ளனர். இத்தெருவை சீமென்ஸ் நிறுவனமே பராமரிக்குமாம். நல்ல முன்னேற்றம்தான்!

## இந்துவெறி வானரங்களிடையே குடுமிப்பிடி சண்டை

டெல்லி மாநில ஆட்சியைக் கைப்பற்றிய ஓராண்டுக்குள்ளாகவே, கட்டுப்பாடுமிக்க கட்சியாக பீற்றிக் கொள்ளப்படும் பாரதீய ஜனதாவில் கோஷ்டிப் பூசலும் குடுமிபிடி சண்டையும் வீதிக்கு வந்து நாறத் தொடங்கி விட்டன. மாநில கல்வி மந்திரியான சாகிப் சிங் வர்மா, கடந்த நவம்பர் 21-ம் நாளன்று ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிய போது, வழியில் அவரது கார் குண்டர்களால் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டது. குண்டர்கள் அவர் மீது ''என்ஜின் ஆயிலை'' ஊற்றி தீக்குச்சியைக் கிழித்துப் போட்டனர். ஆடை பற்றிய நிலையில் அலறியபடியே தப்பியோடிய அமைச்சர் பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிர் பிழைத்துக் கொண்டார்.

குண்டர்களைக் கொண்டு இத்தாக்குதலை நடத்தியவர்கள் எதிர்க்கட்சியினர் அல்ல. அவரது பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. தன்வார் மற்றும் சத்தரபூர் நகராட்சி கட்சி செயலர் ரவிசர்மா ஆகியோர்தான். இதைத் தொடர்ந்து பாரதீய ஜனதாவின் டெல்லி மாநிலத் தலைவரான கோலி, இவர்களைக் கட்சியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்வதாக அறிவித்தார். இதில் கல்வி அமைச்சர் வர்மா கோலி கோஷ்டியைச் சேர்ந்தவர். தாக்குதல் நடத்திய தன்வாரும் ரவி சர்மாவும் மாநில முதல்வர் குரானா - கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். தங்கள் மீது நடவடிக்கை எடுப்பது முறைகேடானது என்று இவர்கள் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவிடம் முறையிட்டனர். அதைத் தொடர்ந்து இக்குழுவில் அங்கம் வகிக்கும் குரானா, கோலி கோஷ்டிகளுக்கிடையே நாய்ச் சண்டை மூண்டு சட்டை கிழிந்து சந்தி சிரித்தது.

கடந்த நவம்பரில் டெல்லி உள்ளூராட்சி தேர்தல் சீட்டு பெறுவதற்காக இரண்டு எம்.எல்.ஏக்களும் கட்சிச் செயலாளரும் நடுவீதியில் அடித்துக் கொண்டனர். இப்போது இன்னும் முன்னேறி தங்கள் கட்சியின் அமைச்சரையே குண்டர்களைக் கொண்டு தாக்கத் துணிந்து விட்டனர். அழுகி நாறும் உட்கட்சி கோஷ்டிச் சண்டை டெல்லி மட்டுமின்றி, எல்லா மாநிலங்களிலும் புழுத்துநாறி பாரதீய ஜனதாவின் அரைகுறை செல்வாக்கையும் செல்லாக் காசாக்கிவிட்டது. மத்திய பிரதேசத்தில் முன்னாள் முதல்வர் பட்வா, இந்து


படிப்பகம்

www.padippakam.com

வெறி சன்னியாசினி உமாபாரதி கோஷ்டிகளுக்கிடையிலான நாய்ச் சண்டையால் அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி படுதோல்வி அடைந்தது. குஜராத்தில் வரப்போகும் தேர்தலுக்கு முன்னரே அதன் தலைவர்களுக்கிடையே குடுமிபிடி சண்டை கொடி கட்டிப் பறக்கிறது.

அத்வானியும் வாஜ்பாயும் எதிர்கோஷ்டிகளுக்கு விருந்து கொடுத்து சமரசப்படுத்திப் பார்க்கின்றனர். ஆனால் விருந்தில் ஏப்பம் விடுவதற்கு முன்னே கோஷ்டி சண்டை மூண்டு விடுகிறது. இனி அந்த ராமன்தான் அக்கட்சியைக் காப்பாற்ற வேண்டும்!

## பொய் நெல்லைக் குத்தி பொங்க முடியுமா?

கம்யூனிசம் தோற்றுப் போய்விட்டது என்று ஏகாதிபத்தியவாதிகள் ஏகடியம் பேசிவரும் வேளையில், இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் முதன் முதலாக ஆட்சியைப் பிடித்துள்ளனர்.

நேபாளத்தில் மன்னராட்சி முறை முடிவுக்கு வந்து மூன்றாண்டுகளுக்கு முன்பு நடந்த பொதுத் தேர்தலில் நேபாள காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. ஆனால் அதன் ஊழல், கோஷ்டிச் சண்டை, மன்னர் ஆதரவு, இந்திய மேலாதிக்கத்திற்கு விசுவாசம் முதலானவற்றால் தொடர்ந்து அம்பலப்பட்டு ஆட்சியை இழந்தது. அதைத் தொடர்ந்து கடந்த நவம்பரில் நடந்த பொதுத் தேர்தலில், மொத்தமுள்ள 205 இடங்களில் நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) 88 இடங்களிலும் நேபாள காங்கிரசு 83 இடங்களிலும் வெற்றி பெற்றன. மன்னராட்சியை ஆதரிக்கும் பிரஜால்தந்திரக் கட்சி 20 இடங்களிலும் வெற்றி பெற்று புதிய சக்தியாக வளர்ந்துள்ளது.

எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாத தொங்கு நிலையில் அதிக இடங்களைப் பெற்றுள்ள போலிக் கம்யூனிஸ்டுகளை ஆட்சி அமைக்குமாறு மன்னர் அழைத்துள்ளார். அதன்படியே மன்மோகன் அதிகாரியைப் பிரதமராகக் கொண்ட புதிய அமைச்சரவை பதவியேற்றுள்ளது. டிசம்பர் இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் இச்சிறுபான்மை அரசுக்கு மற்ற கட்சிகள் ஆதரவு தெரிவிக்க வேண்டும். இல்லையேல் மன்னர் இந்த ஆட்சியைக் கலைத்து மறுதேர்தலை அறிவிக்க வேண்டும். இன்னொரு தேர்தலை உடனடியாக எதிர் கொள்ள இயலாத நிலையில், இச்சிறுபான்மை அரசுக்கு வெளியிலிருந்து நிபந்தனைக்குட்பட்ட ஆதரவு தருவதாக எதிர்க்கட்சிகள் உறுதியளித்துள்ளன. எனவே எதிர்த்தரப்பினரை அனுசரித்து நடந்து கொண்டு ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதைத் தவிர போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு வேறு மாற்று வழியில்லை.

ஏறத்தாழ 2 கோடி மக்கள் தொகை கொண்ட நேபாளம் வறுமையில் சிக்கித் தவிக்கும் மிக ஏழ்மையான நாடு. 70% விளை நிலங்களை தமது ஆதிக்கத்தில் வைத்துள்ள நிலப்பிரபுக்களான ராணாக்களின் அதிகாரத்தைத் தகர்த்து நிலச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று போலிக் கம்யூனிஸ்டுகள் தேர்தல் வாக்குறுதி அளித்துள்ளனர். இதை மே. வங்க 'மார்க்சிஸ்டு'கள் பாணியில் நடைமுறைப்படுத்தினால் கூட ராணாககள் தமது அதிகார பலத்தைக் கொண்டு கலகம் செய்வர். இதைச் சாதகமாக்கிக் கொண்டு எதிர்க்கட்சிகள் நெருக்கடி கொடுக்கும்.

இந்தியாவின் தலையீடு மேலாதிக்க எதிர்ப்பு தன்மை கொண்ட போலிக் கம்யனிஸ்டுகள் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நேபாளத்தின் இறையாண்மையைக் கட்டிக் காப்போம் என்று உறுதியளித்துள்ளார்கள். ஆனால் விவசாயப் புரட்சி மூலம் நிறுவப்படும் ஒரு தேசிய - சுய சார்பான அரசைக் கட்டியமைக்காமல் இது சாத்தியமில்லை. நடந்து முடிந்த தேர்தலின்



நேபாளத்தில் போலிக் கம்யூனிஸ்டுகளின் தேர்தல் வெற்றி ஊர்வலம். உள்ளே புதிய பிரதமர் மன்மோகன் அதிகாரி.

போது கூட இந்திய ஆளும் வர்க்க அரசியல்வாதிகள் பலர் இந்திய விசுவாசிகளான நேபாள காங்கிரசுக் கட்சிக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பண உதவியும் பிரச்சாரமும் செய்துள்ளனர். இந்நிலையில் போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆட்சியை அவர்கள் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். இந்திய அரசைத் தூண்டி நெருக்கடி கொடுத்தும் ரகசிய சதிகள் கலகங்கள் மூலம் ஆட்சியைக் கவிழ்க்கவும் தயங்க மாட்டார்கள். இந்நிலையில் போலிக் கம்யூனிஸ்டுகளின் சிறுபான்மை அரசு ''நித்திய கண்டம்; பூரண ஆயுசு'' என்கிற தன்மையில்தான் நீடிக்க முடியும்.

எனவேதான் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள போலிக் கம்யூனிஸ்டுகள் தமது கொள்கைகளைக் கைவிட்டு சந்தர்ப்பவாத புதை சேற்றில் இறங்கிவிட்டனர். மன்னர் பதவியே கூடாது என்று மன்னர் ஆதிக்கத்தை எதிர்த்து வந்த போலிக் கம்யூனிஸ்டுகள் இப்போது அவரது ஆதிக்க அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டு செயல்படுவதாக பதவிப் பிரமாணம் எடுத்துள்ளனர். அந்நியக் கொள்ளையை முறியடிப்பதாக முழங்கிய இவர்கள் இன்று முந்தைய நேபாள காங்கிரசு அரசு பின்பற்றிய பொருளாதாரக் கொள்கையையே அந்நிய மூலதனத்துக்குக் கதவை அகலத் திறக்கும் கொள்கையையே தொடர்ந்து பின்பற்றுவோம் என்கின்றனர்.

கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையிலான நேபாள மக்கள் ஐக்கிய முன்னணி (UPF) எனும் மக்கள் திரள் கூட்டமைப்பு கடந்த செப்டம்பர் இறுதியில் தனது முதல் மாநாட்டை நடத்தியது. ஏறத்தாழ 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மாநாட்டில் மக்கள் செங்கொடிகளையும் மார்க்சிய ஆசான்களது உருவப் படங்களையும் ஏந்தித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு எழுச்சிமிகு முழக்கங்களுடன் தலைநகரில் ஊர்வலமாகச் சென்றுள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com

# பாக். எதிர்ப்பு அற்பத்தனம் நாட்டுக்கே அவமானம்

இந்தியாவும் பாகிஸ்தானும் ஒருவர் காலை ஒருவர் வாரிவிடுவதற்காக உள்நாட்டிலும் சர்வதேச அரங்குகளிலும் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பல சமயம் கேலிக்கூத்தாகவும் அற்பத்தனமாகவும் இருக்கின்றன. அந்த முயற்சிகளைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பது அந்தந்த நாட்டு மக்களின் கடமை ஆகாது. நாட்டுப்பற்றுமாகாது. உள்நாட்டு விவகாரங்களில் இருந்து மக்களைத் திசை திருப்புவதற்காகச் செய்யப்படும் அந்த முயற்சிகளை எதிர்த்துப் போராடுவதுதான் உண்மையான நாட்டுப்பற்றாகும்.

''நொண்டி குதிரைக்கு சறுக்கியது தான் சாக்கு'' என்ற கதையாக, நமது நாட்டின் அரசியல் நெருக்கடிகளுக்கு மட்டுமல்ல, அற்ப விஷயங்களுக்கெல்லாம் ''பாகிஸ்தான் பிரிவினையைத் தூண்டி விடுவதுதான் காரணம்'' என்ற ஒரே பல்லவியைத் திரும்ப திரும்ப பாடுவதை ஓர் அரசியல் தந்திரமாகவே கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆட்சியாளர்கள். ஓட்டுக் கட்சிகளோடு, 'தேசிய' பத்திரிகைகளும் சேர்ந்து போடும் இந்த பாகிஸ்தான் எதிர்ப்புக் கூச்சல் இன்று ஓர் அபத்தமான எல்லையினையும் தொட்டுவிட்டிருக்கிறது.

சென்ற இரு மாதங்களுக்கு முன்பு வட இந்தியாவில் குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் பிளேக் நோய் பரவி நூற்றுக்கணக்கானோர் மரணமடைந்தனர். அதற்குக் காரணம் ''மகாராஷ்டிராவில் ஏற்பட்ட நில நடுக்கம்; குஜராத்தைத் தாக்கிய பெருமழையைத் தொடர்ந்த வெள்ளம் - இவை காரணமாக பிளேக் கிருமிகள் வீட்டு எலிகளைத் தொற்றிக் கொண்டன. பின் வீட்டு எலிகளின் மூலம் மனிதர்களுக்குப் பரவியது'' என்று விஞ்ஞான பூர்வமாக விளக்கமளிக்கப்பட்டது.

ஆனாலும் ''மூஷிகனை''த் தெய்வமாக வணங்கும் சிலருக்கு இந்தக் காரணம் கட்டோடு பிடிக்கவில்லை. இதன் பலனாக விறுவிறுப்பான நகைச்சுவை நிறைந்த துப்பறியும் கதை ஒன்று நமக்குக் கிடைத்தது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இந்திய இராணுவத்தினர், சில பாகிஸ்தானிய உளவாளிகளை குஜராத் மாநில எல்லையில் பிடித்துச் சோதித்த பொழுது, அவ்வுளவாளிகளிடம் நான்கு எலிகள் மட்டும் இருந்ததாம்; அதைப் பார்த்த இராணுவத்தினர் சிரித்து விட்டு உளவாளிகளை சிறையில் அடைத்த கையோடு எலி விவகாரத்தை மறந்து போனார்களாம். பிளேக் நோய் பரவ ஆரம்பித்த பின்தான் ''எலியைக் கொண்டு பாகிஸ்தான் தொடங்கியுள்ள யுத்தமிது'' என்பது ஆட்சியாளர்களின் அபார மூளைக்குப் பளிச்சிட்டதாம். இந்த எலி இரகசியத்தை தமிழகத்திற்குக் கடத்தி வந்ததற்காக ஜுனியர் விகடனுக்கு நாம் நன்றி செலுத்துவோம்!

இதைத் துப்பறிந்த சாம்புகளின் திறமையினைக் கண்டு மயங்காதவர்களுக்கு இன்னொரு செய்தி இதோ: சென்ற அக்டோபர் மாதத்தில் சென்னையை ஒட்டியுள்ள கடற்பகுதியில் விண்ணில் ஏவப்படும் ராக்கெட்டின் பகுதிகள், அடுத்தடுத்து இருமுறை பதினைந்து நாட்களுக்குள் மீனவர்களின் வலையில் சிக்கி கரைக்குக் கொண்டு வரப்பட்டன அதனைப் பரிசோதித்த அதிகாரிகள், ''இந்தியா ஏவி தோல்வியடைந்த பி.எஸ்.எல்.வி-1 ராக்கெட்டின் பகுதிகள்'' என அறிவித்தனர். ஆனாலும் அதற்குள்ளாகவே 'தேசிய' நாளிதழ் ஒன்று மூளையைக் கசக்கி ''நம்மைத் தாக்க பாகிஸ்தான் ஏவியது இது'' எனச் செய்தியோடு செய்தியாக ஒரு அபார கண்டு பிடிப்பை வெளியிட்டது. துப்பறிவாளர்களின் திறமைக்குச் சான்றுகள் போதுமென நினைக்கின்றேன்.

வெறும் வாயை மெல்லுபவனுக்கு அவல் கிடைத்த கதையாக இப்பொழுது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் நடந்துள்ளதாகக் கூறப்படும் உளவு விவகாரம் உண்மையைக் கண்டுபிடிப்பதை விட அதிகமாக பாகிஸ்தான் எதிர்ப்புக் கூச்சலுக்கு வசதியாய் அமைந்து விட்டது. இந்த உளவு விவகாரம் தொடர்பாக மாலத் தீவினைச் சேர்ந்த மரியம் ரஷீதா, பவுசியா உசேன் என்ற இரு பெண்களிடமும் நம்பி நாராயணன், சசிகுமார் என்ற இரு விஞ்ஞானிகளிடமும் சந்திரசேகர் என்ற தொழிலதிபரிடமும் சி.பி.ஐ போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

விசாரணை தொடங்கியவுடனேயே, ''மாலத்தீவினை மையமாகக் கொண்டு செயல்படும் பாகிஸ்தான் உளவு நிறுவனம் ஐ.எஸ்.ஐ. தான் இந்த சதிக்குப் பின்னணியில் இருந்துள்ளது எனக் குற்றம் சுமத்தப்பட்டது. ஆனாலும் இதுநாள்வரை பாகிஸ்தானை சம்மந்தப் படுத்தும் அளவு போதிய ஆதாரமோ அல்லது தொடர்போ கூட அதிகாரிகளுக்கு கிடைக்கவில்லை; மேலும் பிரேசில், மெக்சிகோ, சுவீடன், ஜெர்மனி மற்றும் பிரான்சுக்கும் கூட இதில் தொடர்பிருக்கலாம்'' என்றும் அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்; என்றாலும் ஊகத்தின் அடிப்படையில் பாகிஸ்தானை மட்டும் சம்மந்தப்படுத்தி செய்திகள் பரப்பப்படுகின்றன.

''அக்னி ஏவுகணை மற்றும் பி.எஸ்.எல். வி. 2 ராக்கெட்டின் தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொள்வதுதான் பாகிஸ்தானின் முக்கிய நோக்கம் என்பது கடத்தலுக்குக் காரணமாக ஆரம்பத்தில் கூறப்பட்டது. நாட்கள் சிறிது சென்ற பின், ''இந்தியா தன்னிச்சையாகத் தயாரித்து வரும் கிரையோஜெனிக் ரக ராக்கெட் என்ஜினின் தொழில் நுட்பத்தைக் கடத்த முயன்றது'' எனக் கூறப்பட்டது. இதன் பின்னோ, ''இந்திய கப்பற்படையில் நீருக்கடியில் செய்தி அனுப்பப் பயன்படும் VLF தொழில் நுட்பத்தைப் பெறுவது தான்'' பாகிஸ்தானின் இறுதி நோக்கமாகக் கூறப்பட்டது. இன்னும் சில பத்திரிகைகளோ, ''இத் தகவல்களைக் கொண்டு, இந்தியாவின் கொச்சி போன்ற முக்கிய இராணுவத் தளங்களை பாகிஸ்தான் அழிக்கப் போகிறது'' என அவரவர்களின் ஊகங்களுக்கும் கற்பனைகளுக்கும் ஏற்ப, ''என்ன கடத்தப்பட்டது? எதற்காக கடத்தப்பட்டது?'' என்பதை மாற்றி மாற்றி செய்திகளாக வெளியிட்டன.

அக்னி ஏவுகணையை அமெரிக்க நிர்ப்பந்தம் காரணமாக இந்தியா இன்னும் இராணுவத்தில் சேர்த்துவிடவில்லை. மேலும், அக்னியை விட வெகு தொலைவு சென்று தாக்கும் ஏவுகணைகளை சீனாவிடமிருந்து பாகிஸ்தான் பெற்றுக் கொள்ள வாய்ப்பிருக்கும் போது, ''கடத்தலில் ஏன் ஈடுபட்டது?'' என்பதற்கு அதிகாரிகள் எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகள் மரியம் ரஷீதாவிடமிருந்து கைப்பற்றியுள்ள ஆவணங்கள் பற்றி குறிப்பாக எந்த விவரத்தையும் வெளியிடவில்லை. மேலும் மரியம் ரஷீதா பற்றி, ''கடத்தலுக்காக பாக். உளவு நிறுவனம் நியமித்துள்ள உளவாளி'' எனக் குறிப்பிட்டவர்கள், தற்பொழுது, ''அவர் மாலத்தீவு குடியரசுத் தலைவர் அப்துல் கயாமைக் கொலை செய்யவும் திட்டம் தீட்டியுள்ளார்'' எனவும் குற்றம் சுமத்துகிறார்கள். மேலும் கைது செய்யப்பட்டுள்ள பெங்களூர் தொழில் அதிபர் சந்திரசேகர், ''தான் ஒரே சமயத்தில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் உளவு பார்த்ததாக''க் கூறியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு பாகிஸ்தானைக் குற்றம் சுமத்துவதற்கு முன்வைக்கப்படும் காரணங்கள் வலுவாக இல்லாதிருப்பதோடு, விளக்கமளிக்க வேண்டிய சந்தேகங்களும் அநேகம் உள்ளன. மத்திய உள்துறை அமைச்சகம் இப்பிரச்சினை குறித்து இதுநாள் வரை வாய் திறக்காமல் இருப்பதற்கு இவையே காரணங்களாக இருக்கலாம். ஆனால் 'தேசிய'ப் பத்திரிகைகளோ இந்நிலையிலும், "பி.எஸ்.எல்.வி.1 ராக்கெட் தோல்வியடைந்ததற்கு தொழில்நுட்பக் குறைபாடு காரணமல்ல; பாகிஸ்தான் சதிதான் காரணம்" என எழுதித் தங்களின் அற்பத்தனத்தைக் காட்டி வருகின்றன.

இப்படி அற்பத்தனமாக நடந்து கொள்வது 'தேசிய' பத்திரிகைகள் மட்டும்தான் என்றில்லை; குட்டி அதிகாரிகள் தொடங்கி பிரதமர் முடிய பாகிஸ்தானை வசைபாடுவதில் யாரும் விதிவிலக்கானவர்களல்லர். பாகிஸ்தானின் சுதந்திர தினத்தன்று பெனசிர் புட்டோ, "காஷ்மீரைக் கைப்பற்றுவோம்" என சவடாலடித்துள்ளார். இதற்கு நமது நாட்டு வெளியுறவு மற்றும் உள்துறை அமைச்சக அதிகாரிகள் கண்டனம் தெரிவித்தாலே போதும்; அதுதான் அரசியல் ரீதியானதுமாகும். ஆனால், அதைவிடுத்து மறுநாள் பிரதமர் ராவ், "பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரைக் கைப்பற்றுவது இந்தியாவின் முடிந்திராத நிகழ்ச்சி நிரலாக உள்ளது" எனத் தனது சுதந்திர தின உரையில் குறிப்பிட்டார். இந்த யுத்த வெறி பேச்சை எந்தவொரு ஓட்டுக் கட்சியும் கண்டிக்காததோடு, "நாளையே யுத்தம்" என்றவாறு தங்கள் பங்குக்கு வெறிக் கூச்சலைக் கிளப்பின. "எல்லைக்கப்பாலுள்ள ஒரு நாடு" என பாகிஸ்தானை மறைமுகமாகக் குறிப்பிட்டு, மத்திய அமைச்சர்கள் வசைபாடுவதனை அவர்களது பொதுக்கூட்ட பேச்சுகளிலும் பத்திரிகை பேட்டிகளிலும் இன்று சர்வ சாதாரணமாகக் காண முடியும்.

பாகிஸ்தான் ஆயுதத் தளவாடங்கள் வாங்கும்பொழுதெல்லாம் இந்தியாவுக்கு எதிரான போர் தயாரிப்பாகச் சித்தரிக்கப்படுகிறது. கடந்த இரு மாதங்களுக்கு முன் பாகிஸ்தான் எதிர்க் கட்சி தலைவர் நவாஸ் ஷெரீப் பாகிஸ்தானிடம் அணுகுண்டு உள்ளதாகப் பொதுக் கூட்டங்களில் பேசினார். உடனே இங்குள்ள ஓட்டுக் கட்சிகளும் முதலாளித்துவ பத்திரிகைகளும், "நமது நாட்டில் அணுகுண்டு இல்லை என்பது போலவும் உடனே தயாரிக்க வேண்டும் என்றும்" தூபம் போட்டன. பா.ஜ.க. தனது 'தேசிய' செயற்குழு கூட்டத்தில் அணுகுண்டு தயாரிக்கச் சொல்லி தீர்மானமொன்றை நிறைவேற்றியது.

அரசின் அடக்குமுறை மற்றும் இந்து மதவெறி பாசிசம் காரணமாக எழுந்து வரும் அரசியல் வன்முறைகளுக்கும், கிரிமினல் அரசியல் தலைவர்கள் தங்களது எதிரிகளால் கொலை செய்யப்படுவதும் பாகிஸ்தானின் சதிச் செயல்



பாக. - இந்தியாவின் 'தேசிய' வெறிக்கூச்சல்களை எதிர்ப்பது தான் உண்மையான நாட்டுப் பற்றாகும்.

என முத்திரை குத்தப்படுகிறது. சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் குண்டு வெடிப்பு, இந்து முன்னணி தலைவர் ராஜகோபாலன் மற்றும் பம்பாய் நகர பா.ஜ.க தலைவர் ராம்தாஸ் நாயக் படுகொலை போன்றவை இதற்கு உதாரணங்கள். காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலுள்ள அனைத்துப் போராளி குழுக்களுக்கும் ஆந்திர மக்கள் யுத்த குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பாகிஸ்தான் உளவு நிறுவனத்துடன் தொடர்பு இருப்பதாக தொடர்ச்சியாக அவதூறுகள் பரப்பப்பட்டு வருகின்றன.

இருபுறமும் தூதரக அதிகாரிகளே உளவு வேலை பார்ப்பது சாதாரணமாக நடைபெற்று வருகிறது. ராஜேஷ் மித்தல் விவகாரத்தையடுத்து, கடந்த இரு மாதங்களுக்கு முன்பு மீண்டும் இது பூதாகரமாக உருவெடுத்தது. இரு நாடுகளும் பம்பாயிலும் கராச்சியிலும் உள்ள தூதரக அலுவலர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டன. இதனால் அச்சமயத்தில் நடந்து வந்த இரு தரப்பு சுற்று பேச்சு வார்த்தைகள் முறிந்து போய் இன்று அதிகாரிகள் மட்டத்தில் கூட, அரசியல் உறவைத் தொடர முடியாத நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

அதே சமயம் பாகிஸ்தானும் இந்தியாவை எதிர்ப்பதிலும் அம்பலப்படுத்துவதிலும் நேர்மையான வழிகளில் மட்டுமே போராடி வருவதாக யாரும் கூறிவிட முடியாது. இந்து முஸ்லீம் மதப் பிரச்னைகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது; முன்பு பஞ்சாபிலும் இப்பொழுது காஷ்மீரிலும் மதத் தீவிரவாதிகளுக்கு பயிற்சி - ஆயுத உதவிகள் அளிப்பது; உளவு - சதி வேலைகளில் ஈடுபடுவது; ஓட்டுப் பொறுக்கும் அரசியலுக்காக இந்தியா மற்றும் இந்து மத எதிர்ப்புணர்வை பாகிஸ்தானிய மக்கள் மத்தியில் தூண்டி விடுவது - இவைதான் அதனின் வழிமுறைகளாக உள்ளன.

இதனால் இந்திய ஆட்சியாளர்களுக்கு, தங்களது பிராந்திய மேலாதிக்கத்திற்காக பாகிஸ்தானின் உள்விவகாரங்களில் - சிந்து மற்றும் பலுசிஸ்தான் பிரச்சினைகளில் தலையிட்டு சதி வேலைகள் புரிவதையும் காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இராணுவத்தைக் கொண்டு தொடர்ந்து அட்டூழியங்கள் புரிந்து வருவதையும் எளிதாக மூடிமறைத்து விடமுடிகிறது. மைய அரசின் இத்தகைய விபரீதப் போக்கினால் "விளையாட்டு போட்டிகளில் கூட இந்தியா தோற்றாலும் பாகிஸ்தான் வெற்றி பெறக் கூடாது" என எண்ணுமளவுக்கு படித்த நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் பாகிஸ்தான் எதிர்ப்பு வேரூன்றி வருகிறது.

நீங்கள் நடுநிலையாகச் சிந்திப்பவர்களாக இருந்து, இந்த எலி விவகாரம் - சதி விவகாரம் என்ற ஆட்சியாளர்களின் பாகிஸ்தான் எதிர்ப்புக் கூச்சல் தங்களுக்கு எரிச்சலூட்டுமாயின் உங்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய ஒரு விசயத்தைத் தருகின்றேன்: பிளேக்கையடுத்து வட மாநிலங்களைத் தாக்கிய மலேரியாவுக்குக் காரணம் "மலேரியா கொசுக்களை உளவாளிகள் மூலம் பாகிஸ்தான் இரகசியமாக விட்டுச் சென்றுள்ளது" என இதுவரை குற்றஞ்சாட்டவில்லை என்பதுதான்

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

## மார்வாடி எதிர்ப்புப் போராட்டம்:

# மறைக்கப்பட்ட உண்மைக்கு மணியரசன் குழு வாக்குமூலம்

இப்போது தமிழ்த் தேசத் தன்னுரிமை முழக்கமிடும் மணியரசன், நெடுமாறன் போன்றவர்களுக்கென்று கொள்கையோ, கோட்பாடோ, சித்தாந்தமோ கிடையாது. காளிமுத்து, க. சுப்பு, வலம்புரி ஜான் போன்றவர்கள் பிழைப்புக்காக கட்சி மாறுவதைப் போல, இவர்கள் அதே நோக்கத்துக்காக நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்பவர்கள். இந்த முடிவுக்கு நாம் வந்தடைந்ததற்கு அவர்களே பல சான்றுகள் கொடுத்துள்ளனர்.

தி.மு.க. மூலமாக அரசியலில் நுழைந்து, சம்பத்தோடு தமிழ்த் தேசியக் கட்சி துவங்கி (அந்த தேசியத்துக்கும் அவரது இப்போதைய தேசியத்துக்கும் சம்பந்தமில்லை; அது "இந்திய தேசியம்", இது "தமிழ்த் தேசியம்") பிறகு காங்கிரசில் இணைந்து, ஸ்தாபன காங்கிரசாகப் பிளவுபட்டு, அப்புறம் இந்திரா காங்கிரசில் இணைந்து, வெளியேறி காமராஜ் தேசிய காங்கிரசு நிறுவி, தமிழ் தேசியத்துக்குத் திரும்பி, அதிலும் பல அவதாரங்கள் எடுத்து இப்போது தமிழ் தேசிய இயக்கமும் தமிழ் தேசிய விடுதலை முன்னணியும் கண்டுள்ளார், நெடுமாறன். எத்தனை அவதாரம் எடுத்தாலும் பிள்ளைமார் சாதிக்குரிய இந்திய தேசியமே அவரது நோக்கமாக உள்ளது.

பல ஆண்டுகள் போலி மார்க்சிஸ்டு தலைமையிடம் "விசுவாசம்" காட்டிவிட்டு, அடிப்படை நிலைப்பாடுகளில் மாறுபாடான காரணம் ஏதுமின்றி தமிழக எம்.சி.பி., மற்றும் அனைத்திந்திய எம்.சி.பி.ஐ., ஆக மாறி இப்போது தமிழ் தேசப் பொதுவுடமைக் கட்சி கண்டுள்ளார், திருவாளர் மணியரசன்.

ஒருவர் தமது ஆய்வுகள், அனுபவங்கள் அடிப்படையில் தமது நிலைப்பாடுகளையும் தேவையானால் அமைப்பையும் மாற்றிக் கொள்ள அல்லது புதிதாக உருவாக்கிக் கொள்ள உரிமை உண்டு. ஆனால் அதற்கு தகுந்த விமர்சன - சுயவிமர்சன அடிப்படையிலான விளக்கமளித்துச் செய்ய வேண்டியது அவரது கடமையாகும், நியாயமுமாகும். இதைக் கேள்விகளாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறு வெளியீட்டின் மூலம் "புதிய ஜனநாயகம்" எழுப்பியது.

அதற்குப் பதிலாக, தாம் புதிய விவரங்கள், ஆய்வுகள் அடிப்படையில் அடைந்த "மாற்றம் - வளர்ச்சி நோக்கிய மாற்றம்" என்று கூறிக் கொண்டு தனது சுய முரண்பாடுகளையும் சித்தாந்த ஒட்டாண்டித் தனத்தையும் மணியரசன் கும்பல் நியாயப்படுத்தியது. அதில் எம்.சி.பி.ஐ-க்கும் த.தே.பொ.க-வுக்கும் நிலைப்பாடுகளில் மாறுதல் இருந்தாலும் தமிழக எம்.சி.பி. ஆகவும், பிறகு அனைத்திந்தியக் கட்சியுடன் இணைந்து தமிழக எம்.சி.பி.ஐ. ஆக இயங்கிய போதும் தாங்கள் மேற்கொண்ட நிலைப்பாட்டுடன் அடிப்படையில் தொடர்பில்லாத அல்லது நேர்முரணான நிலைப்பாட்டை த.தே.பொ.க. எடுக்கவில்லை என்று சாதிக்கிறது. இதன் மூலம் அனைத்திந்தியக் கட்சியில் இணைந்தாலும் தான் ஒரு தனிக் கும்பலாக இயங்கியதாகக் கூறுகிறது. அப்படி இருந்தாலும் அந்த கும்பலின் வாதம் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதாகும். சி.பி.எம்-மில் இருந்து த.தே.பொ.க.வாக வந்த வழியில் இந்த மணியரசன் கும்பல் மேற்கொண்டதாகத் தரும் விளக்க ஆதாரமே இதை நிரூபிக்கிறது.

மணியரசன் கும்பல் சி.பி.எம்.- இல் இருந்து பிரிந்த பிறகு 1985 ஜூனில் சிதம்பரத்தில் தமிழக எம்.சி.பி.- இன் அமைப்புக் குழுவாகக் கூடி ஒரு அறிக்கையை நிறைவேற்றியது. அதன் படி சி.பி.எம்.-இன் 1964-இல் கல்கத்தா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட திட்டத்தையும், அப்போதே அக்கட்சி ஏற்றுக் கொண்ட 1951 நடைமுறைக் கொள்கை அறிக்கையையும் அதற்கு 1967, 73 ஆண்டுகளில் அளித்த விளக்கத்தையும் சரியானவை என்று மணியரசன் கும்பல் ஒப்புக் கொண்டது. ஆனால் தனது தாய்க் கட்சியின் மீது பின்வரும் விமர்சனத்தையும் (1985 ஜூன் சிதம்பரம் அறிக்கை மூலம்) மணியரசன் கும்பல் வைத்தது:

1969-இல் ஜோதிபாசுவைத் துணை முதல்வராகக் கொண்ட மேற்கு வங்க அரசை பதவி நீக்கம் செய்து, 1970-71-இல் இந்திரா அரசு கட்டவிழ்த்துவிட்ட அரைப் பாசிச அடக்குமுறையையும் கட்சி நெருக்கடியையும் தொடர்ந்து அதிர்ச்சிக்குள்ளான தலைமை புரட்சித் தன்மையை இழந்தது. கட்சியின் கொள்கைகளைப் பின்னுக்குத் தள்ளியது. 1969-இலிருந்து கட்சி இத்திருத்தல் வாதத்துக்குள்ளாகி, அதன் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போட்டது. இதன் காரணமாய் 1951 நடைமுறைக் கொள்கை அறிக்கைக்கு சி.பி.எம். 1967, 73-களில் அளித்த சரியான விளக்கத்தை நிராகரித்து 1976-இல் ஒரு புதிய விளக்கம் அளித்தது; இதன் மூலம் "கட்சியின் நடைமுறைத் தந்திரோபாயம் திருத்தல்வாதப் பாதைக்குள்ளானது. மொத்தத்தில் ஆரோக்கியமான வளர்ச்சியை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருந்த கட்சிக்கு நோய்க் கிருமிகள் கொண்ட மருந்து 1976 தீர்மானம் ஊசியின் மூலம் செலுத்தப்பட்டது". இந்தியப் புரட்சி பற்றிய பார்வையை மாற்றித் திருத்தல்வாதப் போக்கு ஏற்பட்டது; பகுதிப் புரட்சிப் பாதையைக் கைவிட்டு நாடு தழுவிய புரட்சி என்கிற ரஷ்ய பாணியிலான நடைமுறைக்கு மாறியது; 1964 கட்சித் திட்டத்துக்கு உலை வைத்து துரோகம் செய்து விட்டது; அதில் உள்ள புரட்சிகரமான நிலையைத் திரித்து இடதுசாரி ஜனநாயக அணி எனும் பேரால் திருத்தல்வாதப் பாதைக்கு மாறியது. நாடாளுமன்றப் பங்கேற்பை செயல் தந்திரமாக இல்லாமல் யுத்த தந்திரமாக்கி அதிலேயே மூழ்கி அழியும் ஓர் இயக்கமானது. விவசாயிகள் போராட்டத்திலும், சாதிப் பிரச்சினையிலும் திட்டவட்டமான முடிவில்லை; ஆட்சி மொழிப் பிரச்சினையிலும் ஈழப் பிரச்சினையிலும் அதற்கு உறுதிப்பாடில்லை.

சி.பி.எம்.-க்கு எதிராக மேற்கண்ட விமர்சனங்கள் இருந்த போதும், அதிலிருந்து வெளியேறி தமிழக எம்.சி.பி என்று தனி அமைப்பான போதும் மணியரசன் கும்பல் தனது தாய்க் கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகளான கட்சித் திட்டம், 1951 நடைமுறைக் கொள்கை அறிக்கை, 1967, 73-களில் அதற்கு சி.பி.எம். அளித்த விளக்கங்கள் ஆகியவற்றில் இருந்து மாறுபடவில்லை. மேற்கண்டவற்றின் அடிப்படையில் உறுதியாக செயல்படுவதுதான் அனைத்திந்திய கட்சியுடன் இணைந்து தமிழக எம்.சி.பி. ஆன மணியரசன் கும்பலின் நிலைப்பாடு.

இதன்படி பார்த்தால், எம்.சி.பி.ஐ. மற்றும் த.தே.பொ.க. நிலைப்பாடுகளிடையே மாறுதல் இருந்தாலும், தமிழக எம்.சி.பி. ஆகவும், தமிழக எம்.சி.பி.ஐ. ஆகவும் தாங்கள் மேற்கொண்ட நிலைப்பாட்டுடன்

> இந்திய அரசின் வர்க்கத் தன்மை, முதன்மையான முரண்பாடு, மக்கள் ஜனநாயகப் புரட்சி, 1951 நடைமுறைக் கொள்கைத் திட்ட அறிக்கை ஆகியவற்றில் சி.பி.எம்.-ன் நிலைப்பாடும் மணியரசன் கும்பலின் நிலைப்பாடும் ஒன்றே!



படிப்பகம்

www.padippakam.com

அடிப்படைத் தொடர்பில்லாத அல்லது நேர் முரணான நிலைப்பாட்டை த.தே.பொ.க. எடுக்கவில்லை என்கிற வாதம் உண்மையானால், சி.பி.எம்.-இன் நிலைப்பாடுகளுடன் அடிப்படைத் தொடர்பில்லாத அல்லது நேர் முரணான நிலைப்பாட்டை த.தே.பொ.க. எடுக்கவில்லை என்றாகிறது. எது சரியானது? எது உண்மையானது?

1969-லேயே சி.பி.எம். தலைமை புரட்சித் தன்மையை இழந்து திருத்தல் வாதத்துக்குள்ளாகி, கட்சியின் கொள்கைகளைப் பின்னுக்குத் தள்ளி அதன் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போட்டது என்று மணியரசன் கும்பல் ஒப்புக் கொள்கிறது. ஆனால் அதன் பின்னும் 1973 மத்தியக் கமிட்டியின் "நமது உடனடி ஸ்தாபனக் கடமைகள்" என்ற அறிக்கை சரியாக இருந்ததாகவும் சாதிக்கிறது. 1967, 73 தீர்மானங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு 1976-இல் வந்த அடிப்படைக் கொள்கை மாற்றங்கள், விளக்கங்கள், வியாக்கியானங்கள் தரப்பட்டதுதான் கட்சி தவிர்க்க முடியாத திருத்தல்வாதப் பாதைக்கு வழிகோலியது என்றும் தீர்மானிக்கிறது (மணியரசன் கும்பலின் சிதம்பரம் 1985 அறிக்கை பக் 14, 15). எது உண்மை? 1969 இப் புரட்சித் தன்மையை இழந்த, திருத்தல் வாதத்துக்குள்ளான கட்சி 1973-இல் எப்படிச் சரியான தீர்மானங்களை நிறைவேற்றியது? 1976-இல்தான் திருத்தல்வாதப் பாதைக்கு வழிகோலியதா?


அரசியல், சித்தாந்த மேதைகளாகவும், ஆய்வாளர்களாகவும் நடிக்கும் மணியரசன் கும்பலுக்கு, 1969-இல் சி.பி.எம். தலைமை புரட்சித் தன்மை இழந்து திருத்தல் வாதத்துக்குள்ளானது 16 ஆண்டுகளுக்குப் பிறகுதான் தெரிந்ததா? 1976-இல் கட்சியின் அடிப்படைக் கொள்கையை - "புரட்சிக்கான பாதை"யைக் கைவிட்டது 9 ஆண்டுகளுக்குப் பிறகுதான் உரைத்ததா? ஆனால் இதே கால கட்டத்தில் சி.பி.எம்.-மின் திருத்தல்வாதத்துக்கு எதிராக உள்ளேயும் வெளியேயும் இருந்து போராடி வந்திருக்கிறார்கள், நக்சல்பாரி புரட்சியாளர்கள். சி.பி.எம். கட்சியின் திட்டமே எல்லா வகையிலான திருத்தல்வாதத்தையும் உள்ளடக்கியது; ஆயுதப் போராட்டத்துக்குப் பதிலாக சமாதான மாற்றத்தை ஏற்கிறது; குருச்சேவ் தலைமையிலான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி திருத்தல்வாதக் கட்சியாகி விட்டது என்று வரையறுத்த போதும் அந்நாடும் அதன் தொங்குசதை நாடுகளும் சோசலிச நாடுகள் என்றே அணுகியது; 1951 கொள்கை அறிக்கையை ஏற்பதன் மூலம் சீனப் பாதையும் இல்லாமல், ருசியப் பாதையும் இல்லாமல் பகுதி ரீதியில் அதிகாரத்தைக் கைப்பற்றும் விவசாயிகளின் கொரில்லாப்போரும், தொழிலாளர்களின் ஆயுதந்தாங்கிய பேரெழுச்சியும் இணைந்த இந்தியப் புரட்சி பாதையைப் பின்பற்றுவதாக சி.பி.எம். கூறுவதே பித்தலாட்டமானது; தனது நாடாளுமன்ற சமரச சரணடைவுப் பாதையை மூடி மறைப்பதாகும் - என்று நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் விமர்சித்துப் போராடினர்.

சி.பி.எம். தேசிய இன ஒடுக்கு முறையையும் பார்ப்பனீயத்தையும் உயர்த்திப் பிடிக்கிறது; அதன் 1972 மதுரை, 1968 கொச்சி மாநாடுகளின் முடிவுப்படி தேசிய இன ஒடுக்குமுறையை உயர்த்திப் பிடிக்கும் திருத்தங்கள், சேர்க்கைகள் செய்யப்பட்டன; ஆரிய வருகை, வேத - உபநிடத விளக்கங்கள், புராண - இதிகாச ஆய்வுகள், பாரதீய கலாச்சாரக் கண்ணோட்டம் ஆகிய அனைத்திலும் அக்கட்சி பார்ப்பனீயத்துக்கு வக்காலத்து வாங்குகிறது. இதை நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தும்கூட மணியரசன் கும்பல் சாதிப் பிரச்சினையிலும், இந்திய ஆட்சி மொழிக் கொள்கையிலும், ஈழ விவகாரத்திலும் சி.பி.எம்.மிடம் தெளிவில்லை, உறுதிப்பாடில்லை என்று மட்டுமே 1985 வரை பார்த்தது; இன ஒடுக்குமுறையை உயர்த்திப் பிடிக்கும் அக்கட்சியின் திட்டத்தை சரியானது என்றே வாதிட்டது.

சி.பி.எம்.-இன் துரோகத்துக்கும் திருத்தல்வாதத்துக்கும் எதிராக புரட்சியாளர்கள் எழுப்பிய பிரச்சினைகள் மீதான விவாதம் நடத்துவதற்காக 1968-இல் மேற்கு வங்கம் - பர்துவானில் தனிப் பிளீனம் கூட்டப்பட்டது. பெரும்பான்மை திரிபுவாதப் பாதையிலேயே ஊன்றி நின்ற நிலையில் புரட்சியாளர்கள் கட்சியிலிருந்து வெளியேறினர்; அதற்கு முன்பே வெளியேறிய, வெளியேற்றப்பட்ட நக்சல்பாரி புரட்சியாளர்களுடன் இணைந்தனர்.

நக்சல்பாரிப் புரட்சியாளர்களை அரசியல் - சித்தாந்த ரீதியில் சந்திக்க திராணியற்ற சி.பி.எம். தலைமை அவர்களை சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் - புரட்சியை சீர்குலைக்கும் ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் என்று அவதூறு செய்தனர். அதையே விழுங்கி வாந்தி எடுத்து வந்ததுதான் இந்த மணியரசன் கும்பல். சி.ஐ.ஏ. என்று சொல்லப்படுபவர்கள் இப்படி மக்களோடு ஐக்கியப்பட்டுப் போராடி மாண்டு போவார்களா? அவர்களை ஆளும் வர்க்கங்கள் இப்படிக் கொன்றொழிக்குமா? "சி.ஐ.ஏ."-க்காக செயல்படுபவர்களை விடுதலை செய்வோம் என்று சொல்லி "புரட்சிக்" கட்சியான சி.பி.எம். ஓட்டுக் கேட்பது சரிதானா? என்பவை எப்போதும் இந்த மணியரசன் கும்பலுக்கு உறைக்கவில்லை! இப்போதும் ஆளும் வர்க்கங்களும், இவர்களது தாய்க் கட்சியும் சொல்வது போல "நக்சலைட்டுகள்" என்றே இந்தக் கும்பல் புரட்சியாளர்களைக் குறிப்பிட்டு இழிவுபடுத்த முயலுகிறது. சி.பி.எம்-இல் இருந்து வெளியேறித் தமிழக எம்.சி.பி. ஆகவும், பிறகு எம்.சி.பி.ஐ. ஆகவும் அவதாரங்கள் எடுத்த போதும் அடிப்படையில் தம் தாய்க் கட்சியின் நிலைப்பாடுகள், நடைமுறையில் இருந்து மணியரசன் கும்பல் மாறுபடவில்லை.

## கொள்கை ஆய்வு விளையாட்டு!



பெ.மணியரசன்

அனைத்திந்திய கட்சியுடன் இணைந்து தமிழக எம்.சி.பி.ஐ. ஆக இயங்கிய போது இந்த கும்பல் மேற்கொண்ட நிலைப்பாட்டையும் பார்ப்போம். அதற்கு அடிப்படைத் தொடர்பில்லாத அல்லது நேர்முரணான நிலைப்பாட்டை த.தே.பொ.க. எடுக்கவில்லை என்று சாதிக்கிறதே இக்கும்பல் இதுவும் உண்மையா என்றும் பார்ப்போம்.

அதே சிதம்பரத்தில் கூடிய தமிழக எம்.சி.பி.ஐ.-இன் சிறப்புப் பேரவை, "தமிழ் தேசத் தன்னுரிமைக்கு முன்னுரிமை கொடுப்பது பற்றி" ஒரு ஆவணத்தை நிறைவேற்றியது. அதன் ஏழாவது பிரிவு, "நமது கட்சித் திட்டம் பெரு முதலாளிகள் தலைமையிலான முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அரசு, மேலும் மேலும் ஏகாதிபத்திய மூலதனத்துடன் சமரசம் செய்து கொண்டுள்ளது என்றும் இந்த அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுதான் பிரதான முரண்பாடு என்றும் சுட்டிக் காட்டுகிறது." மக்கள் என்றால் யார், யார் என்று விளக்கமும் அளிக்கிறது. பிறகு, "இந்த மக்களைக் கம்யூனிஸ்டு கட்சி தலைமையில் திரட்டி, பிரதான முரண்பாட்டை மக்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பதன் மூலமாக மக்கள் ஜனநாயகப் புரட்சி நிறைவேறும்" என்று தீர்வும் கூறுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு தனது தாய்க் கட்சியின் திட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டே அதன் 8,9 பத்திகளில் பின்வருமாறு மணியரசன் கும்பலின் 12-11-89 ஆவணம் கூறுகிறது: 8.''நமது புரட்சி அனைத்திந்தியப் புரட்சியாக இருக்காது, அது பகுதிப் புரட்சியாகத் தான் இருக்கும் என்று 1951 நடைமுறைத் திட்டம் கூறுகிறது. இந்தியா பல்தேச மற்றும் பல் இனக்குழு (Multi - National & Multi - ethnic) நாடு. அதில் ஒவ்வொரு தேசப் பகுதியிலும் பல்வேறு அளவுகளில் முதலாளித்துவ வளர்ச்சி மற்றும் புரட்சிகர இயக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதாலேயே இந்த நடைமுறைத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. 9. இன்றைய கட்டத்தின் பிரதான முரண்பாட்டைக் கணக்கில் கொண்டு பார்க்கும் போது, 1951 நடை முறைத் திட்டத்தின் படியான ''பகுதி'' என்னவாக இருக்கும்? பெரும்பாலும் இது ஒரு தேசம் அல்லது தேசிய இனப் பகுதியாக இருக்கும். இந்தியாவின் மக்கள் ஜனநாயகப் புரட்சியானது இந்த தேசங்களில் அல்லது தேசிய இனப் பகுதிகளில் நடக்கும் பகுதிப் புரட்சியாக இருக்கும் என்பது இதன் சாரம்.'' இப்படிக் கூறும் மேற்படி ஆவணம் அடுத்து தேசிய சுயநிர்ணய உரிமையை விளக்கி தேசிய இனப் பிரச்சினையில் சி.பி.ஐ., சி.பி.எம். -இன் அணுகுமுறை, தீர்வுகளில் உள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டுகிறது. பிறகு ''12. மக்கள் ஜனநாயக இந்தியாவில் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமையை உறுதி செய்கிறது நமது கட்சித் திட்டம்'' என்கிறது.

இதன் பொருள், இந்திய அரசின் வர்க்கத்தன்மை, முதன்மையான முரண்பாடு, மக்கள் ஜனநாயகப் புரட்சி ஆகிய சி.பி.எம். மின் நிலைப்பாடுகளைத் தக்க வைத்துக் கொண்டே, மக்கள் ஜனநாயக இந்தியாவில் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமையை உறுதி செய்கிறது, மணியரசன் கும்பலின் தமிழக எம்.சி.பி.ஐ. கூடவே 1951 நடைமுறைத் திட்டத்துக்கு ஒரு புதிய வியாக்கியானமும் தருகிறது. இது தான் தனது முந்திய, பிந்திய நிலைப்பாடுகளுக்கு இடையிலான உறவு என்று த.தே.பொ.க.வாக அவதாரம் எடுத்த பின்னும் எடுத்துக் காட்டுகிறது. (1992 செப். கண்ணோட்டம் பக்: 7,8) இதை புத்தி தெளிவில்லாததால் புரிந்து கொள்ளாது அரைவேக்காட்டுத் தனமாக ''புதிய ஜனநாயகம்'' எழுதுவதாகச் சாடுகிறது.

அதிருக்கட்டும்! புத்தித் தெளிவும் முழுவேக்காடு நிலையும் அடைந்த இந்த மணியரசன் கும்பல் தரும் ஆவண ஆதாரத்தையே பாருங்கள். அது இக்கும்பல் தமிழக எம்.சி.பி.ஐ. ஆக மாறியபோதும் சி.பி.எம். - இன் அடிப்படைத் திட்டம், 1951 நடைமுறைக் கொள்கை அறிக்கையில் இருந்து மாறுபடவில்லை என்றுதானே காட்டுகிறது.

இதன்படி பார்த்தால், எம்.சி.பி.ஐ. மற்றும் த.தே.பொ.க நிலைப்பாடுகளிடையே மாறுதல் இருந்தாலும் தமிழக எம்.சி.பி. ஆகவும், தமிழக எம்.சி.பி.ஐ. ஆகவும் தாங்கள் மேற்கொண்ட நில்லபபாட்டுடன் அடிப்படை தொடர்பில்லாத அல்லது நேர் முரணான நிலைப்பாட்டை த.தே.பொ.க. எடுக்கவில்லை என்கிற வாதம் உண்மையானால் சி.பி.எம்.-இன் நிலைப்பாட்டுடன் அடிப்படைத் தொடர்பில்லாத அல்லது நேர் முரணான நிலைப்பாட்டை த.தே. பொ.க எடுக்கவில்லை என்றாகி விட்டது. எது சரியானது, எது உண்மையானது? எது புத்தித் தெளிவோடும், முழு வேக்காடோடும் கூறப்பட்டது?

வேளாண் அரங்கில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை 1985-ஆம் ஆண்டே இந்தக் கும்பல் கணக்கில் எடுத்துக் கொண்டதாகக் கூறும் அதே பத்தியில் 1985இலும் அதன் பிறகும் வெளியிட்ட பிரசுரங்களில் ''வேளாண் அரங்கில் சி.பி.எம். கட்சியின் பழைய நிலைப்பாட்டிற்கு அழுத்தம் கொடுத்திருந்தோம்'' என்றும் ஒப்புக் கொள்கிறது. ஆனால் ஏற்கனவே நிருபித்தவாறு சி.பி.எம்.மின் பிற நிலைப்பாடுகளையும் அக்கும்பல் உயர்த்திப் பிடித்தது என்பதே உண்மை. நிலக்கிழமை உற்பத்தி உறவு பற்றிய ஆய்வு நோக்கில் ஏற்பட்ட மாற்றத்தின் மூலக் கருவை 1985 நவம்பரில் நடந்த எம்.சி.பி.ஐ மாநாட்டில் மாற்றுக் கருத்தாகவும் 1986-இல் இக்கும்பல் இங்கு நிறைவேற்றிய அறிக்கையிலும் உள்ளதாகக் கூறுகிறது. இந்த நிலைப்பாட்டை எம்.சி.பி.ஐ-க்குள் தொடர்ந்து வலியுறுத்தி உட்கட்சி விவாதம் நடத்தியதன் விளைவாக அதன் முதல் பேராயத்தின் கட்சித் திட்டத்தில் பெரு முதலாளிகள் தலைமையிலான முதலாளிய நிலக்கிழமை அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மையானது என்று வரையறுக்கும் அளவிற்கு வெற்றி பெற்றதாகப் பீற்றிக் கொள்கிறது.




மலையைத் தோண்டி எலியைப் பிடித்ததாகப் பீற்றிக் கொள்கிறார்களே இதே தான் சி.பி.எம். நிலைப்பாடு ஆகும். இந்திய அரசு பற்றிய இந்த வரையறுப்புதான் தமிழக எம்.சி.பி.ஆக 1985 ஜூனிலும், தமிழக எம்.சி.பி.ஐ. ஆக 1989 நவம்பரிலும் இக்கும்பல் நிறவேற்றியது. ஆனால் த.தே.பொ.க.வாக அவதாரம் ''எடுத்தபின் இந்திய அரசு பற்றிய அதன் வரையறுப்பு என்ன? நிலப்பிரச்சினையில் நாங்கள் செய்த ஆய்வின் தொடர்ச்சியாக, அரசு எந்திரத்தில் அதிகாரம் செலுத்தும் ஓர் உறுப்பாக இல்லாமல் அரசின் மீது செல்வாக்கு செலுத்துபவர்களாக நிலக்கிழார்கள் இருக்கிறார்கள் என்று வரையறுப்புக்கு வந்துள்ளோம் (காண்க: த.தே.பொ.க. கொள்கை அறிக்கை)'' என்கிறது (92 செப் கண்ணோட்டம் பக்:7).

உண்மையில் மணியரசன் கும்பலுக்கென்று தெளிவான, நிச்சயமான நிலைப்பாடு என்று எதுவுமே கிடையாது. 1985-இல் தமிழக எம்.சி.பி. ஆகவும், 1989 இல் தமிழக எம்.சி.பி.ஐ. ஆகவும் நிறைவேற்றிய ஆவணங்களிலும், 1992-இல், த.தே.பொ.க. வாக ''புதிய ஜனநாயக''த்துக்கு அளித்த பதிலிலும் இந்திய அரசின் வர்க்கத் தன்மை முதன்மையான முரண்பாடு, மக்கள் ஜனநாயகப் புரட்சி, 1951 நடைமுறைக் கொள்கைத் திட்ட அறிக்கை ஆகியவற்றில் சி.பி.எம்.-இன் நிலைப்பாடும் மணியரசன் கும்பலின் நிலைப்பாடும் ஒன்றே! (நடைமுறை செயல் முழக்கம், திட்டத்தில் தன்னுரிமையை ஏற்பது ஆகியவற்றில் மட்டுமே 1989-க்குப் பிறகு மாறுபட்டது). அதே சமயம் மேற்கண்ட அவதாரங்களின் போது இந்த மணியரசன் கு.ம்பல் எடுத்த நிலைபாடுகளும் த.தே. பொ.க. என்கிற பெயரில் இப்போது எடுத்துள்ள நிலைப்பாடுகளும் மாறுபட்டவை, முரண்பாடுகள் நிறைந்தவை. இந்த மாறுபாடுகளுக்கும், முரண்பாடுகளுக்கும் தகுந்த விளக்கமும், அதோடு அவர்களது முந்திய நிலைப்பாட்டுக்கும் பிந்திய நிலைப்பாட்டுக்கும் இடையிலான உறவு பற்றிய விளக்கமும் கோரியதற்காக ''புதிய ஜனநாயகத்துக்கு புத்தி தெளிவில்லை'', ''அரைவேக்காட்டுத்தனம்'' என்று ஆத்திரத்தோடு எழுதியது, மணியரசன் கும்பல். தமது ஆய்வின் அடிப்படையில் தேவையான மாற்றங்களைச் செய்து வந்துள்ள போதும் எந்த மாற்றமும் அவர்கள் ஏற்கனவே எடுத்த நிலைக்கு நேர்முரணாக இருந்ததில்லை என்று மணியரசன் கும்பல் சாதிக்கிறது.

ஆனால் தன்னுரிமைக்கு முன்னுரிமை தரும் த.தே.பொ.க.-வாக மாறிவிடுவதென்று முடிவெடுத்ததில் இருந்துகூட முரணான நிலைப்பாடுகளை இந்த கும்பல் எடுத்துள்ளது. சான்றாக, பெரு முதலாளிகள் தலைமையிலான முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அரசு என்றும் இந்த அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடு என்றும், அதைத் தீர்ப்பதே கட்சியின் திட்டமாகிய மக்கள் ஜனநா



படிப்பகம்

www.padippakam.com

யகப் புரட்சி என்றும் தன்னுரிமை ஒரு செயல் முழக்கம் - பகுதிப் புரட்சி என்றும் 12-11-89இல் முடிவு செய்தது. இதையே தமது முந்திய, பிந்திய நிலைப்பாடுகளுக்கு இடையிலான உறவுக்கான விளக்கமாக செப். '92 இல் எடுத்துக் காட்டியது. ஆனால் 1992 பிப்ரவரியில் நிறைவேற்றப்பட்ட த.தே.பொ.க கொள்கை அறிக்கைப் படி அப்போதே இவை மாறிப்போயிருந்தன. பெரு முதலாளிகள் தலைமையிலான முதலாளிய பார்ப்பனீய - இந்தி ஆதிக்க அரசு என்றும் ஆளும் சக்திகளுக்கும் தமிழ்த் தேச மக்களுக்குமான முரண்பாடு தான் இங்கு முதன்மையான முரண்பாடு என்றும் தமிழ்த் தேசிய எழுச்சிக்குத் தடையுடைத்து முன்னேறி அதன் ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றுவதே இன்றைய புரட்சி என்றும் வாதிடுகிறது மணியரசன் கும்பல்.

இந்தக் கும்பல் தலைவர் மணியரசன் 93 ஏப்ரலில் எழுதுகிறார்: "தமிழ்ப் பாட்டாளி வர்க்கம் சந்திக்கும் முதன்மையான முரண்பாடு ஒடுக்கும் இந்தி தேசிய இனத்திற்கும் ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடு", "பனியாவை உள்ளடக்கிய இந்தி தேசிய இனம்தான் இந்தியாவில் ஒடுக்குகின்ற தேசிய இனம். ஒடுக்கும் தேசிய இனத் தொழிலாளியும் ஒடுக்கப்படும் தேசிய இனத் தொழிலாளியும் சம தளத்தில் நிற்க வில்லை. ஒடுக்கும் தேசிய இனத்தில் ஆதிக்க வர்க்கப் பிரிவுகள் ஒடுக்குமுறையின் பெரும்பாலான பலனை உறிஞ்சினாலும் அதன் உழைக்கும் வர்க்கப் பிரிவுகளும் குறைந்த அளவு பலனைப் பெறுகின்றன. எனவே இந்தி தேசிய இன ஒடுக்குமுறையில் இருந்து தமிழ்த் தேசிய இனத்தை விடுவிப்பது தமிழ் பாட்டாளி வர்க்கத்தின் முதற் பெரும் கடமை (தமிழர் கண்ணோட்டம் 93 ஏப். பக் 14)

இங்கே முதன்மையான முரண்பாடு, கடமை பற்றி முன்பு எடுத்த முடிவுகளுக்கும் தனது கொள்கை அறிக்கைக்கும் முரணான நிலை எடுக்கிறர் மணியரசன். அதன் பிறகு இந்தக் கும்பலின் இன்னொரு தலைவர் தணிகைச் செல்வம் பின்வருமாறு எழுதுகிறார்: "இந்திய மைய அரசுக்கும் மக்களுக்குமான முதன்மை முரண்பாட்டில் மக்களின் சார்பில் நின்று இந்த முரண்பாட்டைத் தீர்க்கும் கோட்பாடும் செயல்பாடும் தேச இனத்தின் தன்னுரிமைப் போர் ஒன்றேயாகும்." "தமிழ்த் தேசியத் தன்னுரிமை இயக்கம் என்பது இந்திய மார்க்சியத்தின் தர்க்க ரீதியான விளைவு. இந்தக் காலக்கட்டத்தில் இந்த மைய முழக்கத்தைப் போர் உத்தியாக (strategy) கையில் ஏந்தாதக் கட்சி மார்க்சியத்துக்கும் மக்களுக்கும் துரோகமிழைக்கும் கட்சியாகும்". (த.க. '94 பிப்-மார். பக்:25)

ஆக, முதன்மையான முரண்பாடு, யாருக்கெதிரான புரட்சி என்பதில் மாறுபாடு ஆகியவற்றில் முரணான நிலைகள் எடுத்துள்ளனர். தன்னுரிமை என்பது செயல் முழக்கமென்றும் பகுதிப் புரட்சி என்றும் மணியரசனும் தீர்மானங்களும் கூறினாலும், அது யுத்த தந்திரம் என்கிறார் தணிகைச் செல்வம். ஒரு புதிய வகை இந்தியாவைக் கற்பிதம் செய்வதாக ராஜதுரையை விமர்சிக்கும் அதே சமயம் 1951 நடைமுறைக் கொள்கை அடிப்படையில் தன்னுரிமை என்பது ஒரு பகுதிப் புரட்சிதான் என்று நமக்கு விளக்கம் அளிக்கிறார்கள். இந்தப் பகுதிப் புரட்சியின் முழுமை ஒரு மக்கள் ஜனநாயகப் புரட்சியை கற்பிதம் செய்கிறதென்பது சுய முரண்பாடுதானே!

• தேசிய இனம் என்பது கற்பிதமானதல்ல; மொழி, பொருளாதாரம் ஆகிய இரண்டும் அவை சார்ந்த அடையாளங்களும் தேசிய அடையாளங்களாகவே புறநிலையில் உள்ளவை என்று ராஜதுரையின் நிலைப்பாட்டிற்கு மறுப்புக் கூறுகிறது, மணியரசன் கும்பல். ஆனால், பீகார், உ.பி., ம.பி. மாநிலங்களில் இந்தி எந்த வட்டாரத்திலும் தாய்மொழியாக இல்லை. கங்கை சமவெளியில் உள்ள பத்து விழுக்காடு உத்தியோகப் பிரிவினர் நடைமுறை காரணமாக இந்தியைப் பேச்சு மொழியாக வைத்துள்ளனர். இங்கு அறிஞர்களும் கவிஞர்களும் தங்கள் புத்தக விற்பனைக்காக வடமாநிலங்களில் இந்தியைப் பொது மொழியாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். (93 ஜூன் த. கண்ணோட்டம் பக்: 17) இது பீகார் பேரா. இராஜேந்திர ராம் மூலம் தாம் அறிந்த புதிய செய்தி என்கிறது மணியரசன் கும்பல். இதை மணியரசன் கும்பல் ஏற்கிறதா? இதை அறியாமலேயே இந்தியாவில் தன்னுரிமைப் பிரச்சினை, தேசிய இனங்கள் மற்றும் பிற ஆய்வுகள் முடிவுகள் செய்ததா?

> **தன்னுரிமைக்கு முன்னுரிமை தரும் த.தே.பொ.க.-வாக மாறிவிடுவதென்று முடிவெடுத்ததில் இருந்துகூட முரணான நிலைப்பாடுகளை மணிரசன் கும்பல் எடுத்துள்ளது.**

இந்தி யாருக்கும் தாய் மொழி இல்லை என்றால் இந்தி தேசிய இனம், அதன் ஒடுக்குமுறை, அதற்கும் தமிழ்த் தேசிய இனத்துக்கும் இடையிலான முரண்பாடு, அதுவும் இவர்களது புரட்சியைத் தீர்மானிக்கும் முதன்மை முரண்பாடு ஆகியவை பற்றிய முடிவுகள் எடுத்ததா?

"மார்வாரி - குஜராத்தி பனியாக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு, எல்லாத் தேசிய இனத் தரகு அதிகார முதலாளிகள் நிலப்பிரபுக்களும்தான் தேசிய இன ஒடுக்கு முறைக்குக் காரணம்; ஒடுக்கும் தேசிய இனம் என்று எதையும் கூற முடியாது" என்கிற நமது நிலைப்பாடு சி.பி.எம். கட்சியின் கையடக்கப் பதிப்பு, பொய் சூத்திரம் என்று மணியரசன் கும்பல் இப்போது, ஜூலை '94 இல்கூட அவதூறு செய்தது. ஓராண்டுக்கு முன்பே இந்தியாருக்கும் தாய்மொழி இல்லை என்று அறிந்தும் வட இந்திய மக்களின் தாய் மொழி இந்தி என்று இக்கும்பலே கற்பிதம் செய்து கொண்டு பனியாக்களையும் பாட்டாளிகளையும் உள்ளடக்கிய இந்தி தேசிய இனம் இருப்பதாக வாதம் புரிகிறதே இது சரியா?

இப்படித் தமது சொந்த ஆய்வுகள், முடிவுகள், நிலைப்பாடுகள் பற்றிய உறுதியோ, தெளிவோ, அறிவோ இல்லாத ஒரு கும்பல்தாம் தம்மை அரசியல் சித்தாந்த மேதாவிகளாகக் காட்டிக் கொண்டு தனி இயக்கம் கண்டுள்ளது. தேசிய இனப் பிரச்சினையில் 'பாண்டித்யம்' பெற்றுள்ள இந்த கும்பல்தான் ஈழத்தில் வாழும் தமிழர்களும் தமிழ் நாட்டுத் தமிழர்களும் ஒரே இனம்; தேசம்தான் வேறு வேறு என்கிறது! தேசத்துக்கும் இனத்துக்கும் இப்படி பொருள் கற்பிப்பவர் எவரும் ஆய்வாளர், புத்தி தெளிவுள்ளவர், முழுவேக்காடு என்று கூறிக் கொள்ள முடியுமா?

தமிழினத் தன்னுரிமை, தமிழர் பண்பாடு அவற்றின் மீது பார்ப்பன - பனியா ஆக்கிரமிப்பு, சீரழிவு பற்றி எழுதும் அதே சமயம், இந்த மணியரசன் கும்பல் போதிக்கும் பண்பாடு என்ன தெரியுமா? பாலுறவுச் சுதந்திரம், மண வாழ்க்கைக்கு அப்பால் கட்டுப்பாடற்ற பாலுறவு; பெண்விடுதலை என்கிற பெயரில் பெண்களைக் கொச்சைப் படுத்தும் அன்னிய மேலைக் கலாச்சாரம் தான் ('94 ஏப். தமிழர் கண்ணோட்டம்). இதுதான் தமிழர் பண்பாடா? தன்னுரிமை என்பதற்கு தனி மனித பாலுறவு உரிமை என்று பொருள் கொள்கிறார்களா?

சொந்த முடிவுகள் என்று போனால் இப்படிக் குழப்பம் சுய முரண்பாடுகளில் சிக்கிக் கொள்ளக் கூடுமென்றுதானோ என்னவோ, இந்தக் கும்பல் சர்வதேசப் பொதுவுடமை இயக்கப் பிரச்சினைகளில் (புரட்சிக்குப் பின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிராகரித்து பலகட்சி ஆட்சி நிறுவும் முடிவு தவிர) தனது தாய்க் கட்சியின் நிலைபாடுகளிலேயே ஊன்றி நிற்கின்றது. மாவோ சிந்தனை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்கிற கலாச்சாரப் புரட்சியை நிராகரிப்பது, குருச்சேவ் திருத்தல்வாதம் என்று கூறிக் கொண்டே சோவியத் ஒன்றியத்தையும் கிழக்கு ஐரோப்பாவையும் கோர்பி காலத்திய இறுதி வீழ்ச்சி வரை சோசலிசமாக ஏற்பது, அங்கு நடந்த ஆட்சிக் கவிழ்ப்புகள், சோசலிசத்தை வீழ்த்திய அதே திரிபுவாதக் கட்சிகள் மீண்டும் அங்கு ஆட்சிக்கு வருவதை வரவேற்பது உட்பட அனைத்திலும் சி.பி.எம்-க்கும் இக் கும்பலுக்கும் மாறுபாடு கிடையாது.

ஆகவே, எப்படிப் பார்த்தாலும் தலைமை, புகழ் போன்ற பிழைப்புவாத நோக்கங்களுக்காகத் தனிக்குழு, தன்னுரிமை, பொதுவுடமை பேசும் கும்பல்தானே தவிர எந்த ஒரு அரசியல், சித்தாந்த அடிப்படையும் இல்லாததுதான் மணியரசன் கும்பல் என்பது தெளிவாகிறது. ● ம.வா.



படிப்பகம்

www.padippakam.com

# கழிப்பிட வசதிக்குப் போராட்டம்

ஜெயா அம்மையார் வருகிறாரென்றால் "ஒருநாள் கூத்துக்கு மீசை வைச்சான்" என்ற கதையாக பல லட்சங்களை வாரியிறைத்து குளு குளு வசதியுடன் கழிப்பிடங்களைக் கட்டுவதில் முனைப்புடன் திரியும் அதிகார வர்க்கம் மக்களுக்கு என்றால், "பணமில்லை; உத்தரவு வரவில்லை" என்ற நொண்டிச் சாக்குகளைக் கூறி முகத்தைத் திருப்பிக் கொள்ளும். கம்பம் நகருக்கு அருகே அமைந்துள்ள புதுப்பட்டி கிராம மக்களுக்கு புதர் மண்டிக் கிடக்கும் பொட்டல் காடுகள்தான் பல ஆண்டுகளாக பொதுக் கழிப்பிடம்; பெண்களுக்கோ பகல் பொழுதுகளில் இயற்கை உபாதையே பெரும் உபாதை. இந்நிலையில் அப்பகுதியில் இயங்கி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி மக்களின் அடிப்படை வசதிக்கான இக் கோரிக்கைக்காக போராட முன் வந்தது.

முதற் கட்டமாக அக்கிராம மக்கள் அனைவரிடமும் கையெழுத்துப் பெற்று அதிகாரிகளுக்கு மனு ஒன்று அனுப்பப்பட்டது. பின் கோரிக்கையினை வலியுறுத்தி சுவரெழுத்து, சுவரொட்டி இயக்கங்களோடு பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு பரவலாக விநியோகிக்கப்பட்டன; மிதிவண்டி பேரணியொன்றும் நடத்தப்பட்டது. ஆனால் அதிகாரிகளோ எருமை மாட்டில் மழை பெய்த கதையாக சொரணையிழந்து இருந்தனர்.



பின் அதிகாரிகளுக்குப் புரியும் மொழியில் போராட வேண்டும் என முடிவு செய்து, டிசம்பர் முதல் தேதிக்குள் கழிப்பிடத்தைக் கட்டித் தராவிட்டால், பேரூராட்சி அலுவலகத்தையே கழிப்பிடமாகப் பயன்படுத்துவோம் என அறிவித்தனர். இதன் பின் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த பொதுக் கழிப்பிடங்களை சுத்தம் செய்த அதிகாரிகள், முன்னணி தோழர்களை அழைத்து, "இன்னும் ஒரு மாதத்தில் கட்டித் தருகிறோம்; போராட்டத்தைக் கைவிடுங்கள்" எனச் சமரசம் பேசினர். "போராட வரும் மக்களிடம் இதனைக் கூறுங்கள்" எனத் தோழர்கள் பதிலளித்துத் திரும்பி விட்டனர்.

திட்டமிட்டபடி நடந்த போராட்டத்திற்கு ஆண்களும் பெண்களும் நூறுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். அதிகாரிகள் மக்களிடம் இன்னும் ஒரு மாதத்திற்குள் கழிப்பிடங்களைக் கட்டித் தருவதாக வாக்குறுதி தந்தனர். "வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால், அறிவிக்காமலேயே மீண்டும் போராட்டத்தைத் தொடருவோம்" என எச்சரித்து தோழர்கள் போராட்டத்தை முடித்துக் கொண்டனர்.

## புதிய கல்விக் கொள்கையை எதிர்த்து

திருச்சியை அடுத்துள்ள காட்டூரில் கடந்த நவம்பர் மாதம் புதிய கல்விக் கொள்கையை எதிர்த்தும் "அனைவருக்கும் கல்வி; அனைவருக்கும் வேலை" என்பதனை அடிப்படை உரிமையாக்கக் கோரியும் பு.மா.இ.மு. சார்பாக 4.11.94 அன்று பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இப் பொதுக்கூட்டத்திற்கு உருமு தனலெட்சுமி கல்லூரி மாணவர் .தோழர். பாலமுருகன் தலைமை தாங்கினார். தோழர் ஜெகதீசன் பு.மா.இ.மு. வின் நோக்கம், செயல்பாடுகள் குறித்து விளக்கிப் பேசினார். தோழர். வீரபாண்டியன் "அறிவொளி இயக்க மோசடிகள் குறித்தும்" இராசாமணி என்ற பெண் தோழர் "பெண்கள் கல்வி பயில தடைக்கற்களாக உள்ளவைக் குறித்தும்" சுட்டிக் காட்டினார்கள். கரந்தை தமிழ்க் கல்லூரி பேராசிரியர், பா. மதிவாணனின் பேச்சு புதிய கல்விக் கொள்கை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் கொள்ளையை அம்பலப்படுத்தியது. ம.க.இ.க. மாநில பொதுக் குழு உறுப்பினர் தோழர். காளியப்பன் "இட ஒதுக்கீடும், மாணவர்களின் எதிர்காலமும்" என்பது குறித்து சிறப்புரையாற்றினார். பொதுக்கூட்டத்திற்கு தரும் அனுமதியை கடைசி நேரத்தில் ரத்த செய்து விடும் காவல் துறையின் அராஜகத்திற்கு எதிராகத் தொடர்ச்சியாகப் போராடியதால் கடந்த 1 1/2 வருடத்திற்குப் பின் இப்பகுதியில் நடைபெற்ற முதல் பொதுக்கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.


## குடிதண்ணீர் கேட்டு ஆர்ப்பாட்டம்

தஞ்சைக்கு காவிரி போல, மதுரை மாவட்டத்தின் பயிர் செழிப்பிற்கு முதுகெலும்பாய் இருப்பது பெரியாறு. ஆனால், இந்த ஆறு உற்பத்தியாகும் லோயர் கேம்ப் எனுமிடத்தில் வாழும் மக்களோ குடிக்க தண்ணீர் இன்றி தவிக்கின்றனர். விசை இயந்திரம் பொருத்தி ஊர் முழுவதும் குடி தண்ணீர் தருவதற்கு "போதிய பணம் இல்லை" எனப் பஞ்சாயத்து அதிகாரிகள் பல ஆண்டு காலமாக கைவிரித்து வருகின்றனர். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆற்றுக்குச் செல்லும் பாதையை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டதால், ஊர் மக்கள் நடந்து சென்று தண்ணீர் எடுத்து வந்ததும் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது.

இப்படி குடி தண்ணீர் கூட வழங்காது வஞ்சித்து வரும் அதிகார வர்க்கத்தை அம்பலப்படுத்தி, வி.வி.மு சார்பில் கூடலூர் பஞ்சாயத்து அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டமொன்று 24.11.94 அன்று நடந்தது. "ஆற்றுக்குப் பாதை கொடு" "கட்டிய தொட்டியில் நீரை நிரப்பு" என்ற இரு கோரிக்கைகளை முன் வைத்து தோழர் பாண்டி தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் அதிகமான ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். தோழர் மோகன் சிறப்புரையாற்றினார். அதிகாரிகள் பத்து நாட்களில் குடி தண்ணீருக்கு ஏற்பாடு செய்வதாக வாக்குறுதி அளித்துள்ளனர். "வாக்குறுதி காற்றில் பறக்குமானால் மீண்டும் போராட்டம் தொடரும்" என அதிகாரிகளை தோழர்கள் எச்சரித்தனர்.


படிப்பகம்

www.padippakam.com



### சர்வமும் தாராளமயம்

மத்திய அரசு தனது தாராளமய மாக்கல் கொள்கையினைத் தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளோடு மட்டும் நிறுத்திக் கொண்டு விடவில்லை. சமூக சேவைத் துறையிலும் இதனைப் புகுத்தி விடத் திட்டமிட்டிருக்கிறது. இதன்படி ஏகாதிபத்திய நிறுவனங்கள் அரசின் தலையீடின்றி நேரடியாகவே தன்னார்வக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு ஒப்பந்தமிட்டுக் கொள்ளலாம். நிதியுதவி செய்யலாம். மேலும் திட்டம் சம்மந்தமான வரவு - செலவு கணக்குகளைக் கண்காணிப்பதிலும் அரசின் தலையீடின்றி, உதவி செய்யும் ஏகாதிபத்திய நிறுவனங்களே அப்பொறுப்பையும் எடுத்துக் கொள்ளலாம் எனவும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

### மாமியார் உடைத்தால் மண் குடம்.....

''ஜெயின் டி.வி.'', பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜே.கே. ஜெயின் என்பவருக்கு சொந்தமானது. சமீபத்தில் இத்தொலைக் காட்சி நிறுவனம் ஆபாச திரைப்படங்களை இன்னும் அதிக அளவில் ஒளிபரப்ப முடிவெடுத்துள்ளது. இந்த ஒளிபரப்புக்காக ஷாவாலஸ் மதுபான நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றும் செய்து கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஜெயின், ''இந்தியா பாலுறவு சம்மந்தமான தனது மூடக் கருத்துக்களைக் கைவிட வேண்டும்'' என்று தனது முடிவை நியாயப்படுத்தி பேட்டியும் அளித்துள்ளார். செயற்கைகோள் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்படும் மேற்கத்திய சீரழிவுகளை எதிர்த்துப் போராடி வருவதாக மார்தட்டும் பா.ஜ.க. தலைமையோ, தனது மந்தையிலுள்ள இந்த 'கருப்பு ஆட்டினை'ப் பற்றி இன்னும் வாய் திறக்கவில்லை.

### இலவசக் கல்வி உரிமை பறிப்பு

சீனாவில் கல்விக் கூடங்களில் பயிற்சிக் கட்டணம் செலுத்தி கல்வி பயிலுவதை அமுல்படுத்தத் திட்டம் தீட்டியுள்ளது, டெங் தலைமை. இதன்படி 1997 முதல் இளநிலை பட்டப்படிப்புக்குச் சேரும் மாணவர்கள் அனைவரும் கட்டாயமாகப் பயிற்சிக் கட்டணம் செலுத்த வேண்டும். இதனின் தொடக்கமாக நடப்பு கல்வியாண்டில் 40-க்கும் அதிகமான கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் நுழைவுத் தேர்வில் குறைவான மதிப்பெண்கள் எடுத்துள்ள மாணவர்கள் கட்டணம் கட்டி பயில வேண்டும் எனும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. இவற்றோடு கி.பி. 2000-ஆம் ஆண்டின் பின் பட்டப்படிப்பை முடிக்கும் மாணவர்கள், தங்கள் விருப்பம் போல் வேலையினைத் தேடிக் கொள்ளலாம் என்ற 'சலுகை'யினையும் வழங்கி, வேலை தரும் தனது பொறுப்பையும் தட்டி கழித்து விட்டது.

### அம்பலமான உ.பி. போலீசின் கொலை வெறி

கடந்த நவம்பர் மாதம் உ.பி. மாநிலத்திலுள்ள பிலிபட் சிறைச்சாலையில் இருந்து 6 தடா விசாரணை கைதிகள் தப்பிச் செல்ல முயன்றபொழுது சுட்டுக் கொல்லப்பட்டதாக செய்தி வெளிவந்தது. இச்சம்பவத்தை விசாரித்த டெல்லி சீக்கிய குருத்வாரா, ''தடா விசாரணை கைதிகளை சிறைச்சாலை போலீசார் தடிகளையும் இரும்புக் கம்பிகளையும் கொண்டு தாக்கி கொலை செய்துள்ளனர்'' எனத் தனது விசாரணை அறிக்கையில் உண்மையினை அம்பலப்படுத்தியுள்ளது. அச்சிறையில் தடா சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ள 27 விசாரணை கைதிகளிடம் போலீசார் குடித்து விட்டு வந்து போக்கிரித்தனமாக நடந்துள்ளனர். இதற்கு அக்கைதிகள் எதிர்ப்பு தெரிவிக்கவே அபாயச் சங்கை ஒலிக்க விட்டு இக்காட்டுமிராண்டித் தனத்தை நடத்தி முடித்துள்ளன போலீசு மிருகங்கள்.

### மெக்சிகோ மக்களின் போர்க் கோலம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில அரசாங்கம் அங்கு சட்ட விரோதமாகக் குடியேறி வேலை செய்து வரும் அந்நிய நாட்டினர்க்கு எந்த விதமான அரசு சலுகையும் கிடையாது எனச் சட்டமியற்றியுள்ளது. இத் தொழிலாளர்களுள் மிகப் பெரும்பாலோர் மெக்சிகோ நாட்டைச் சேர்ந்தவர்களாதலால் அந்நாட்டில் இச் சட்டத்திற்கு மிகக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அமெரிக்காவிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் பெருகி வருவதுடன், பல நுகர்வோர் சங்கங்கள் மக்களிடம் அமெரிக்க பொருட்களைப் புறக்கணிக்குமாறு பிரச்சாரம் செய்யத் தொடங்கியுள்ளன. தலைநகரில் ஆத்திரம் கொண்ட இளைஞர்கள் அமெரிக்க பன்னாட்டு நிறுவனமான மெக்டோனால்ட் விடுதியொன்றினைத் தாக்கி சேதப்படுத்தியுமுள்ளனர். ஆனால் அமெரிக்க அடிவருடியான அந்நாட்டு அதிபரோ மக்களின் எதிர்ப்பினை சகிப்புத் தன்மையற்ற செயல் என வசை பாடியுள்ளார்.

### உரிமைப் போரின் முன்னணியில் மாணவர்கள்

கடந்த டிசம்பர் மாதம் இந்தோனேஷிய தலைநகர் ஜகர்தாவில் ஆசிய - பசிபிக் நாடுகளின் பொருளாதாரக் கூட்டமைப்பு மாநாடு நடந்த பொழுது, கிழக்கு திமோரைச் சேர்ந்த 25 மாணவர்கள் தலைநகர் திலியிலுள்ள அமெரிக்க தூதரகத்தினுள் நுழைந்து, ''இந்தோனேஷியாவே கிழக்கு திமோரை விட்டு வெளியேறு! தலைவர்களை விடுதலை செய்!'' என்ற கோரிக்கைகளோடு ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். அம்மாணவர்கள் ஒரு வாரத்திற்கும் மேலாக தூதரகத்தை விட்டு வெளியேறாது போராடினர். தலைநகரமெங்கும் இதே கோரிக்கைகளோடு மாணவர்களும் இளைஞர்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதோடு போலீசாரோடு நேரடியாகவும் மோதினர். இந்தோனேஷியாவுடன் கை கோர்த்துக் கொண்டு மாநாட்டில் கலந்து கொள்ள வந்த கிளின்டனும் இப்பிரச்சினையை விவாதிக்க மறுத்து விட்டார். போராடிய மாணவர்களைப் பத்திரிகையாளர்கள் சந்தித்து விடாமலும் தடுத்து விட்டது சுகர்டோ நிர்வாகம்.

### டங்கல் திட்டம்: ஆதாயம் யாருக்கு?


''காட்'' அமைப்பு சமீபத்தில் வெளியிட்டுள்ள பொருளாதார புள்ளி விவர அறிக்கையொன்றில், ''டங்கல் திட்டம் காரணமாக உலக வர்த்தகம் 2005-ம் ஆண்டில் 15,30,000 கோடி ரூபாயாக உயரும்; இதில் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய பொருளாதாரக் குழுமத்தையும் உள்ளிட்ட பதினேழு நாடுகளின் பங்கு மட்டும் 9,39,000 கோடி ரூபாய். இவ்வமைப்பில் உறுப்பு நாடுகளாக இருக்கும் பிற 110 நாடுகளின் மொத்த வர்த்தகம் 3,48,000 கோடி ரூபாய் தான்'' எனக் குறிப்பிட்டுள்ளது. சராசரியாகக் கணக்கிடும் பொழுது நமது நாட்டின் பங்கோ கிட்டத்தட்ட 3000 கோடி ரூபாய் தான். பின் எதற்கு டங்கலை ஆதரித்து இந்த வெற்றுக் கூப்பாடு?



Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd, Madras - 600 024. Editor:R.SHANMUGARAJ

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 4246/85 Regd. No TN/MS(S) 622




படிப்பகம்